
www.padippakam.com

கோவை கலவரம்: இந்து முன்னணி - போலீசு கூட்டு

# புதிய ஜனநாயகம்




## பரம்பரை ஆட்சியின் பாதந்தாங்கிகள்

படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம்.-மின் மனு தர்ம ஆட்சி

அவர்கள் ரத்தமும் சதையும் உணர்வும் ஆற்றலும் கொண்ட மனிதர்கள். மூங்கில் தட்டுகள், கூடைகள் செய்து பிழைக்கும் உழைப்பாளிகள். ஆனால் மனுநீதியின் படி அவர்கள் இழிகுலத்தவர்கள், தீண்டத்தகாதவர்கள். அவர்கள் மேல் சாதியினரின் வீடுகளுக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது. அவர்களது கிணற்றில் நீரிறைக்க முடியாது. பள்ளிக் கூடங்களில் மேல்சாதிக் குழந்தைகளுடன் ஒன்றாக அமர்ந்து கல்வி கற்க முடியாது.

—இது எங்கோ தமிழகத்தின் ஒரு குக்கிராமத்தில் நடக்கும் கொடுமை அல்ல; அல்லது சாதிவெறி தலைவிரித்தாடும் உ.பி., பீகார் மாநிலங்களில் தொடரும் அவலம் அல்ல.

சாதி - தீண்டாமைக்கு எதிராக நிற்கும் புரட்சியாளர்களாகக் காட்டிக் கொண்டு, 20 ஆண்டுகளாக மே. வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் தான் இக்கொடுமை தொடர்கிறது.

மே. வங்கத்தின் ஜார்கிராம் வட்டத்திலுள்ளது ரோகினி என்ற கிராமம். இக்கிராமத்தில் தோம், ஹன்ரி எனும் இரு தாழ்த்தப்பட்ட சாதியினர் மீது இன்னமும் தீண்டாமைக் கொடுமை தொடர்கிறது. இச்சாதியினர் பிராமணர், வைத்யா, கயஸ்தா மற்றும் பிற உயர் சாதியினரின் வீடுகளுக்குள் காலடிகூட வைக்க முடியாது. அறியாமல் அவ்வாறு கால்பட்டு விட்டால், அவ்விடத்தைக் கழுவி, சாணியிட்டு மெழுகி மேல் சாதியினர் தீட்டுக் கழிப்பர். மேல் சாதியினரின் கிணறு, குழாய்களில் தோம், ஹன்ரி சாதியினர் தண்ணீர் எடுக்கக் கூடாது என்ற எழுதப்படாத மனுநீதிச் சட்டம் இன்னமும் இக்கிராமத்தில் நீடிக்கிறது.

மேல் சாதியினர் தமது வீடுகளில் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சி, விழாக்களின் போது எஞ்சிய உணவை குப்பைத் தொட்டி அருகே தான் தாழ்த்தப்பட்டோருக்கு வைப்பர். ''நாங்களும் நாய்களும் ஒன்றாக உணவைத் தின்னும் கேவலம்'' என்று வேதனையுடன் கூறுகிறார் ஜலதர் படார் என்ற தாழ்த்தப்பட்டவர். ''எங்களுக்குக் குடிக்க தண்ணீர் கேட்டால் கழிப்பறை குவளைகளில்தான் தருவார்கள்'' என்றும் குமுறுகிறார், அவர்.

இக்கிராமத்தில் தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. ஆனாலும் தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தைகள் படிக்க முடியாதபடி, ஆதிக்க சாதியினர் திட்டமிட்டே அக்குழந்தைகளை விரட்டியடிக்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தைகள் பள்ளிக்கு வரும் போது தனி இருக்கைப் பலகையுடன் வரவேண்டும் என்று மேல்சாதி ஆசிரியர்கள் நிர்பந்திக்கின்றனர். தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தைகள் மேல்சாதிக் குழந்தைகளைத் தொட்டு விடாமல் தனியே அமர்த்தப்படுகின்றனர். இதுதவிர கல்விக் கட்டணம், புத்தகங்கள் வாங்க என்று ரூ. 500 தருமாறு ஆசிரியர்கள் அடாவடித்தனம் செய்து, தாழ்த்தப்பட்ட குழந்தைகளைப் பள்ளியிலிருந்து விரட்டியடிக்கின்றனர்.

1950-வரை தாழ்த்தப்பட்ட சாதியினர் கழுத்திலே மணி அணிந்து கொண்டுதான் தெருவில் நடக்க வேண்டும். இந்த எச்சரிக்கை ஒலியைக் கேட்டு மேல் சாதியினர் தமது வீட்டிற்குள் சென்று விடுவர். தாழ்த்தப்பட்டோரைப் பார்த்தாலே தீட்டு என்ற நிலைமை தற்போது இல்லையென்றாலும், இன்னமும் தீண்டாமையும் அவமதிப்பும் அவமானங்களும் நீடிக்கவே செய்கின்றன.

ரோகினி கிராமம் ஏதோ விதிவிலக்கான நிகழ்ச்சி அல்ல. அண்மையில் மித்னாபூர் மாவட்டம் கோபிநாத்பூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் குளங்களில் நீர் அள்ளவும், வழிபாடு நடத்தவும், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் தடைவிதிக்கப்பட்டு, மேல் சாதியினரின் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகியுள்ளனர். இக்கொடுமை ஆதிக்க சாதி வெறி பிடித்த பண்ணையாளர்களின் கட்டளைப்படி நடக்கவில்லை. மாறாக, பஞ்சாயத்து ஒன்றியத்தின் கட்டளைப்படிதான் நடக்கிறது. பாதிக்கப்பட்ட 40-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் 'இடதுசாரி' அரசாங்கத்திடம் முறையிட்டுப் போராடியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் பஞ்சாயத்து அமைச்சராக இருப்பவர் 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த டாக்டர் சூரியகாந்த் மித்ரா! கோபிநாத்பூர் கிராமம் அவரது சட்டமன்றத் தொகுதியில் தான் உள்ளது.

ரோகினி, கோபிநாத்பூர் போலவே இன்னும் பல கிராமங்களில் தொடரும் தீண்டாமை, சாதி ஆதிக்கக் கொடுமைகள் பற்றி வங்க நாளேடுகள் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகின்றன. இத்தனைக்கும் பிறகும் தாங்கள் ஆளும் மே.வங்கம், திரிபுரா, கேரளா ஆகிய மாநிலங்களில் சாதி - தீண்டாமைக் கொடுமைகள் அறவே கிடையாது என்று 'மார்க்சிஸ்டு'கள் கூசாமல் புளுகி வருகின்றனர்.

அக்கட்சியின் தத்துவ மாத இதழான 'மார்க்சிஸ்ட்' நவம்பர் இதழில், ''அங்கு சாதியக் கொடுமை இல்லை. தீண்டாமைக் கொடுமை இல்லை. தொடக்கூடாமை இல்லை. பொதுக் குளத்தில் குளிக்க, பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தடை இல்லை'' என்று அவ்விதழின் ஆசிரியரான பி.ஆர். பரமேஸ்வரன், கேழ்வரகில் நெய் வடிந்த கதையை அளக்கிறார். கட்சி அணிகளையும் வாசகர்களையும் காதில் பூ வைத்தவர்களாகக் கருதிக் கொண்டு, சகட்டு மேனிக்கு கதையளக்கும் அயோக்கியத்தனம்தான் இது.

ரோகினியும், கோபிநாத்பூரும் ஏதோ விதிவிலக்கான ஓரிரு சம்பவங்கள் என்று இப்போலிக் கம்யூனிஸ்டுகள் பூசி மெழுகிவிட முடியாது. தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு மைய அரசு பரிந்துரைத்துள்ள மிகச் சாதாரண சீர்திருத்தங்கள் கூட மே.வங்கத்தில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினருக்கான தேசிய கமிசன், நலவாழ்வுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இச்சாதி

தொடர்ச்சி 22-ஆம் பக்கம்

**தீண்டாமைக் கொடுமையில் ரோகினி கிராம தாழ்த்தப்பட்டோர்: 'மார்க்சிஸ்ட்' ஆட்சியா? மனுநீதி ஆட்சியா?**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 13

**இதழ்: 1-4**

16 நவ.'97 - 15 சன.'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# அரசியல் நெருக்கடியை தேர்தல் தீர்க்காது

பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் நிலையற்ற - அராஜக அரசியலுக்கு இட்டுச் செல்வது இயல்பானது, தர்க்கரீதியிலானதுதான்; சாதி, மத, மொழி, இன, வர்க்க ரீதியில் பலவாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்தில் இந்த நிலை தவிர்க்கவே முடியாதது. கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் எந்தவொரு அரசியல் கட்சிக்கோ, கூட்டணிக்கோ நாட்டு மக்கள் ஆளும் உரிமை கொடுக்கவில்லை. இருந்தாலும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் பேராசையுடன் நாய்ச் சண்டையில் ஈடுபடாத அரசியல் கட்சிகளே இல்லை என்று சொல்லலாம். அற்ப நாட்களுக்கு மந்திரிசபை அமைத்து, ஒருமுறை அல்ல, இருமுறை மடியில் பணத்தைக் கட்டிக் கொண்டு அலைந்தும், போதிய எம்.பி.க்களை விலைக்கு வாங்க முடியாமல் போனதால், பாரதீய ஜனதா செய்த எத்தனிப்புகள் பலிக்கவில்லை. தேர்தலையும் மக்களையும் சந்திப்பதில் காங்கிரசுக்குள்ள பயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாடாளுமன்றத்தில் பத்தில் ஒரு பங்கு — கடந்த ஆறு மாதங்களாக இருபதில் ஒரு பங்கு — கூடப் பலம் பெற்றிராத ஒரு கட்சிக்காரரைப் பிரதமராகக் கொண்ட கூட்டணிகளின் கூட்டணியாகிய ஐக்கிய முன்னணி ஒன்றரை ஆண்டு ஆட்சி நடத்தியது. ஒரே ஒரு எம்.பி.யைப் பெற்றிருந்த கட்சிகூட ''கேபினட்'' மந்திரி பதவி பெற்றது. மூப்பனார் கூடப் பிரதமராகலாம் என்ற நிலை எழுந்தது. அரசில் பங்கேற்காமலேயே போலி மார்க்சிஸ்ட் கட்சி அதிகாரம் செலுத்தியது. வெளியில் இருந்து ஆதரவு என்கிற பெயரில் காங்கிரசு ஐ.மு. அரசை உருட்டி மிரட்ட முடிந்தது. அதிகாரத்திற்கு வெளியே சில ஆண்டுகள் கூட நீடித்திருக்க முடியாத காங்கிரசு முதலில் ஐ.மு. ஆட்சியைக் கவிழ்த்து விடுவதாக மிரட்டி அதிகாரத்தில் பங்கு போட முயன்றது. முடியாத நிலையில் சில ஐ.மு. கட்சிகளுக்கு விலைபேசி தானே ஆட்சி அமைக்க எத்தணித்துத் தோற்றது.

''நித்திய கண்டம் பூரண ஆயுசு'' என்றிருந்த தேவே கவுடா, பிறகு குஜ்ரால் தலைமையிலான மந்திரிசபைகள் பதவியைப் பாதுகாத்துக் கொள்வதே ஒரே முக்கிய காரியமாகக் கருதி ஆட்சி நடத்தின. இந்த நிலையில் சர்வகட்சி ஆதரவு பெற்ற உலகமயம், தாராளமயம், தனியார்மயம் அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கை பெருந்தோல்வி கண்டது. எனவே நிலைத்த ஆட்சியே அனைத்துக் கட்சி முழக்கமாகக் கொண்டு தேர்தலைச் சந்திக்கிறார்கள். நாடாளுமன்றத் தொங்குநிலை, அராஜகம், நிலையற்ற ஆட்சி, அரசியல் நெருக்கடி ஆகியவை தேர்தலுக்குப் பின்னும் நீடிக்கும் என்றே நிலைமைகளும் கருத்துக் கணிப்புகளும் காட்டுகின்றன. பெரிய அரசியல் கட்சிகள் பல்வேறு மாநிலங்களிலும் பிளவுபட்டுச் சிதறுகின்றன. புற்றீசல்களைப் போல புதுப்புது கட்சிகள் துவங்கப்படுகின்றன. எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் மாநில, பிராந்தியக் கட்சிகளின் உறவை நாடி ''தேசிய''க் கட்சிகள் அலைகின்றன.

கரைபடியாத தலைவர்களையும், கட்டுக்கோப்பான அணிகளையும் கொண்டிருப்பதாகப் பீற்றிக் கொள்ளும் பாரதீய ஜனதாவும் திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்று மோசடி செய்து அம்பலமாகிப்போன ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வும் கூட்டணி சேர்ந்துள்ளன. துக்ளக் ''சோ''வை ஆலோசகராக்வும், சு.சாமியைக் கூட்டாளியாகவும் கொண்ட இந்த அணி உண்மையில் ஒரு பார்ப்பனக் கூட்டு. இந்துமத வெறியை ஆழமாக வேரூரன்றச் செய்ய பா.ஜ.க.வும், அதன் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஊழல் வழக்குகளில் இருந்து தப்பிக் கொள்ள ஜெயாவும் இந்த வழியை தேர்ந்தெடுத்துள்ளனர். இந்தத் தேர்தலில் பா.ஜ.க. அணியின் எண்ணிக்கை கூடினாலும் ஆட்சியைப் பிடிப்பது சந்தேகமே.

தற்போது களத்தில் நிற்கும் மூன்று கூட்டணிகளில் எதுவுமே பெரும்பான்மை பலம் பெறுவது அரிதே! எந்தவொரு கூட்டணி ஆட்சி அமைத்தாலும் அதற்கு வெளியிலிருந்து ஆதரவு தேவை; அப்படி ஆதரவு தரும் கட்சிகளும், பிற குட்டிக் கட்சிகளும் உருட்டி மிரட்ட இடமுண்டு. எப்படிப் போனாலும் லல்லு, முலயம், கன்ஷிராம் போன்ற அரசியல் பிரபுக்களே நாட்டின் அரசியல் விதியைத் தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்; இவர்களேகூட பிரதமர்களாகி சில காலம் ஆட்சி நடத்தவும் கூடும். ஆகவே, அரசியலில் நிலைத்த தன்மை என்பது கானல் நீராகவே இருக்கும். இந்நிலை தொடருவது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் சின்னாபின்னப்படுத்தி விடும் என்கிறார்கள். இந்நிலை அரசியலில் நிலைத்த தன்மை வேண்டும் என்பதற்காக, இராணுவ சர்வாதிகாரம் அல்லது பாசிசத்தை நிறுவுவதற்கான சமூக ஆதரவைத் திரட்டித் தரும்.

உலகமயமாக்கம், தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கையில், நாட்டின் ஆளும் வர்க்கங்களுக்குத் தேவையானது அரசியலில் நிலைத்த தன்மைதான். இது ஏதோ நாட்டு மக்கள் அனைவருக்குமான, மிகமிக அவசியமான ஒரே பிரச்சினையாக முன்னிறுத்தப்படுகிறது. ஆனால் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் அரசியலில் நிலைத்த தன்மை என்பது தரப்போவதெல்லாம் மேலும் கடுமையான சுரண்டலும் ஒடுக்குமுறையும்தான். ஆகவே இந்த நாடாளுமன்ற அரசியல் அமைப்பு முறைக்கு உள்ளேயே வைக்கப்படும் தீர்வுகளும் முழக்கங்களும் நிராகரிக்கப்படவேண்டும். மாற்றாக புதிய, புரட்சிகர மக்கள் ஜனநாயகத்தை நிறுவிடப் போராடவேண்டும்.

www.padippakam.com

# மூப்பனாரின் தமிழினத் துரோகமும் கருணாநிதியின் கோழைத்தனமும்

"தமிழினத் துரோகிகள்" என்று முத்திரை குத்தி, வெறுத்து ஒதுக்கப் பட வேண்டிய - புறக் கணிக்கப்பட வேண் டிய கருப்பையா மூப் பனாரின் தமிழ் மாநி லக் காங்கிரசும், தமி ழினக் காவலர்கள் எனத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் கருணாநிதியின் தி.மு.க.வும் அவசர அவசரமாக அடுத்த தேர்தலுக்குரிய கூட்டணியைப் புதுப்பித்துக் கொண்டுவிட்டன. தன் மானம் பேசும் மூப்பனாரும், சுயமரியாதை பேசும் கருணாநிதியும் அந்த இரண்டு யோக்கியதையும் இல்லாதவர்கள் எனக் காட்டிக் கொண்டு அரசியல் ஆதாயத்துக்காகக் கூட்டுச் சேர்ந்துள்ளனர். ஐக்கிய முன்னணி ஆட்சியை காங்கிரசு கவிழ்த்த போது, "முதுகில் குத்தும் காங்கிரசின் புத்தியை அது காட்டி விட்டது" என்று கருணா நிதி சாடினார். ஆனால் அதே காங்கிரசு புத்தியோடுதான் மூப்பனார் கும்பல் இருக்கிறது என்பது கருணாநிதிக்குத் தெரியாதா?

ராஜீவ் - சு.சாமி - ஜெயா தூண்டுதலால் தி.மு.க. ஆட்சியைக் கலைத்து, "கருணாநிதி - புலிகள் கூட்டு தேசத் துரோகம்" என்றும், "புலிகளுடன் சேர்ந்து கருணாநிதிதான் கொன்றார்" என்றும் சுவ ரொட்டிகள் போட்டு அவதூறு செய்த போது, கல்லுளிமங்கனாக இருந்து கொண்டார். வாழப்பாடியும் சிதம்பரமும் இதே அவதூறுக ளைப் பெருங்கூச்சலாகப் போட்ட போது அதை ரசித்தாரே தவிர, மறுத்து ஒரு சொல்லும் பேசவில்லை. பாசிச ஜெயா கும்பல் ஈழ, இந்தியத் தமிழர்களை அடக்கி ஒடுக்கிய போதும்; இலஞ்ச - ஊழலால் தமிழ்நாட்டையே சூறையாடிய போதும் மூப்பனார் வாய் திறக்க வில்லை. ஜெயா கும்பல் முற்றாக அம்பலப்பட்டு, தனிமைப்பட்டுப் போன பிறகுதான், அந்தக் குதிரையை நம்பி இனி மேலும் தேர்தல் பந்தயத்தில் குதிக்க முடியாத நிலையில், காங்கிரசில் இருந்து விலகுவ தாக நாடகமாடி, த.மா.கா. என்ற தனிக்கட்சி துவங்கியது, மூப்பனார் கும்பல்.

இருந்தாலும், ஆங்கிலேயன் ஆட்சியில் ஒரு எட்டப்பனைப் போல, சோனியா தர்பாரில் ஒரு குறுநில மன்னனுக்குரிய அந்தஸ்து டன் மூப்பனார் நீடிக்கிறார். அதனால்தான், ஐக்கிய முன்னணி அரசில் காங்கிரசைச் சேர்க்கவேண்டும் என்றும், தானே பேரம்பேசி முடிக்கத் தயார் என்றும் ஓராண்டுக்கு மேலாகப் பேசி வருகிறார். ஐக்கிய முன்னணியை உடைத்து, ஒரு பிரிவினரைத் தம்பக்கம் இழுத்து ஆட்சி அமைக்கும் முயற்சியில் தேவே கவுடா ஆட்சியைக் கவிழ்த்தபோது, அந்தச் சதியில் ஊக்கமுடன் ஈடுபட்டார், மூப்பனார். அதன்பிறகு தன்னையே பிரதமராக்கும் முயற்சியில் சாதி வாரியாக, மதவாரியா கத் தனது கட்சிப் பிரமுகர்களை ஏவிப் பிரச்சாரம் செய்தார். ஆனால், மூப்பனார் காங்கிரசின் கைக்கூலிதான் என்று அடையாளங் காணப் பட்டு, ஐ.மு.வில் முன்மொழியக் கூட ஆதரவில்லாத நிலையில், அவரது பேராசை நிராசையானது. 'அதற்கும் கருணாநிதி கெடுத்து விட்டார் என ஆத்திரத்தைக் கொட்டினார். தனக்குப் பிரதமர் பதவி கிடைக்காதபோது, தன் கட்சிக்காரர்களுக்கும் பதவி கூடாது என வக்கிரத்துடன் ஐ.மு. அரசில் தன் கட்சிக்காரர்களைப் பங்கேற்க விடா மல் தடுத்தார். ஆனால் அதிகாரத்தில் இருந்தால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் எனக் கருதி மீண்டும் அரசில் பங்கேற்றாலும், எப்போதும் ஆட்சி கவிழும் வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார்.

ஜெயின் கமிசன் இடைக்கால அறிக்கை வந்த போது தனது அரசியல் சதி நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு, அதை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு, பிற இராஜீவ் - சோனியா விசுவாசிகளைப் போலவே மூப்பனாரும் முயன்றார் என்பதுதான் உண்மை. ஐ.மு. அரசில் இருந்து தி.மு.க.வை நீக்க வேண்டும் என்று காங்கிரசின் நிபந்தனை ஐ.மு.வில் விவாதத்திற்கு வந்த போதும், காங்கிரசின் நிபந்தனையை ஐக்கிய முன்னணி நிராக ரித்த போதும் மூப்பனார் கும்பல் வாய்திறக்கவே இல்லை. ஆனால், ஐ.மு. தனது முடிவில் உறுதியாக நின்றதையடுத்து, தி.மு.க. - பாரதீய ஜனதா அல்லாத அரசு அமைக்கும் முயற்சியை காங்கிரசு மேற்கொண்டபோது, தானே பிரதமராகும் வாய்ப்பு இருப்பதாக எண்ணி அதற்கு மறைமுக ஆதரவ ளித்தார்.

ஐ.மு.வுக்கு தனது ஆதரவை விலக்கிக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்து, காங்கிரசு தானே ஆட்சி அமைக்கும் உரிமை கோரி, ஐ.மு.வில் சில கட்சிகளின் ஆதரவை நாடியது. அப்போது முலயம் சிங், லல்லு பிரசாத், அசாம் கன பரிசத் ஆகியோரது ஆதரவைத் திரட்டுவதில் காங்கிரசுக்குத் துணை செய் தார்; தனது இடதுகரமான பீட்டர் அல்போன்சை விட்டு, தேர்தலைத் தவிர்க்க தி.மு.க.வைக் கைகழுவவும் தயார் என "ஸ்டார் ப்ளஸ்" என்ற தொலைக்காட்சிக்கு பேட்டிக் கொடுக்கச் செய்து ஆழம் பார்த் தார். இறுதியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து விடும்படி அரசுத் தலைவருக்கு ஐ.மு. கூட்டாகக் கடிதம் கொடுப்பதாக முடிவெடுத்த போது அதிலிருந்து விலகி, தான் தனியே கடிதம் கொடுப்பதென்று மூப்பனார் கும்பல் முடிவு செய்தது. அப்போதும் காங்கிரசுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பது என்ற நப்பாசையை மூப்பனார் கும்பல் விடவில்லை. முலயம் சிங்கைத் தவிர பிற ஐ.மு. கட்சிகள் உறுதியாக நின்றுவிட்டதால், அந்த நப்பாசையும் பலிக்கவில்லை.

இந்த அரசியல் நெருக்கடி காலம் முழுக்க மூப்பனார் கும்பல் மிக மோசமான பித்தலாட்ட நாடகமாடியது. ஒருபுறம் கல்லுளிமங்க னைப் போல மௌனம் சாதித்தது; மறுபுறம் நாள் தவறாமல் சோனியா வைக் கண்டு விசுவாசத்தைத் தெரிவித்து, உத்திரவு பெற்றுச் செயல் பட்டது. ஜெயின் அறிக்கையை வைத்து ஆதாயம் அடைய எண்ணி காங்கிரசோடு சேர்ந்து தலை குப்புற வீழ்ந்த நிலையில், வரும் தேர்த லில் ஜெயாவுடன் கூட்டுச் சேர்ந்தாலோ, தனித்து நின்றாலோ மண் ணைக் கவ்வுவது நிச்சயம் என்ற நிலையில், "தி.மு.க.வுடனான கூட் டணி முறிந்ததாக ஒரு போதும் சொல்லவில்லை. மறுபரிசீலனை செய்வதாக அறிவித்த தி.மு.க.தான் முடிவு செய்ய வேண்டும். நான் காங்கிரசுக்காரன் இல்லை. நேரு குடும்பத்தின் மீது பற்று உள்ளது, அவ்வளவுதான்" என்றார் மூப்பனார். இதற்காகவே காத்திருந்தவ ரைப் போல கருணாநிதியும், "த.மா.கா. - தி.மு.க. கூட்டணி தொட ரும்" என்று அறிவித்து விட்டார்.

ஜெயின் கமிசன் பற்றி மூப்பனார் கருத்தறிய அனைத்து வானொளி - பத்திரிகைகள் முயன்றபோதும் வாய் திறக்க மறுத்து வந்த மூப்பனார், கடந்த மாதம் டெல்லிப் பத்திரிகை ஒன்றிடம் கருத் துச் சொன்னதாக, ஏதோ ஒரு சந்தேகத்திற்குரிய இதழைக் காட்டினார். "புலிகளிடம் தி.மு.க.வுக்கு அனுதாபம் இருக்கலாம்; அதற்காக ராஜீவ் கொலையில் தி.மு.க. சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூற முடியாது" என்று சொன்னாராம். இதுவே ஒரு போலி ஆதாரம்தான் என்று நம்ப இடமுண்டு; இதையோ, தி.மு.க.வை நீக்கும்படி காங்கிரசு கோரி யதை எதிர்த்ததாகவோ மூப்பனார் துதிபாடும் ஜூ.வி., தமிழன் எக்ஸ் பிரஸ் முதலிய பார்ப்பன ஏடுகள் கூட எழுதவில்லை. மூப்பனார் வில்லன் தோற்றமெடுக்கிறார் என்றுதான் எழுதின.

இந்தத் தமிழினத் துரோகிகளும் தி.மு.க.வும் ஏன் கூட்டணி சேர்ந்து கொள்ள வேண்டும்? கருணாநிதியின் இயல்பான கோழைத்த னம்; பெருமுதலாளி ஆகிவிட்டதால் சொத்துக்களைக் காத்துக் கொள் ளவேண்டும்; தன் வாரிசு ஸ்டாலினிடம் பாதிப்பின்றி ஆட்சியை ஒப்படைக்க வேண்டும். அதற்காக ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வித சமரசத்துக்கும் தயாராக உள்ளார். இந்துமதவெறி பார்ப்பன - பனியா பாசிச பாரதீய ஜனதாவுடன் கூட கூட்டு வைக்கவும் தயார். இதற்காக மருமகன் மாறனை அவர்களுடன் உறவாடவும் அனுமதிக் கிறார். ஜெயலலிதா கும்பல் தவிர, இது திராவிட இயக்கத்தின் இன் னொரு பரிணாமம் வளர்ச்சிதான்.

• மாதவன்



படிப்பகம்

www.padippakam.com

# ‘ஜெயின் கமிசன் தீர்ப்பு’ நிராசையானது காங்கிரசின் பேராசை

இராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரிக்கும் ஜெயின் கமிசன் அமைக்கப்பட்ட போதோ, அது விசாரணை நடத்தி வந்த ஆறாண்டு காலத்திலோ, இந்திய அரசியலில் இவ்வளவு தூரம் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை — சோனியா காந்தியும் அவரைச் சுற்றியுள்ள ஒரு சிறு கும்பலையும் தவிர.

இராஜீவ் கொலையைத் தொடர்ந்து, உடனடியாகவே மத்தியப் புலனாய்வுக் கழகத்தின் (சி.பி.ஐ.) சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, அது மூன்று மாதங்களுக்குள்ளாகவே முக்கிய விசாரணையை முடித்து விட்டது. முக்கியக் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட ஈழ விடுதலைப் புலிகளில் சிலர், சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் சிக்கும் தருணத்தில் தற்கொலை செய்து கொண்டனர் அல்லது கொல்லப்பட்டனர். பிரதான குற்றவாளிகளாகக் கருதப்படும் புலிகளின் தளபதி பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா ஆகிய மூவரைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் வேறு 41 பேரைக் கைது செய்து கொலைக் குற்றஞ்சாட்டி, சென்னை - பூந்தமல்லி சிறப்புச் சிறையிலடைத்து, அங்கேயே இரகசிய விசாரணை நடத்தி முடிக்கப்பட்டு, இந்த மாத இறுதியில் தீர்ப்பும் வர உள்ளது.

### ஜெயின் கமிசன்: அரசியல் சதியில் அவதாரம் எடுத்தது

பாசிச இராஜீவின் சாவு விசாரணையை அவ்வளவு எளிமையாக முடித்துக் கொள்வதில் காங்கிரசு கயவாளிகளுக்குச் சம்மதமில்லை. தங்கள் தலைவனின் கொலைக்குக் காரணம் தகுந்த பாதுகாப்பில்லை, அதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று குதியாட்டம் போட்டார்கள். அது பற்றி விசாரிப்பதற்கு உச்சநீதி மன்ற நீதிபதி வர்மா தலைமையில் கமிசன் அமைக்கப்பட்டது. அதுவும் போதாதென, இராஜீவ் கொலைக்குப் பின்னணியில் ''உலக மகா சதி'' இருப்பதாகக் கூச்சல் போட்டு அமளி துமளி செய்தனர். அதையும் விசாரிக்கும்படி வர்மாவிடம் கேட்டுக் கொண்ட போது, அவர் மறுத்துவிட்டார். வேறு வழியின்றி, டெல்லி உயர் நீதி மன்ற நீதிபதியான ஜெயின் தலைமையில் கமிசன் அமைக்கப்பட்டது.

ஆனால் எதையெதை ஜெயின் விசாரிப்பது என்பதில் தெளிவில்லாத காங்கிரசுக் கயவாளிகள், வர்மா கமிசன் விசாரணையில் விடுபட்டுப் போனதெல்லாம் எடுத்துக் கொள்ளும்படி ''வானளாவிய அதிகாரம்'' தந்தனர். வெளியில் இப்படி இராஜீவ் கொலை விசாரணையில் அதீத அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொண்டாலும், ஜெயின் கமிசன் - விசாரணையை ஒரு ''காமெடி'' கேலிக் கூத்தாகவே காங்கிரசு அரசு நடத்தியது. ஜெயின் முதல் விசாரணை அலுவலக ஊழியர் வரை யாருமே விசாரணையில் பாரிய அக்கறை காட்டவே இல்லை. கமிசனுக்கு என்று ஒரு அலுவலக அறை, எழுத்தாளர், தட்டு முட்டுச் சாமான்கள் - மேசை, நாற்காலி, தட்டச்சு எந்திரம், எழுது பொருட்கள், விசாரணை அதிகாரிகள், வழக்குரைஞர்கள் ஆகிய எதுவுமே ஆறு மாதங்களுக்குத் தரப்படவே இல்லை.

வர்மா கமிசன் - ஜெயின் கமிசன் ஆகிய இரண்டுக்குமான அதிகார வரம்புகளை வரையறுப்பதற்கே அடுத்த ஆறுமாதங்களாகின. அந்தக் கட்டத்தில் ஜெயின் கமிசன் விசாரணையே தேவையில்லை, கலைத்து விடலாம் என்று காங்கிரசும், அதன் அரசுமே பரிந்துரைத்தன. இதற்கிடையே வர்மா கமிசனை நியமித்து, அதன் விசாரணை வரம்புகள் குறித்து ஆணையிட்ட கோப்பே காணாமல் போய் விட்டது! ஜெயின் கமிசனைக் கலைத்து விடும் பரிந்துரையை நிராகரித்து விசாரணை துவங்கும்போது, காங்கிரசு கயவாளிகள் ஒரு பினாமி வக்கீலை வைத்து, ஜெயின் கமிசனைக் கலைத்து விடுமாறு வழக்குப் போட்டு இடைக்காலத் தடை உத்திரவும் பெற்றனர். இந்த வழக்கு முடிவதற்கே ஏறக்குறைய ஓராண்டானது.

இப்படியாக இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் காலங்கடத்தி விட்டு விசாரணையைத் தொடங்கிய ஜெயின் கமிசன் காங்கிரசின் கைக் கூலியாகவே செயல்பட்டது. இராஜீவ் கொலையில் பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து ஏற்கனவே வர்மா கமிசன் விசாரித்து முடித்திருந்தது. அதன் விசாரணை வரம்புக்குள் புகுந்து, காங்கிரசுக்காரார்கள் மீதான வர்மா கமிசன் குற்றச்சாட்டுகளை மூடிமறைக்கும் விதத்திலும், காங்கிரசின் அரசியல் எதிரியான வி.பி. சிங் மீது அவதூறு பொழியவும் செய்தது.

இராஜீவ் கொலைக்கு இட்டுச் சென்ற பின்னணி, சூழல்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஜெயின் கமிசன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் போர் மூண்ட ஆகஸ்டு 1987-ஐ விசாரணைக்கான துவக்க ஆண்டாகக் கொண்டது. ஈழத்தமிழர் - சிங்கள இராணுவப் போர் மூண்டு, ஈழ அகதிகள் தமிழ்நாட்டுக்கு வரத் துவங்கிய 1983 ஜூலை முதல் விசாரிக்க வேண்டுமென்ற தி.மு.க.வின் கோரிக்கையை வேண்டுமென்றே, திட்டமிட்டு, உள் நோக்கத்துடன் ஜெயின் கமிசன் நிராகரித்தது. அப்படிச் செய்வது புலிகள் உட்பட ஈழக் குழுக்களுக்கு இந்திரா, இராஜீவ் மற்றும் எம்.ஜி.ஆர். அரசுகள் ஆயுதப் பயிற்சி, ஆயுத - தளவாடங்கள், நிதி உதவி செய்ததோடு, தெற்கு ஆசியாவில் விரிவாக்க, பிராந்திய ஆதிக்க நோக்கத்தோடு இராணுவ, உளவு நிறுவன சதிவேலைகளில் ஈடுபட்டதை அம்பலப்படுத்திவிடும் என்று அஞ்சியது. இதை மூடி மறைத்து, தமிழ் நாட்டில் புலிகள் செல்வாக்குப் பெற்று இராஜீவைக் கொலை செய்ததற்கு தி.மு.க. உடந்தையாக இருந்ததாகப் பழிபோடுவது என்பதை விசாரணை துவங்கும் முன்பே ஜெயின் கமிசன் முடிவு செய்துவிட்டது.

இதை உணர்ந்துதான் ஜெயின் கமிசன் விசாரணையில் பங்கேற்பதில்லை என்று தி.மு.க. - அதைப் புறக்கணித்தது. மத்தியில் காங்கிரசு, மாநிலத்தில் ஜெயா அரசுகள் வீழ்த்தப்பட்டு அங்கே ஐக்கிய முன்னணியும், இங்கே தி.மு.க.வும் ஆட்சிக்கு வந்த பின்னர், தனக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மீண்டும் ஜெயின் கமிசனில் தி.மு.க. பங்கேற்றது. ஆனால் இறுதியில் ஜெயின் கமிசன் தனது சுய வடிவத்தைக் காட்டத் தவறவில்லை.

ஜெயின் கமிசன் நியமிக்கப்பட்டதன் மிக முக்கியமான நோக்கம் இராஜீவ் கொலைக்குப் பின்னுள்ள ஏதோ உலக மகா சதியைக் கண்டுபிடிப்பதற்குத்தான் என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் பணியைக் கடுகளவு கூடச் செய்யாது, காங்கிரசின், குறிப்பாக சோனியா - இராஜீவ் விசுவாசிகளின் அரசியல் எதிரிகள் மீது அவதூறு சுமத்துவதற்காகவே ஜெயின் கமிசன் ஒரு இடைக்கால அறிக்கையை ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சமர்ப்பித்தது.

வி.பி. சிங், சந்திரசேகர், நரசிம்ம ராவ், கருணாநிதி, ஜெயலலிதா போன்ற பல அரசியல்வாதிகள் முதல், சேஷன், வினோத் பாண்டே, கார்த்திகேயன், சுந்தர்ஜி, ரமேஷ் பண்டாரி, தீக்சித் போன்ற பல உயர் அதிகாரிகள் மற்றும் சந்திராசாமி, சுப்பிரமணியசாமி, கே.கே. திவாரி வரை பிரபல அரசியல் - கிரிமினல் கோமாளிகள் எனப் பலரும் ஜெயின் கமிசன் முன்பு சாட்சி சொன்னார்கள். இவர்களில் பலர் ஒருவரை ஒருவர் குற்றஞ்சுமத்திப் பழிபோடுவதும், வெடிச் சிரிப்புகள், கோமாளித்தனங்கள் - கேலிக்கூத்துகள் - பைத்தியக்காரத்தனமான வாதங்கள் என மசாலா சினிமாக் காட்சிகள் நிறைந்ததாகவே ஜெயின் விசாரணை நடந்தது.

இதையெல்லாம் நன்றாகவே ரசித்துக் களித்த ஜெயின் ஒரு தலைமைக் கோமாளியாகவே நடந்து கொண்டார். முதலில் ஆறு மாத காலத்திற்கே நியமிக்கப்பட்ட கமிசனை 12 தடவை - 6 ஆண்டுகளுக்கு - மீண்டும், மீண்டும் நீட்டிக்கச் செய்தார். விசாரணை என்ற பெயரில் சிறப்பு வசதிகளை அனுபவிப்பதற்கு வேண்டியும் அப்படிச் செய்தார். சிறப்புக் காவல்படைப் பாதுகாப்பு, வசதியான மாளிகை, குளுகுளு கார், சிறப்புச் சம்பளம், பல எடுபிடிகள், பதவி நீட்டிப்பு ஆகியவற்றை அனுபவிக்கும் நோக்கத்தோடு விசாரணையை முடிக்காமல் தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறார்.

இவ்வளவுக்கும் பிறகு, காங்கிரசு கயவாளிகளின் சார்பாக தனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையே, ஒட்டை உடைச



படிப்பகம்

www.padippakam.com

லைச் சரி செய்து, தனது சொந்தத் தயாரிப்பு போல மாற்றி அமைத்து, இடைக்கால அறிக்கை என்ற பெயரில் ஜெயின் சமர்ப்பித்துள்ளார். உண்மையில் சொல்லப் போனால், ஜெயின் அறிக்கை என்பது பொய்யும், புனைச் சுருட்டும், சுயமுரண்பாடுகளும் கொண்ட காங்கிரசுக் கட்சியின் அரசியல் அறிக்கையாகவே உள்ளது.

இந்த அறிக்கையின் பின்னணியில் ஏதாவது அரசியல் சதி இருக்கிறதா என்பதையே இன்னொரு கமிசன் போட்டு விசாரிக்க வேண்டும். சோனியா ஆசியுடன், இந்திரா - இராஜீவ் பரம்பரை ஆட்சியின் விசுவாசிகளின் திரைமறைவு சதியாகவும், சந்திராசாமி - சுப்பிரமணியசாமி - ஜெயலலிதா இன்னும் பிற இரகசிய கிரிமினல் குற்ற அரசியல்வாதிகளின் முயற்சியினால் அது வரையப்பட்டிருக்கும் எனச் சந்தேகிப்பதற்கான இடமுண்டு.

**கொலையின் பின்பலம்**
**ஜெயின் கமிசனின் புளுகு**

''தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களோடு விடுதலைப் புலிகள் ஆழமான கூட்டும் மாநில ஆட்சியாளர்கள் மற்றும் போலீசு முதலிய சட்ட அமலாக்கு துறைகளின் இரகசிய உடந்தையும் இல்லாமல், இப்போது நடந்ததைப் போல இராஜீவ் காந்தி கொலை சாத்தியமாகி இருக்காது'' என்கிறது, ஜெயின் கமிசன். இதன் மூலம் தமிழினம் முழுவதையுமே இராஜீவ் கொலைக்கு உடந்தையாயிருந்ததாகக் குற்றஞ்சாட்டுகிறது. ''போராளி இயக்கத்தின் தன்மையும் அளவுகளும் மாறக்கூடியதாக இருந்தது. ஒரு கட்டத்தில் அது தேச விரோதமாக மாறியது; தமிழ் மக்களின் சமூக அமைப்பு முழுவதிலும் அது ஊடுருவியது; தமிழ் மக்கள் அனைவரின் உணர்ச்சிபூர்வமான இனப் பிரச்சினையாதலால் அரசியல் கட்சிகளும் கூட அதற்குள் மூழ்கிப் போய்விட்டன'' என்று மேலும் வலிந்து சொல்கிறது, ஜெயின் கமிசன்.

இராஜீவ் கொலையைக் காரணமாக வைத்து தமிழினத்தையே பழிவாங்கும் இன ஒடுக்குமுறை, ஆதிக்கவெறியையே காங்கிரசுக் கயவாளிகள் ஜெயின் அறிக்கையின் மூலம் கொட்டுகிறார்கள் என்பது தெளிவாக உள்ளது. இந்திரா கொலையைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வாழும் சீக்கியர்கள் மீது பாய்ந்து இலட்சக்கணக்கானோரை அகதிகளாக்கி, அவர்களது உடமைகளை சூறையாடி, அழித்ததோடு கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் செய்து, 5000 பேருக்கு மேல் கொன்று குவித்தனர். அதைப்போல தமிழர்கள் மீது இனப்படுகொலையை நடத்தும் வெறியோடு இந்தப் பழி போடப்படுகிறது.

''தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு விடுதலைப் புலிகள் மெல்ல மெல்லத் தமது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டனர். தி.மு.க. புலிகளுக்குப் பாதுகாப்பான புகலிடம் கொடுத்தது. புலிகளுக்கு அன்றைய ஆட்சியாளர்களின் ஆதரவு இருந்ததால், போலீசு அவர்களுக்கு எதிராகச் செயல்பட முடியாமற்போனது. அதோடு புலிகளுக்கு ஆலோசனைகளும் நிதி உதவியும் கூடச் செய்தது'' என்று குற்றஞ்சாட்டுகிறது ஜெயின் கமிசன். வை. கோபாலசாமி இரகசியமாக ஈழம் போய் வந்தது, ஈழத்துரோகி பத்மநாபா கும்பலை கொலை செய்துவிட்டு, புலிகள் பிடிபடாமல் ஈழத்துக்குத் தப்பியோடியது, இந்தியாவின் ஈழப்போரின் போதும் புலிகளுடன் கருணாநிதி அரசு தொடர்பு வைத்திருந்தது, ஈழத்தில் இருந்து நாடு திரும்பிய இந்திய இராணுவத்தை வரவேற்பதற்குச் செல்ல கருணாநிதி மறுத்தது ஆகிய காரணங்களை முன் வைத்து, இராஜீவ் கொலையில் கருணாநிதிக்குத் தொடர்பு இருந்ததாக காங்கிரசு கயவாளிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**ஈழ ஆதரவு:**
**தமிழர் கொதிப்பும்**
**இந்திரா - இராஜீவ் சதியும்**

ஆனால் நடந்தது என்னவென்று நாடே அறியும். அதிலும் தமிழர்கள் நன்கு அறிவர். 1983 ஜூலையில், சிங்கள பாசிச அரசு நடத்திய ஈழத் தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து இலட்சக் கணக்கான ஈழத்தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தனர். இந்தியத் தமிழர்கள் கொதித்தெழுந்தனர். சிங்கள அதிபர் கொடும்பாவி எரிப்பு, தமிழகம் தழுவிய கடையடைப்பு, வேலை நிறுத்தங்கள் என்று தமிழ்நாடே எழுச்சிக் கோலம் பூண்டது. தமிழர்களின் இந்த உணர்வு எல்லா வகையிலும் நியாயமான, அடிப்படை உரிமையும் ஆகும். தொடர்ந்து பார்ப்பன ஏடுகளும், மத்தியில் ஆண்ட பார்ப்பன - பனியா அரசும் செய்த தமிழர் விரோதப் பிரச்சாரமும், இராஜீவ் கொலையைத் தொடர்ந்து பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஆட்சி கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறையும், ஈழப்போராளிக் குழுக்களின் தவறான அணுகுமுறையும் காரணமாக தமிழ் மக்களிடையே ஈழப் போராளிக் குழுக்கள் மீது அதிருப்தி ஏற்பட்டது. ஆனாலும் ஈழத் தமிழர்கள் மீதான பற்று மங்கி விடவில்லை. தமிழ் மக்களிடையே நிலவும் ஈழ ஆதரவு உணர்வு மறைக்கப்பட வேண்டிய, வெட்ககரமான குற்றமல்ல. அத்தகைய உணர்வு இல்லாதவர்கள் தாம் வெட்கப்பட வேண்டிய துரோகிகள்.

தமிழர்களின் ஒளிவு மறைவற்ற நியாயமான இந்த உணர்வுக்கு மாறாக பாசிச இந்திரா - இராஜீவ் பரம்பரை ஆட்சியும், தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். - ஜெயாவின் தமிழர் விரோத - துரோக ஆட்சியும் ஈழத் தமிழர்களுக்கு நேரிட்ட இன்னல்களைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்ள விழைந்தனர். தெற்கு ஆசியாவில் இந்தியத் துணைவல்லரசு பிராந்திய ஆதிக்கத்தை நிறுவவும், விரிவாக்கப் போர் நடத்தவும் ஒரு உந்து பலகையாக ஈழப் பிரச்சினையைப் பயன்படுத்தும் சதித்திட்டம் போட்டனர். இந்திய உளவுப் படையான ''ரா'' மூலம் ஈழப்போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவித் தமது கைக்கூலிகளை உருவாக்கினர். கிழக்கு பாகிஸ்தானில் (வங்கதேசத்தில்) 1971 இல் செய்ததைப் போல, சிங்கள மக்கள் மீது படுகொலைத் தாக்குதல்கள் நடத்தும்படி ஈழப்போராளிக் குழுக்களை ஏவிவிட்டனர்.



''இந்தியா டுடே'' ஆங்கில வார இதழின் நிர்வாக ஆசிரியர் பிரபு சாவ்லாவுடன் (இடது) நீதிபதி ஜெயின் (நன்றி: இந்தியா டுடே). இடைக்காலத் தீர்ப்பு விலை போனதா?

ஈழப் போராளிகளுக்கென நாடு முழுவதும் 30 முகாம்களை அமைத்து இந்திய இராணுவமே ஆயுதப் பயிற்சியளித்தது. இந்திய இராணுவத் தளங்களிலும், எல்லாச் சட்டங்களுக்கும் அப்பாற்பட்ட, யூனியன் பிரதேசம் போல அவை இராணுவக் கட்டுப்பாட்டில் நடந்தன. இவை தவிர அந்தந்தக் குழுக்கள் தனித்தனி முகாம்களாக நூறுக்கும் மேல் ஆயுதப்பயிற்சி எடுத்துக் கொண்டன. தானியங்கித் துப்பாக்கிகள், பீரங்கிகள், ஏவுகணைகள், கவசவண்டி - விமானத் தகர்ப்பு பீரங்கிகள், இராணுவ உடுப்புகள், வெடி பொருட்கள், நிலக் கண்ணிகள், நவீன செய்தித் தொடர்பு சாதனங்கள், அதிவேகப்படகுகள் போன்ற இராணுவத் தளவாடங்களோடு ஏராளமாக நிதி உதவியும் செய்தது. இந்திய அரசு, ஈழத் தமிழர்களின் நலன்களுக்காக இப்படிச் செய்வதாக நாடகமாடியது. எம்.ஜி.ஆர்., கருணாநிதி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே இந்த நாடகத்தை நம்பும்படி கூறினர்.

ஆனால் ஈழக் குழுக்களைத் தமது கைப்பாவைகளாக வைத்து, ஈழத்தில் இந்தியாவுக்கான ஒரு எடுபிடி அரசை நிறுவி, அதை வைத்து சிங்கள அரசை உருட்டி மிரட்டி ஆதிக்கம் செய்வதே இந்திய அரசின் நோக்கமாகும். அதேசமயம் எந்தவொரு போராளிக் குழுவும் தனது கட்டுப்பாட்டில் இருந்து மீளாதபடி இருத்த விரும்பியது. இதைப் புரிந்து கொண்ட புலிகள் தாம் மட்டுமே ஈழத்தில் ஏகபோக ஆதிக்கம் வகிக்க எண்ணி, சிறீசபாரத்தினத்தையும் அவரது ''டெலோ''வையும் ஒழித்துக் கட்டினர். ''ஈரோஸ்'' என்ற அமைப்பை உருட்டி மிரட்டி விழுங்கி ஏப்பம் விட்டனர்.

புலிகளை அடக்கி வைக்கவும் தனது கட்டளைப்படியான ஒப்பந்தத்தை ஏற்கச் செய்யவும் தமிழ்நாட்டிலுள்ள புலிகளைக் கைது செய்து, ஆயுதங்களைப் பறித்தது, இந்திய அரசு. இராஜீவ் - ஜெயவர்த்தனேவுடன் பிரபாகரன் நடத்திய பெங்களூர் பேரம் முறிந்து போனபோது ஆயுதங்கள் கொடுத்து புலிகளை ஈழத்துக்கு அனுப்பி வைத்தது. சிங்கள இராணுவம் யாழ்பாணத்தின் மீது முற்றுகைத் தாக்குதல் நடத்திய போது, இந்திய



படிப்பகம்

www.padippakam.com

அரசு யாழ்ப்பாணத்துக்கு கப்பல்களில் உணவு அனுப்பியும், சிங்களக் கடற்படையை எதிர் கொண்டபோது விமானத்தில் இருந்து உணவுப் பொட்டலம் வீசியும் ஈழ ஆதரவு நாடகமாடியது. இதையே உருட்டி மிரட்டும் நடவடிக்கையாக வைத்து, இராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போடும்படி நிர்பந்தித்தது.

அந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த புலிகளின் தலைவர் பிரபாகரனை நயவஞ்சகமாக டெல்லிக்கு அழைத்து, ஐந்து நட்சத்திர விடுதியில் சிறை வைத்து, மிரட்டிப் பணிய வைத்தது. 400 கோடி ரூபாய் ஈட்டுத் தொகை கொடுப்பதாக பேரம் பேசி ஒப்பந்தத்தை ஏற்பதாக புலிகளை அறிவிக்கச் செய்து, ஆயுதங்களில் ஒரு பகுதியை ஒப்படைக்கவும் செய்தது. அமைதிப்படை என்ற பெயரில் தாக்குதல் ஏவுகணை, பீரங்கி உட்பட அதிநவீன கனரக ஆயுதங்களுடன் ஒரு லட்சத்துக்கும் மேலான முப்படை இராணுவத்தினரையும் ஈழத்துக்கு அனுப்பியது.

ஆனால் புலிகளின் ஏகபோக ஆதிக்கத்தை ஏற்கமறுத்து, பத்மநாபா கும்பல் உட்பட ஈழத்துரோக அமைப்புகளை சார்ந்து நின்றது; போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி புலிப் படையின் 19 முன்னணியாளர்களைப் பிடித்து சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்க எத்தணித்தபோது, அவர்கள் சயனைடு குப்பிகளைக் கடித்துத் தற்கொலை செய்து கொண்டது; ஈழத்திலிருந்து சிங்கள இராணுவ போலீசு நிலையங்களை அகற்றவும், சிங்களக் குடியேற்றத்தை நிறுத்தவும் வாக்களித்தபடி இந்திய இராணுவம் நடவடிக்கை எடுக்கக் கோரி உண்ணாவிரதமிருந்த புலி திலீபன் மரணமடைந்தது ஆகியவற்றைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் போர் மூண்டது.




கொடும்பாவி எரித்து ஆட்டம் போடும் காங்கிரசு கும்பல்: ஓட்டுப் பொறுக்க ஒப்பாரி அரசியல்.

### ஈழ ஆக்கிரமிப்பு போரில் இந்தியாவின் வெட்கக் கேடான தோல்வி

இந்திய இராணுவத்தினால் நடத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தலை புலிகள் புறக்கணித்தனர். பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பைச் சேர்ந்த வரதராஜப் பெருமாள் தலைமையில் ஒரு பொம்மை அரசு நிறுவப்பட்டது. தொடர்ந்து நடந்த ஈழப்போரில் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளும் கற்பழிப்புகளும் நடத்தியது இந்திய இராணுவம். அதே சமயம், தானே பல ஆயிரம் பேரைப் பலி கொடுத்தது. ஒரு வாரத்துக்குள் புலிகளை ஒழித்து, ஈழத்தில் தனது ஆதிக்கத்தை நிறுவிவிட முடியும் என்று மார்தட்டிக் கொண்டு கிளம்பிய இந்திய இராணுவம் பேரிழப்புகளை சந்தித்ததோடு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் போர் புரிந்தும் வெற்றி பெற முடியவில்லை. இந்திய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக இலங்கை மக்கள் பல போராட்டங்களை நடத்தினர். ஜெயவர்த்தனே ஆட்சிக்காலம் முடிந்து பிரேமதாசா இலங்கை அதிபரான பிறகு அந்த அரசும் இந்திய இராணுவத்துக்கு எதிராகத் திரும்பியது. இந்திய இராணுவத்தை வெளியேற்றும் போருக்கு புலிகளுக்கு ஆயுத தளவாடங்கள் மற்றும் நிதியுதவியும் கொடுத்தது.

இதற்கிடையே தமிழ்நாட்டில் கருணாநிதி ஆட்சி வந்தது. ஈழ ஆக்கிரமிப்பில் இராஜீவ் அரசுக்கும், இந்திய இராணுவத்துக்கும் நேரிட்ட பெருந்தோல்வி - அவமானத்தை சரிக்கட்ட ''ரா'' மூலம் புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டும், கருணாநிதி - மாறன் மூலம் சமரசம் பேசவும் இராஜீவ் முயன்றார். அதுவும் கைகூடாத சமயத்தில், மத்தியில் இராஜீவ் ஆட்சி அதிகாரம் இழந்தார். வி.பி. சிங் தலைமையில் அமைந்த ஜனதாதளம் - தேசிய முன்னணி அரசு, ஈழப் போரை நிறுத்தி, இந்திய இராணுவத்தைத் திரும்ப பெற்றது. ஈழத்தில் அட்டூழியங்கள் புரிந்து, தோற்றுத் திரும்பிய இராணுவத்தை வரவேற்க கருணாநிதி மறுத்து விட்டதுதான் அவர் செய்த ஒரே சரியான முடிவு.

### கருணாநிதி புலிகளை ஆதரித்ததாக புரளி

கருணாநிதியின் தி.மு.க.வுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இயல்பாகவே எப்போதும் நல்லுறவு இருந்தது கிடையாது. ஈழப் போராளி அமைப்புகள் அனைத்தும் ஐக்கியப்பட வேண்டும் என்று வெளியிலே கூறி வந்தாலும், சிறிசபாரத்தினத்தின் ''டெலோ'' வைத்தான் கருணாநிதி ஆதரித்து வந்தார். மேலும் ஈழத் துரோக அமைப்பான மதவாத ஈழ ஐக்கிய விடுதலைக் கூட்டணி மற்றும் அதன் தலைவர்களான அமிர்தலிங்கம் போன்றவர்களோடு தான் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார்.

இதற்கு நேர்மாறாக விடுதலைப் புலிகளுடனும் அதன் தலைவர் பிரபாகரனுடனும் எம்.ஜி.ஆர். - இராஜீவ் தான் நெருங்கிய உறவு வைத்திருந்தனர். பிரபாகரனுக்குப் பகிரங்கமாகவே நிதி அளித்த எம்.ஜி.ஆர். பல வழக்குகளிலும், அரசு எந்திரம் மூலமும் உதவி செய்தார். இதன் காரணமாகவே கருணாநிதி கொடுத்த நிதி உதவியை பிரபாகரன் நிராகரித்ததோடு, அவரது ஆதரவு பெற்ற சிறிசபாரத்தினத்தைக் கொலைச் செய்ததைத் தொடர்ந்து கருணாநிதி - பிரபாகரன் உறவு கசப்பானதாகவே இருந்தது என்பதுதான் உண்மை.

இராஜீவ், வி.பி. சிங், சந்திரசேகர் ஆகிய அடுத்தடுத்த பிரதமர்களின் அறிவுறுத்தலின் பேரில்தான் விடுதலைப் புலிகளுடன் அதிகாரப் பூர்வ பேச்சு வார்த்தைக்காக கருணாநிதி முயன்றார். புலிகளுடன் கருணாநிதிக்கு கள்ளத் தொடர்பு இருப்பதாகப் பழி போட்டு, ஆட்சியைக் கலைப்பதற்கு இராஜீவ் - ஜெயலலிதா - சு.சாமி அடங்கிய பார்ப்பன கும்பல் முயன்றபோது, கூட்டுக்குள் ஒளிந்து கொள்ளும் நத்தையைப் போல கருணாநிதி மிரண்டு போனார். முன்னெச்சரிக்கையாக ஈழத்தமிழர்களைப் பிடித்துச் சிறப்பு முகாம்களில் அடைத்தார். இருந்தாலும் புலிகளுடன் கள்ளத் தொடர்பு என்கிற பொய்யான குற்றச்சாட்டை வைத்து தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. ஒரிசா முகாமில் இருந்து இரகசியமாக வந்து சென்னையில் ஒளிந்திருந்த பத்மநாபா கும்பலை புலிகள் கொன்றுவிட்டு, பிடிபடாமல் ஈழத்துக்கு தப்பி ஓடியது ஆட்சிக் கலைப்புக்குக் காரணமாகப் பயன்படுத்தப்பட்டது. அதற்கு பிறகு ஐந்து மாதங்கள் நடந்த ஆளுநர் ஆட்சியில் புலிகளை முற்றாக விரட்டி விட்டதாக பீற்றிக் கொண்ட காலத்தில் தான் இராஜீவ் கொல்லப்பட்டார். மத்தியிலும் காங்கிரசு முட்டுக் கொடுத்து வைத்திருந்த சந்திரசேகர் ஆட்சிதான் இருந்தது.

இந்த உண்மைகளை எல்லாம் மூடிமறைத்து, காங்கிரசு கைக்கூலி என்கிற முறை



படிப்பகம்

www.padippakam.com

யில் பச்சையான புளுகுணி வாதங்களை வைத்து புலிகளுக்கு இந்திரா, இராஜீவ், எம்.ஜி.ஆர். கும்பல் உதவியதை நியாயப்படுத்துகிறார், ஜெயின். ''பல்வேறு போராளிக் குழுக்களுக்கு இந்திய முகாம்களில் அளிக்கப்பட்ட பயிற்சி இலங்கைத் தமிழர்களின் தற்காப்பு தன்மை உடையன. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்ட, திரட்டப்பட்ட தாக்குதல் மீண்டும் நடந்தால் நிராயுதபாணிகளான தமிழர்கள் பாதுகாத்து கொள்வதற்கானவை. இராணுவத் தாக்குதல்கள் - படையெடுப்புகளுக்கானவையோ, மோதல்களுக்கானவையோ அல்ல'' என்கிறது ஜெயின் கமிசன்.

ஆனால் இந்திரா - இராஜீவ் - எம்.ஜி.ஆர். காலத்தில் அவர்களது ஈழ ஆக்கிரமிப்பு சதிகளுக்குத் துணை நின்ற ''இந்தியா டுடே'', ''ஃபிரண்ட்லைன்'' போன்ற ஏடுகளும், அன்றைய இலங்கைத் தூதர் தீட்சித், சி.பி.ஐ. ஜி. மாதவன் மற்றும் எம்.ஆர். நாராயணசாமி உட்பட பலரும் ஜெயின் கமிசனின் முடிவுகள் அனைத்தும் தவறானவை, ஒரு தலைப்பட்சமானவை, அரசியல் உள்நோக்கத்தோடு இட்டுக் கட்டிப் பழிபோடுபவை, இராணுவ - தனிநபர் பாதுகாப்பு இரகசியங்களை அம்பலப்படுத்துபவை என்று சாடுகின்றனர்.

கொரில்லாப் போர், கிரமமான படையெடுப்பு நடத்துவதற்கான கனரக ஆயுதங்களும், பயிற்சிகளும் போராளிகளுக்குத் தரப்பட்டன; 1989-க்குப் பிறகுதான் புலிகள் இந்திய விரோதிகளானார்கள்; அதன்பிறகு அவர்களுடன் கருணாநிதி கள்ளத் தொடர்பு வைத்துக் கொண்டார் எனக் குற்றஞ்சாட்டும் ஜெயின், அதே காலத்தில் ''ரா'' மூலம் இராஜீவ் பிரபாகரனுடன் தொடர்பு வைத்திருந்ததையும், புலிகளின் தளபதி கிட்டு சென்னையில் இருந்து இயங்க அனுமதித்ததையும், கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதம் முன்பு கூட புலிகளின் பிரதிநிதிகளுடன் இராஜீவ் பேரம் பேசினார் என்பதையும் ஜெயின் மூடி மறைப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

**பாதுகாப்பு குறைபாடு:**
**குற்றவாளி இராஜீவே!**

அடுத்து, இராஜீவ் காந்திக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில், ஏற்பட்ட குறைபாடுகள் பற்றி ஜெயின் கமிசன் புளுகுகள். இராஜீவுக்குப் பிறகு வந்த பிரதமர்கள் மீது பழி சுமத்துவதற்கென்றே தனது விசாரணை அதிகார வரம்பை மீறி இந்த விசாரணையை ஜெயின் கமிசன் எடுத்துக் கொண்டது. அதற்காகவே ஊழல் பெருச்சாளி, பாசிச இராஜீவுக்குத் துதிபாடி பலபக்கங்கள் எழுதியுள்ளார் ஜெயின்.

''அவ்வளவு பெரிய தலைவருக்கு, அசாம், பஞ்சாப், காஷ்மீர், ஈழப் போராளிகளால் இராஜீவ் உயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்தும், அரசியல் விரோதம், பொறாமை, உள்நோக்கம் காரணமாக இராஜீவுக்கு அளித்து வந்த சிறப்புக் காவல் படை - கருப்புப் பூனைப் படை பாதுகாப்பை, வி.பி.சிங் விலக்கிக் கொள்ளும்படி உத்திரவிட்டார்; சந்திரசேகர் ஆட்சியில்கூட அப்படிப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை; இது பற்றியும், இராஜீவ் கொலைக்கான சதி பற்றியும் விவரம் உள்ள கோப்புகளையும் நரசிம்மராவ் ஜெயின் கமிசனுக்குத் தர மறுத்துவிட்டதால் முழுமையாக விசாரிக்க முடியவில்லை'' என்பது ஜெயினின் குற்றச்சாட்டு.

இராஜீவ் பாதுகாப்பு விவகாரங்களில் நடந்த உண்மை விவரங்களையும், வர்மா கமிசன் முடிவுகளையும் குருட்டுத்தனமாக ஜெயின் நிராகரித்து விட்டார். 1988 இல் பிரதமரின் பாதுகாப்புக்காக சிறப்புக் காவல் படை - கறுப்புப் பூனைப்படை அமைக்கும் சட்டத்தை இராஜீவின் உள்நாட்டுப் பாதுகாப்பு மந்திரியாக இருந்த சிதம்பரம் முன்வைத்து நிறைவேற்றப்பட்டது. இந்தப் பாதுகாப்பு வசதி, பதவி விலகிய பிரதமர்களுக்கும் தருவதாக இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் கோரின. ஆனால் தானே நிரந்தர பிரதமராக இருக்கப் போகிறோம் என்கிற மமதையில் அந்தக் கோரிக்கையை இராஜீவ் நிராகரித்து விட்டார். சட்டம் நிறைவேறிய ஓராண்டுக்குள் இராஜீவின் பதவி பறிபோய், அவர் முன்னாள் பிரதமராகிவிட்டார். அவரே இயற்றிய சட்டப்படி பூனைப்படைப் பாதுகாப்பு வசதியை இழக்க நேரிட்டது.



ஜெயினுக்குப் பாலாபிஷேகம்: தி.மு.க.வைப் பழித்து ஆதாயம் தேட முயலும் அ.தி.மு.க. கும்பல்.

இராஜீவின் பாதுகாப்பை விலக்கும்படி வி.பி. சிங்கோ வேறு யாருமோ உத்திரவு போடவில்லை. சட்டப்படி அது காலாவதியாகி விட்டது. ஆனால் இராஜீவின் பாதுகாப்பில் அக்கறை கொண்ட வி.பி.சிங், அவரது விருப்பப்படி பாதுகாப்பு வசதிகளை செய்தார். அதே பூனைப்படை அதிகாரிகளை டெல்லி போலீசுக்கு மாற்றி பாதுகாப்புத் தரும்படி ஏற்பாடு செய்தார். மொத்தம் 240 போலீசாரை பணியில் ஈடுபடுத்தினார். இராஜீவ் வீட்டைச் சுற்றிப் பாதுகாப்பு அரண் எழுப்பச் செய்தார். அரசு கேட்டுக்கொண்ட போது, இராஜீவின் பாதுகாப்புப் பொறுப்பாளராக இருந்த சிதம்பரம் திருப்தி தெரிவித்தார். இவ்வளவு இருந்தும், பாதுகாப்பு விதிகளை மதியாமல் 40-க்கும் மேலான தடவை இராஜீவ் மீறினார். படுவேகத்தில் காரைச் செலுத்துவது, சோதிக்கப்படாத பலவகை கார்களைப் பயன்படுத்துவது, பாதுகாவலர்களுக்குத் தெரியாமல் மறைந்து போவது என்று திணறடித்தார். விதிகளை மீறி கூட்டத்துக்குள் போய் ''பந்தா'' காட்டுவதும் செய்தார். அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையின் போதுதான் மனித வெடிகுண்டுக்குப் பலியானார்.

இராஜீவ் உயிருக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்று குறிப்பாக உளவுத் துறையினர் மற்றும் பாலஸ்தீன அதிபர் யாசர் அராஃபத் ஆகியோர் எச்சரித்தும், சந்திரசேகர் அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறியது என்பது ஜெயினின் இன்னொரு குற்றச் சாட்டு. ''எதற்கும் சொல்லி வைப்போம், அப்படி ஏதும் நடந்தால் ஏற்கனவே எச்சரித்தோம் என்று சொல்லிக் கொள்ளலாம்'' என்கிற முறையில் எந்தத் தலைவரும் எந்தப் பயணம் போனாலும் உளவுத் துறை செய்தி அனுப்புவது என்பதை ஒரு வழமையான வேலையாக வைத்திருக்கிறது. அந்த வகையில் தான் இராஜீவ் கொலைக்கு முன்பு எச்சரிக்கை வந்தது; வழக்கப்படியே அதை யாரும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்று சி.பி.ஐ. மற்றும் ஐ.பி.யின் முன்னாள் அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட எச்சரிக்கை பலிக்காமல் போனால் அதற்கான பொறுப்பை உளவுத்துறை ஏற்குமா? மேலும் இராஜீவோடு அதிக எண்ணிக்கையில் பாதுகாப்பு அதிகாரிகள் - போலீசார் மாண்டதையே தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்ததற்கான ஆதாரமாக அரசு காட்டியது.

**காங்கிரசுக்குள்ளாகவே**
**இராஜீவ் எதிரிகள்**

இராஜீவ் பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து முன்னாள் பிரதமர்கள், அதிகாரிகள் மீது வர்மா கமிசன் கண்டனம் தெரிவித்திருப்பதோடு, உளவுத் துறைக்கும் - போலீசுக்கும் காங்கிரசுத் தலைவர்கள் ஒத்துழைக்க மறுத்ததையும், அவர்களில் பலரின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகளையும் வர்மாக் கமிசன் கண்டித்திருக்கிறது. குறிப்பாக, தக்க பாதுகாப்பு வசதி இல்லாத இடத்திற்கு, நிகழ்ச்சி நிரலில் இல்லாத பொதுக் கூட்டத்திற்கு அழைத்துப் போனது; பொது மக்கள் அனைவரும் இராஜீவை நெருங்கிப் போகுமாறு குழப்பம் விளைவித்தது; மனித வெடிகுண்டு தாணுவைச் சோதனையிடாது; இராஜீவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

மாலை அணிவிக்க காங்கிரசாரே ஏற்பாடு செய்தது ஆகிய குற்றச்சாட்டுகள் உள்ளன. அதிகாரிகளைத் தண்டிப்பதற்கு காங்கிரசு அரசு முயன்ற போது, மத்தியப் பணியாளர் தீர்ப்பாயம் அதை மறுத்து, அரசின் முகத்தில் வாரி அடித்தது. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்ட காங்கிரசுக்காரர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஜெயின் கமிசனை முடக்கி, கலைத்து விடவும் பல கோப்புகளைத் தர மறுத்து உண்மை விவரங்களை மூடி மறைக்கவும், பல கோப்புகளை திருடி, அழித்து விடவும் செய்த நரசிம்மராவ் அரசின் மீது போகிற போக்கில் குறைபட்டுக் கொள்கிறது ஜெயின் கமிசன்.

இராஜீவ் பாதுகாப்புப் பற்றிய கோப்பு தொலைந்து விட்டது என்று வாதிட்ட நரசிம்மராவ் அரசு பின்னர் போலி ஆவணங்களைத் தயாரித்து கமிசன் முன்பு சமர்ப்பித்து அம்பலப்பட்டுப் போனது. வர்மா கமிசன் மற்றும் ஜெயின் கமிசன் ஆகிய இரண்டுக்கும் விசாரணை வரம்புகளை அறிவிக்கும் கோப்பு தொலைந்து போனதாக கூறிவிட்டது. சந்திராசாமிக்கும் சுப்பிரமணிய சாமிக்கும் இடையில் பரிமாறிக் கொண்ட உளவுத்துறையின் மூலம் இடை மறிக்கப்பட்ட செய்திகள் அடங்கிய கோப்பு பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகளால் அழிக்கப்பட்டது.

1987-இல் இராஜீவ் அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் சந்திராசாமி - அதிபர் ஜெயில்சிங் ஆகியோரின் பாத்திரம் குறித்த உளவுத்துறை ''ஐ.பி.''யின் கோப்பு; இராஜீவ் கொலை பற்றி உளவுத் துறையினர் உள்துறை அமைச்சருக்கு சமர்ப்பித்த அதிகாரபூர்வ அறிக்கைகள் அடங்கிய கோப்புகள்; இராஜீவை எங்கு வைத்து கொலை செய்வது என்று புலிகளுக்குள் பேசிக் கொண்ட இரகசியத் தொடர்பு சாதனப் பேச்சு அடங்கிய கோப்பு ஆகியன தொலைந்து போனதாக அறிவிக்கப்பட்டன. ஜெயின் கமிசனைக் கலைத்துவிட ராவ் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அடங்கிய கோப்பு கமிசனிடம் சமர்ப்பிக்கப்படவே இல்லை. இதெல்லாம் நரசிம்மராவ் - சந்திராசாமி - சு.சாமியின் சதிகார நடவடிக்கைகளை மூடி மறைக்கவே நடந்தன. ஆனால் இதற்காக காங்கிரசு கயவாளிகள் ஒரு நடவடிக்கையும் கோரவில்லை.

முக்கியமாக, இராஜீவ் கொலைக்குப் பின்னணியாக இருந்த உலகமகா சதியைக் கண்டுபிடிக்கவே ஜெயின் கமிசன் அமைக்கப்பட்டது. ஆனால் அந்த திசையில் ஒரு அடி கூட எடுத்து வைக்கப்படவில்லை. உளவுத்துறையின் ''கண்டுபிடிப்பு''களை அடிப்படையாகக் கொண்டு ஈழ விடுதலைப் புலிகளையும் காங்கிரசு கயவாளிகளின் ''கண்டுபிடிப்பு''களை அடிப்படையாகக் கொண்டு இராஜீவ் கொலைக்கு உடந்தையக இருந்ததாக தி.மு.க.வையும் குற்றஞ்சாட்டுவதுதான் ஜெயின் கமிசன் செய்த ஒரே காரியம்.

கொலை நடந்த நாளன்றும் அதன் பிறகும் சுப்பிரமணிய சாமி, சந்திரா சாமி ஆகியோரின் நடவடிக்கைகள் பற்றி ஜனதா கட்சி முன்னாள் தலைவர் வேலுசாமி, சிவராசன் - சுபா ஆகிய புலிகளுக்கு பாதுகாப்பு இடம் வழங்கிய தடா கைதி ரங்கநாதன் மற்றும் பலரது புகார்கள்; சந்திராசாமி, சு.சாமி, சர்வதேச ஆயுத விற்பனையாளர் ஆதனான் கஷோகி ஆகியோர் சதி செய்ததாக வெளிநாட்டில் வாழும் சீக்கியத் தலைவரின் புகார்கள்; இராஜீவைக் கொல்ல சீக்கிய தீவிரவாதிகள் - புலிகள் - சி.ஐ.ஏ., மொசாத் சதி செய்வதாக முன்கூட்டியே அன்றைய பிரதமர் சந்திரசேகரிடம் பாலஸ்தீன தலைவர் யாசர் அராஃபத் எச்சரித்தது; இராஜீவ் கொலையைப் படம் பிடித்த ''வீடியோ'' சுருளின் முக்கிய பகுதிகள் அழிந்திருப்பது, சிவராசன் - சுபா - தாணு ஆகியோருடன் காங்கிரசுப் பிரமுகர்கள் வைத்திருந்த உறவு, காங்கிரசு எம்.பி.யின் உறவினரும் புலிகளுக்காக கடத்தல் வேலைகள் செய்பவரும் என்று கைது செய்யப்பட வேதாரண்யம் சண்முகம் மர்மமான முறையில் பிணமானது - ஆகியவற்றின் அடிப்படையில் இராஜீவ் கொலையில் சில காங்கிரசாருக்கு தொடர்பு இருந்ததென்ற புகார்கள் எவையும் சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழுவோ, ஜெயின் கமிசனோ விசாரிக்கவே இல்லை. அதற்கு மாறாக, இந்த இரண்டு அமைப்புமே இது பற்றிய புகார்களை நிராகரித்து, உண்மைகளை மூடி மறைக்கவே முயன்றுள்ளன.

### காங்கிரசின் தேச விரோத செயல்களை விசாரி!

ஆகவே, ''உலகமகாசதி''யைக் கண்டு பிடிப்பதும், குற்றவாளிகளைத் தண்டிப்பதும் என்கிற காங்கிரசின் கூச்சல் வெறும் பாசாங்கு தான். இந்திரா கொலைக்குக் காரணமென்று மூன்று பேர்களைப் பிடித்து தூக்குத் தண்டனை விதித்தனர். கடைசி நேரத்தில் பல்பீர் சிங் என்பவர் உச்சநீதி மன்றத்தால் விடுதலையாகி உயிர் தப்பினர். குற்றமே நிரூபிக்கப்படாத கேகார்சிங் மீது சதிப்பழி சுமத்தித் தூக்கிலிட்டனர். இதுதவிர ஆயிரக்கணக்கான சீக்கியரைக் கொன்றொழித்தனர். இதுவும் போதாது என்று சிம்ரான்ஜித் மான், பம்பாய் கல்லூரி விரிவுரையாளர்கள் இருவர் உட்பட பலர் மீது சதி வழக்குப் போட்டு சிறையலடைத்துத் துன்புறுத்தியும் குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலை செய்ய வேண்டியானது. கூடவே தாக்கர் கமிசன் விசாரணையும் நடத்தி, சோனியா, ஆர்.கே. தவாண் ஆகிய காங்கிரசார் மீதே குற்றச்சாட்டுகள் திரும்பிய போது அதன் அறிக்கையை இரகசியமாக வைத்தனர்.

அதுபோன்று தமிழர்களையும் அரசியல் எதிரிகளையும் இராஜீவ் கொலையை வைத்துப் பழிவாங்குவதற்கு காங்கிரசு எத்தணிக்கிறது. ஜெயின் அறிக்கையைக் காட்டி ஐக்கிய முன்னணி அரசில் அதிகாரம் பெறவும் எத்தணித்தது. காங்கிரசுக்குள்ளாகவே இதை வைத்து செல்வாக்குப் பெற சோனியாவின் பாதந்தாங்கிகள் பெருங்கூச்சல் போட்டனர். ஆனால் அதன் எல்லா ஆசைகளும் முயற்சிகளும் தோற்று, அதற்கு எதிராகவே திரும்பி, காங்கிரசின் பதவி வெறி அம்பலமாகி மக்கள் முன்பு நிர்வாணமாக நிற்கிறது. ராஜீவின் விதவை சோனியாவை முன்னிறுத்தி, நேரு - இந்திரா பரம்பரை பெருமைகளைக் காட்டி ஓட்டுப் பொறுக்கவும் எத்தணிக்கிறது. காங்கிரசிடமிருந்து தேர்தல் கூட்டு விவகாரத்தில் மட்டுமே மாறுபட்டு வெளியேறிய மூப்பனார் கும்பல், தனது தாய்க் கட்சியுடன் சேர்ந்து மேற்கண்ட அரசியல் சதியில் ஈடுபட்டிருந்தார். எல்லாம் பகற்கனவான நிலையில் மீண்டும் தமிழக மக்களை ஏய்த்து எம்.பி. பதவிகளைப் பிடிப்பதற்காக தி.மு.க. கூட்டை நாடியுள்ளார்.

இந்த விவகாரத்தில், ஐக்கிய முன்னணியின் இறுதி முடிவு காங்கிரசின் எத்தணிப்புகளை முறியடித்துத் தேர்தலைச் சந்திப்பதாக இருந்தாலும், மூப்பனார், முலயம்சிங், சுர்ஜித் போன்றவர்களின் துரோகத் தனங்கள் இல்லாமலில்லை. காங்கிரசின் முக்கியத் தாக்குதல் இலக்கான கருணாநிதியே கூட தற்காப்பு, சட்டவாத வரம்புகளுக்குள் நின்று வாதாடுகிறாரே தவிர, புலிகள் உட்பட ஈழப்போராளி இயக்கங்களை ஆதரிப்பது தமிழர் உரிமை என்பதற்காகப் போராடவில்லை. அதற்கு மாறாக, புலிகளை ஒடுக்குவதில் மற்ற ஆட்சியாளர்களுக்குத் தாம் எந்த விதத்திலும் குறைந்தவர் இல்லை என்கிற தமது இந்திய தேசிய விசுவாசத்தை நிரூபிப்பதற்காகவே மன்றாடுகிறார்.

இராஜீவ் கொலைக்கான சதிகள் பற்றி மூன்று கண்ணோட்டங்கள் நிலவுகின்றன.

• ஈழவிடுதலைப் புலிகள் தமது சொந்த நோக்கத்தோடு தாமே திட்டமிட்டுக் கொன்றனர்.

• மொசாத், சி.ஐ.ஏ. போன்ற அந்நிய உளவு அமைப்புகளுக்காக சந்திரசாமி - சு. சாமி - ஆதனான் கஷோகி ஆகியோர் மூலம் புலிகளை ஏவிக் கொன்றனர்.

—இந்த இரு கண்ணோட்டமும் இந்திய ஆளும் வர்க்கத்தின் இரு பிரிவுகளால் கூறப்படுகின்றன.

• ராஜீவைக் கொன்றவர்கள் புலிகளே அல்ல; சிவராசன் - சுபா - தாணு ஆகியோர் சந்திராசாமி - சு. சாமி போன்றவர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்ட தனி நபர்களான ஈழத் தமிழர்கள். சிங்கள, மொசாத், சி.ஐ.ஏ. ஆகிய அந்நிய உளவு நிறுவனங்களே அந்தக் கொலைகாரர்களை ஏவியது.

— இது புலிகளின் ஆதரவு தமிழின வாதிகளின் கோழைத்தனமான சந்தர்ப்பவாதம்.

இராஜீவ் காந்தியைப் புலிகளே கொன்றிருந்தால் கூட, அதற்காக அவர்களைத் தண்டிக்கக் கூடிய நியாய உரிமை இந்திய அரசுக்குத் துளியும் கிடையாது என்பதுதான் சரியானது. இந்த நாட்டு மக்களைப் பொறுத்த வரை விசாரித்துத் தண்டிக்கப்பட வேண்டிய விசயம் இரண்டு உண்டு.

— ஈழ விவகாரத்தில் தலையிட்டு, ஈழ ஆக்கிரமிப்புப் போர் நடத்தி, ஈழத்தில் போர்க் குற்றங்கள் புரிந்ததற்கு இராஜீவ், இந்திய உளவுப்படை ''ரா'' உட்பட காரணமானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும்.

— தெற்கு ஆசிய பிராந்திய மேலாதிக்கம் வகிக்கவும் ஆக்கிரமிப்பு - விரிவாக்கம் செய்யவும் இட்டுச் செல்லும் வெளிவிவகாரக் கொள்கைகள் வகுத்து செயல்படுத்தும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மீது விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும்.

இதற்காகப் போராடுவதே நியாயமானது; அவசியமானது. • ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# கோவை கலவரம் :
# இந்து முன்னணி - போலீசு கூட்டு

*கோவையில் போலீசுக்காரர் ஒருவர் முஸ்லிம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதும் அந்நகரம் முழுவதும் வன்முறை வெறியாட்டங்கள். சூறையாடல், நாசகாரித்தனம், தீவைப்பு, உயிருடன் எரிப்பு, கொலை, கொள்ளை கொடூரங்கள். இந்து வெறியர்களும் போலீசு ரவுடிகளும் கிரிமினல் குண்டர்களும் கைகோர்த்துக் கொண்டு அட்டூழியம் புரிந்தனர். ஒருவார காலத்திற்குள் 23 பேர் கொல்லப்பட்டனர். அங்கே மனித நேயமும் சகோதரத்துவமும் அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டது. அரசும் நிர்வாகமும் செயலிழந்து ஊமையாக நின்றன. 'தமிழகம் ஒரு அமைதிப் பூங்கா' என்ற மாயை கிழிந்து கந்தலாகித் தொங்கியது. மதவெறித் தீயில் பிணவாடை வீசியது.*

பஞ்சுப் பொதியில் நெருப்பு பற்றியது போல பஞ்சாலை நகரமான கோவை நவம்பர் 29-ந் தேதி முதல் அடுத்த 3 நாட்களுக்கு கலவரத் தீயில் பற்றி எரிந்து தமிழகத்தையே அதிர்ச்சியில் தள்ளியுள்ளது. பல உயிர்களையும் பல கோடி ரூபாய் சொத்துக்களையும் அழித்த இக்கலவரத்தின் பின்னணி என்ன?

அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட கருப்பு நாளான டிசம்பர் 6 நினைவு நாளை ஒட்டி முஸ்லிம் அமைப்புகள் கண்டனச் சுவரொட்டிகளை நவம்பர் மாத மத்தியிலிருந்தே ஒட்டி வந்தனர். இதற்கெதிராக இந்து வெறியர்கள் முஸ்லீம்களுக்கு எதிராக ஆபாசமாகவும் ஆத்திரமூட்டும் வகையிலும் சுவரொட்டி, பேனர், தட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டனர். அதற்குப் போட்டியாக முஸ்லிம் அமைப்புகளின் சுவரொட்டி, இந்து வெறியர்களின் எதிர்ப் பிரச்சாரம் என கோவை நகரில் கலவர மேகம் சூழத் தொடங்கியது.

இச்சூழ்நிலையில் நவம்பர் 29-ந் தேதியன்று உக்கடம் பி-1 போலீஸ் நிலையம் அருகே போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் போலீசும் அதிகாரிகளும் குடிபோதையில், வாகன ஓட்டுநர்களிடம் உரிமம் உள்ளதா என்று பரிசோதித்து, வழக்கம் போல் மாமூல் வேட்டையை நடத்திக் கொண்டிருந்தனர். அவ்வழியே இரு சக்கர வாகனத்தில் மூன்று பேராக வந்த ''அல்-உம்மா'' என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த இளைஞர்களை போலீசார் மடக்கி, உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதாக வழக்குப் பதிவு செய்தனர். உரிமத்தை வீட்டிலிருந்து கொண்டு வந்து காட்டுவதாகக் கூறிய போதிலும் போலீசார் ஏற்க மறுத்ததால், கோபமடைந்து அவர்கள் தமது அமைப்பின் தலைவர் அன்சாரியுடன் வந்து வீதியிலேயே காரசாரமாக வாக்கு வாதம் செய்தனர். போதையில் இருந்த உதவி ஆய்வாளர் கோபத்தில் அன்சாரியின் கன்னத்தில் அறைந்து விடவே, ஆத்திரமடைந்த இளைஞர்கள் கோட்டை மேடு பகுதிக்குச் சென்று ஒரு கும்பலைத் திரட்டி வந்து, உக்கடம் பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தம் குடையில் நின்றிருந்த செல்வராஜ் என்ற போலீசுக்காரரை மிருகத்தனமாகத் தாக்கி, கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடி விட்டனர்.

இக்கொடுஞ்செயலைக் கண்டு ஆத்திரமடைந்த போலீசார், அப்பகுதியிலுள்ள சிறுகடைகளை அடித்து நொறுக்கினர். போலீசு உயரதிகாரிகள் கோட்டை மேடு பகுதிக்குச் சென்று, கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை உடனடியாக போலீசிடம் ஒப்படைக்குமாறு எச்சரித்தனர். அதன்படியே, மறுநாள் காலையில் படுகொலைக்குக் காரணமான மூன்று இளைஞர்களும் போலீசிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது.


ஆனாலும் போலீசாரின் வெறி அடங்கவில்லை. தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு போலீசுக்காரர் கொல்லப்பட்டதற்கு ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையே பழிவாங்கும் வெறியோடு திட்டமிட்டே அவர்கள் கலவரத்தில் இறங்கினர். போலீசு உதவிக் கமிஷனர் மாசானமுத்து, நடராசன், ஆய்வாளர் முரளி ஆகிய இந்து வெறி போலீசு அதிகாரிகள் ஆத்திரமுற்று இருந்த போலீசாரை வெறியூட்டினர்.

நவம்பர் 29-ந் தேதியன்று இரவு உக்கடம் பகுதியில் போலீசாரே நேரடியாக அட்டூழியங்களில் இறங்கினர். முஸ்லிம்களுக்குச் சொந்தமான நடைபாதைக் கடைகளையும் பெட்டிக்கடைகளையும் நாசமாக்கினர். அருகிலிருந்த பெட்ரோல் ''பங்க்''-கிலிருந்து பெட்ரோலைப் பிடித்து வந்து ஊற்றிக் கடைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். இந்து வெறியர்கள் பொருட்களைச் சூறையாடினர்.

மறுநாள், அரசு மருத்துவமனையில் போலீசுக்காரர் செல்வராஜின் உடலைப் பார்க்கத் திரண்ட போலீசார், டவுன்ஹால் அருகே திருச்சி சாலையில் மறியலில் இறங்கினர். உயர் போலீசு அதிகாரிகள் கெஞ்சிய போதிலும் வேலைக்குத் திரும்ப மறுத்தனர். போலீசாரின் குடும்பத்தினரும் இம்மறியலில் சேர்ந்து கொண்டு, ''போலீசாரின் உயிருக்குப் பாதுகாப்புக் கொடு!'' என்று முழக்கமிட்டனர். இந்து வெறியர்கள் அக்கூட்டத்தினுள் நுழைந்து முஸ்லிம்களுக்கு எதிராக ஆத்திரமூட்டினர்.

இதற்கிடையே முஸ்லிம்கள் நிறைந்துள்ள கோட்டைமேடு பகுதிக்கு நேரெதிரே வாழும் தாழ்த்தப்பட்ட மக்களிடம், ''முஸ்லிம்கள் உங்களைத் தாக்க வருகிறார்கள்'' என்று ஆத்திரமூட்டிய போலீசார், தாழ்த்தப்பட்ட மக்களோடு சேர்ந்து கொண்டு கற்களையும் சோடா பாட்டில்களையும் கோட்டைமேடு பகுதியை நோக்கி வீசினர். இதனால் அதிர்ச்சியடைந்த முஸ்லிம் இளைஞர்கள் தற்காப்புக்காக எதிர்த்தாக்குதலில் இறங்கினர். இதைச் சாக்காக வைத்து ''கோட்டை மேட்டில் முஸ்லிம்கள் போலீசாரையும் பொது மக்களையும் தாக்குகிறார்கள்'' என்று இந்து வெறியர்களும் போலீசு ரௌடிகளும் மறியலில் ஈடுபட்ட போலீசாரைத் தூண்டிவிட்டனர். எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல, ஏற்கனவே போலீசுக்காரர் கொலையால் முஸ்லிம்கள் மீது ஆத்திரமுற்று இருந்த போலீசாரை இது வெறி கொள்ளச் செய்தது. கோட்டைமேடு பகுதிக்கு வந்த போலீசார் முஸ்லிம்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். முன்னெச்சரிக்கையாக கண்ணீர் புகை வீச்சோ, வானத்தை

பெட்ரோல் ஊற்றி உயிருடன் எரிக்கப்படும் கொடூரம்: போலீசு ரவுடிகளின் வெறியாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com



போலீசு துப்பாக்கிச் சூட்டில் பலியான அப்பாவி முஸ்லிம்கள்: வார்த்தைகளை விஞ்சும் துயரம்

நோக்கிச் சுடுவதோ இல்லாமல் போலீசார் நடத்திய இத் துப்பாக்கிச் சூட்டில் தெருவில் நின்று கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

குண்டடி பட்டவர்களை அவசரமாக மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்ற போது, மருத்துவமனை வாயிலருகே போலீசு ரௌடிகளும் இந்து வெறி குண்டர்களும் அடங்கிய கும்பல் வழி மறித்துத் தாக்கத் தொடங்கியது. குற்றுயிராகக் கிடந்தவர்களைத் தடிகளாலும் அரிவாளாலும் இக்கும்பல் மிருகத்தனமாகத் தாக்கியதில், மூன்று பேர் அவ்விடத்திலேயே மாண்டனர். 12 வயது சிறுவன் குண்டுக் காயத்துடன் மருத்துவமனைக்குக் கொண்டு வரப் பட்டபோது, நெஞ்சிலே கொஞ்சமும் ஈரமின்றி இக்கும்பல் அச்சிறுவனை அடித்தே கொன்றது. இக்கொலைவெறித் தாக்குதலில் மயங்கி விழுந்து பின்னர் மெதுவாக எழுந்து உட்கார்ந்த ஒருவர் மீது ஒரு போலீசு வெறியன் தனது மோட்டார் சைக்கிளிலிருந்து பெட்ரோலை எடுத்து ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தினான். உயிரோடு எரிக்கப்படும் கொடுமையைக் கண்டு பதறி, காப்பாற்றச் சென்ற மருத்துவமனை ஊழியர்களை வன்முறைக் கும்பல் ஆயுதங்களைக் காட்டி அடித்து விரட்டியது.

குண்டடிபட்டவர்களை ஏற்றி வந்த வேன்களையும் ஆட்டோக்களையும் இரு சக்கர வாகனங்களையும் இக்கும்பல் அடித்து நொறுக்கி பெட்ரோலை ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தியது.

இச்சமயத்தில், மறைந்த போலீசுக்காரருக்கு அஞ்சலி செலுத்த மருத்துவமனைக்கு வந்த எம்.எல்.ஏ. தண்டபாணி மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு மருத்துவமனைக்குள் தப்பியோடினார். அவரது கார் மருத்துவமனையிலேயே வன்முறை கும்பலால் எரித்துச் சாம்பலாக்கப் பட்டது. அவரது அலுவலகமும் அடித்து நொறுக்கப்பட்டது. அதே நாளில் தி.மு.க. எம்.பி.யான மு. இராமநாதனின் வீட்டையும் இக்கும்பல் சூறையாடியது.

இன்னொரு கும்பல் மருத்துவமனைக்குள் புகுந்து, குண்டடிபட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த மூன்று முஸ்லிம்களைத் தேடிப் பிடித்து படுக்கையிலேயே வெட்டிக் கொன்றது. இதர முஸ்லிம் நோயாளிகளையும் தாக்கி அடித்து விரட்டியது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக கோவை மாவட்டச் செயலாளரான அயூப் கான், தாடையில் குண்டடிபட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரைக் கொல்ல இந்துவெறி கும்பல் தேடியலைந்த போது, மருத்துவமனை ஊழியர்கள் அவரை ஓர் அறையில் மறைவாக வைத்திருந்து தப்பிக்க வைத்தனர். அவருக்கு சிகிச்சை தரக்கூடாது என்று மருத்துவர்களை இக் கும்பல் ஆயுதங்களுடன் மிரட்டியது. இந்நேரத்தில் அயூப்கானைத் தேடி மருத்துவமனைக்கு வந்த அவரது சகோதரர் ஆரிப், இந்துவெறி குண்டர்களால் சரமாரியாக வெட்டிக் கொல்லப்பட்டார்.

ஒருபுறம் மருத்துவமனையில் கொலை வெறியாட்டம் நடந்து கொண்டிருந்த போதே மறுபுறம் போலீசாரும், இந்துவெறி குண்டர்களும் சமூக விரோதிகளும் கூட்டுச் சேர்ந்து முஸ்லிம் கடைகளையும் குடியிருப்புகளையும் குறி வைத்துத் தாக்கிச் சூறையாடத் தொடங்கினர்.

கோவை ஒப்பணக்கார வீதியில் உள்ள முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான, பிரபலமான "ஷோபா" துணிக் கடையின் பூட்டை போலீசாரே துப்பாக்கியால் உடைத்து உள்ளே புகுந்து சூறையாடினர். விலையுயர்ந்த துணிகளைக் கொள்ளையடித்து தமது வாகனத்திலேயே அள்ளிச் சென்றனர். இதைக் கண்டு தைரியம் அடைந்த சமூக விரோதிகளும் தம்பங்குக்குக் கொள்ளையடித்தனர். பின்னர் போலீசு ரவுடிகள் பெட்ரோலில் டயரை நனைத்து கடைக்குள் வீசி தீ வைத்தனர். ஷோபிகா துணைக் கடைய்ும், கனி ரேடியோ கடையும் இவ்வாறே சூறையாடப்பட்டது.

பூ மார்க்கெட் அருகிலுள்ள "சாய்ஸ் செப்பல்ஸ்", ஆர்.எஸ். புரத்திலுள்ள "டைட்டான்" கடிகாரக் கடை, "டாப் நாச்", "சோடியாக்" உள்ளிட்டு வெளிநாட்டுப் பொருட்களை விற்கும் கடைகள், மேசை - நாற்காலி - தரைவிரிப்புக் கடைகள், பிஸ்கட் பேக்கரிகள், சிறிய பெட்டிக் கடைகள், தள்ளு வண்டிகள் முதலான முஸ்லிம்களுக்குச் சொந்தமான அனைத்தும் சூறையாடப்பட்டு நாசமாக்கப் பட்டன. உக்கடம் பி - 1 போலீசு நிலையம் அருகிலுள்ள முகம்மது கனி ராவுத்தர் தெருவில் பெரும்பாலான முஸ்லிம் வீடுகள் இந்து வெறி குண்டர்களால் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. இத்தகைய அட்டூழியங்களை தடுத்து நிறுத்துமாறு போலீசிடம் முறையிட்ட போதிலும் போலீசார் பாராமுகமாகவே இருந்தனர். இதில் கொடுமை என்னவென்றால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், போலீசு ஆணையாளர் அலுவலகம் மற்றும் போலீசு நிலையங்களுக்கு மிக அருகிலேயே சூறையாடல்களும் தீ வைப்புகளும் நடந்தன.

போலீசு உதவிக் கமிசனர் மாசான முத்து, கோவையில் நடந்த வன்முறை - சூறையாடலுக்கு தலைமையேற்று வழிகாட்டியவர் என்று அம்பலப்பட்டுள்ள நிலையில், அவரை இடமாற்றம் செய்யுமாறு முதல்வர் உத்திரவிட்

போலீசு ரவுடிகளாலும் இந்துவெறிக் குண்டர்களாலும் சூறையாடப்பட்டுத் தீயிடப்பட்ட ஷோபா ஜவுளிக்கடை.





படிப்பகம்

www.padippakam.com

# போலீசு — அல் - உம்மா கூட்டு

**அல் - உம்மா என்ற முஸ்லிம் தீவிர வாத அமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நடுநிலையான முஸ்லிம்களும் பொது மக்களும் கடந்த சில ஆண்டுகளாக உக்கடம் பகுதியிலுள்ள பி - 1 போலீசு நிலையத்தில் பலமுறை புகார் கொடுத்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காரணம், அல் - உம்மா அமைப்பினருக்கும் போலீசாருக்கும் உள்ள கூட்டுதான். பல வருடங்களாக நீதிமன்ற வழக்கில் உள்ள கடைகளைக் காலி செய்ய அல் - உம்மாவும் போலீசாரும் சேர்ந்து கட்டைப் பஞ்சாயத்து நடத்துவது; மிரட்டிப் பணிய வைப்பது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் கைகோர்த்துத் திரிந்து வந்தனர். இதில் போலீசாருக்கு கொழுத்த மாமூலும், கமிசனும் கிடைத்து வந்ததால் அல் - உம்மாவுடன் தோளோடு தோள் உரசித் திரிந்தனர். இதனாலேயே இவ்வமைப்பினர் மீதான புகார்களைப் போலீசார் கண்டு கொள்ளவில்லை. அதே போல அல் - உம்மா அமைப்பினருக்கும் போலீசுத்துறை மீது அச்சமும் இல்லை.**

டுள்ள போதிலும் போலீசு உயரதிகாரிகள் அதைச் செயல்படுத்தவில்லை. மாசானமுத்துவும் ஆய்வாளர் மரளியும் இந்து வெறியர்களுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள். இவர்கள் கோவையின் வேறுபகுதியில் செயல்பட்டாலும் கலவரம் தொடங்கியதும் உக்கடம் பகுதிக்கு வந்து திட்டமிட்டு போலீசாரைத் தூண்டி, வன்முறை - சூறையாடலுக்குத் தலைமையேற்று வழிநடத்தியுள்ளனர்.

கோவை மாகநரின் மையப் பகுதியில் வன்முறை வெறியாட்டம் கோரத் தாண்டவ மாடிய அதே நேரத்தில் காந்திபுரம், கணபதி, சுந்தரபுரம், பீளமேடு, இராமநாதபுரம், செம்பட்டி காலனி, செல்வபுரம், லாலிரோடு முதலான பகுதியிலும் தீ வைத்தல், சூறையாடல், கொள்ளை, கொலைகளில் இந்து வெறியர்கள் இறங்கினர்.

லங்கர் கானா பள்ளி வாசலுக்குள் நுழைந்த இந்துவெறி குண்டர்கள், வளாகத்தில் இருந்த மூன்று கார்களையும், இரு சக்கர வாகனங்களையும் அடித்து நொறுக்கி தீயிட்டுக் கொளுத்தினர். இம்மசூதியில் வைக்கப்பட்டிருந்த வழிபாட்டு நூல்களைக் கொளுத்தியதோடு, மசூதியையும் சேதப்படுத்தி வெறியாட்டம் போட்டனர். முஸ்லிம்களின் 25-க்கும் மேற்பட்ட கார்கள், 50 ஆட்டோக்கள், 30 இரு சக்கர வாகனங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட தள்ளு வண்டிகள், கணக்கற்ற சைக்கிள்கள் இந்துவெறி குண்டர்களால் தீயிடப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன. இந்த நாசகாரித்தனத்தால் ரூ. 500 கோடிக்கும் மேலாக முஸ்லிம் மக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

மூன்று நாட்களாக கோவையில் கலவரத் தீ பற்றி எரிந்த போது, ஒப்பணக்கார வீதியிலுள்ள குமரன் சில்க்ஸ், பெரிய கடை வீதியில் உள்ள ராஜேந்திரா அன் கோ ஜவுளிக் கடை, பொள்ளாச்சி மகாலிங்கத்தின் அனைத்து கடைகள், நிறுவனங்களுக்கும் இராணுவமும் அதிரடிப் படைகளும் பாதுகாப்பாக நின்றன. இந்நிறுவனங்கள் மட்டுமல்ல; இந்துக்களின் சொத்துக்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் முஸ்லிம்களால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. இத்தனைக்கும் முஸ்லிம்கள் பெருமளவில் உள்ள கோட்டை மேட்டைச் சுற்றிலும் 4 பெரிய இந்து கோயில்களும், 10,000-க்கும் மேற்பட்ட இந்துக்களும் அவர்களது வீடு, வியாபார நிறுவனங்களும் உள்ளன. ஆனாலும் முஸ்லிம்களால் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மதவெறியர்களைத் தவிர இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரத்துவமாகவே பழகி வருகின்றனர். துப்பாக்கிச் சூட்டில் பலியான முஸ்லிம்களின் சவ அடக்க ஊர்வலம் வீதி வழியே சென்ற போது, பல இந்துக்கள் குமுறி அழுதுள்ளனர் என்பதே இதற்கு சாட்சி.

கோவையில் நவம்பர் 29 முதலாக மூன்று நாட்களுக்கு நடந்த வன்முறை வெறியாட்டங்கள், நர வேட்டைகளின் போது எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஊமையாகி நின்று வேடிக்கை பார்க்கவே செய்தன. பின்னர் பொதுவாக மதவெறியர்களையும் வன்முறையையும் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டதோடு அவை அடங்கிவிட்டன. குறிப்பாக போலீசு ரவுடிகளும் இந்து வெறி குண்டர்களும் நடத்திய கொலை வெறியாட்டத்தைப் பற்றி அவை வாயே திறக்கவில்லை.

ஓட்டுக் கட்சிகளின் கையாலாகத்தனத்தைக் கண்டு உத்வேகமடைந்துள்ள இந்து வெறியர்கள், ''துலுக்க நாயே! போலீசுடன் சேர்ந்து உதைத்தது போதாதா? இன்னும் வேண்டுமா? கோட்டைமேட்டில் உன் தீவிர வாதம் பலிக்காது. இனி கோட்டை மேட்டிலும் எங்கள் கரசேவை தொடரும்'' என்று திமிராக சுவரொட்டிகளை அண்மையில் ஒட்டியுள்ளனர்.

''இனி எங்களுக்கு என்ன இருக்கிறது? இனி நாங்கள் எப்படி நிம்மதியாக வாழ முடியும்?'' என்று துயரமும் துக்கமும் பொங்க முஸ்லிம்கள் கேட்கிறார்கள். ''அரசியல் கட்சிகளோ, அரசாங்கமோ, போலீசோ எங்களைக் காப்பாற்ற முன்வராத போது, இத்தகைய இழப்பையும், அவமானத்தையும் தாங்கிக் கொண்டு நாங்கள் இன்னமும் எப்படி வாழ்வது?'' என்று குமுறுகிறார்கள்.

மனித உணர்வுள்ள ஒவ்வொருவருக்கும் விடப்பட்டிருக்கும் சவால் இது. இந்து வெறி குண்டர்களாலும் போலீசு ரவுடிகளாலும் ஏற்பட்ட இந்த அவமானத்தை நாம் துடைத்தெறிவது எப்போது?

— கோவையிலிருந்து
நமது நிருபர்கள்

# தாழ்த்தப்பட்டோர் படித்துப் பட்டம் வாங்குவது குற்றமாம்!

**துறையூருக்கு அருகிலுள்ள பள்ளப் பெருமாள்பட்டி எனும் ஊரைச் சேர்ந்த 10-15 தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள். இவ்விளைஞர்கள் தினமும் அவ்வூரில் உள்ள அரசுப் பள்ளியிலும், நூல் நிலையத்திலும் சந்தித்துப் பேசிக் கொண்டிருப்பர். அவ்விளைஞர்கள் படித்துப் பட்டம் பெற்றிருப்பதையும் நாகரிகமாக உடை அணிவதையும் மேல்சாதி வெறியர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.**

**"அவ்விளைஞர்கள் அரசுப் பள்ளிக்குச் சென்று அமர்ந்து பேசக் கூடாது" எனத் தடையுத்தரவு போட்டு தங்களின் மேல் சாதி வக்கிர புத்தியைக் காட்டிக் கொண்டனர், அவர்கள். முன்னாள் உப்பிலியபுரம் ஒன்றியப் பெருந் தலைவர் நடராஜனின் மகனான ரமேஷ்தான் இந்த உத்தரவைப் போட்டவன். சத்தியசீலன் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞர், உத்தரவு போட்ட ரமேஷை "இதைச் சொல்ல நீ யார்?" என எதிர்த்துக் கேட்டு விட்டார். இதனால் ஆத்திரமுற்ற ரமேஷ், "பறப்பயலுக்கு இவ்வளவு துணிச்சலா?" என அவமானப்படுத்தி சத்தியசீலனை அடித்து விட்டான். மேலும், சத்தியசீலன் உள்பட 7 தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீது பொய் வழக்குப் போட்டு, அவ்விளைஞர்கள் தற்போது நிபந்தனை பிணையில் விடுதலையாகியுள்ளார்.**

**மேல்சாதி வெறியர்களுக்கு தி.மு.க. அமைச்சர் கே.என். நேருவின் ஆதரவு உள்ளது. இதனால், தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் திருச்சி தீண்டாமை ஒழிப்புப் பிரிவில் புகார் கொடுத்தும், அதிகார வர்க்கம் அசைந்து கொடுக்கவில்லை. தகவல்: பொம்மன், காளிப்பட்டி.**

# விலையேற்ற அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

**புதிய ஜனநாயகம் இதழின் விலையை ரூ. 4.00 ஆக வருமிதழிலிருந்து உயர்த்துவதெனத் தீர்மானித்துள்ளோம். உழைக்கும் மக்கள் வாங்கிப் படிக்கும் நோக்கத்தோடு இயன்ற அளவு குறைந்த விலையில் வெளியிட நாங்கள் எவ்வளவுதான் முயன்ற போதிலும், தீவிரமாகிவிட்ட விலைவாசி ஏற்றத்தால் இதழின் விலையை உயர்த்துவதைத் தவிர்க்க இயலவில்லை.**

**மற்ற பெரிய பத்திரிகைகளைப் போல மலிவு விலை காகித ஒதுக்கீடோ, விளம்பரங்களோ இல்லாமல் நடத்தப்படும் நமது இதழின் விலையை 50 காசுகள் மட்டுமே உயர்த்தியுள்ளோம்.**

**தவிர்க்கவியலாத இந்த விலையேற்றத்தை அங்கீகரித்து தொடர்ந்து ஆதரவளிக்குமாறு கோருகிறோம்.**

**— ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி — இம் மூன்று புரட்சிகர அமைப்புகளும் இணைந்து தமிழகமெங்கும் கடந்த நான்கு மாதங்களாக நடத்தி வரும் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தையொட்டி, பென்னாகரம் மற்றும் காரப்பட்டில் கோயில் நுழைவுப் போராட்டமும், பென்னாகரத்தில் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போராட்டமும், பண்ணைப்புரம் மற்றும் பல்ல வராயன்பட்டி பகுதியில் தனி தேநீர்க்குவளை - செருப்பு போடத் தடை போன்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட்டங்களும் அறிவிக்கப்பட்டு நடைபெற்றன.

# தீண்டாமைக்குத் தீயிடுவோம்

## காரப்பட்டு - கோயில் நுழைவுப் போராட்டம்

### தாழ்த்தப்பட்டவருக்கு சாமி வந்து சாதி வேண்டாம் என்றது! சாதி வெறியர்களுக்கு சாமி வந்து சாதி வேண்டும் என்றது!

விழுப்புரம் நகரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள காரப் பட்டு கிராமத்தில் அமைந்திருக்கும் முத்துமாரி அம்மன் கோயிலினுள் நவம்பர் 7 - ரசியப் புரட்சி நாளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தலைமையேற்று நுழையப் போவதாக அறிவித்தது விவசாயிகள் விடு தலை முன்னணி. இப்போராட்ட அறிவிப்பைக் கேட்டு ஆத்திரமுற்ற மேல்சாதி வெறியர்களுள் ஒருவனான பெருமாள், ஊர் கூட்டத்தைக் கூட்டி, ''கோயில் நுழைவுப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண் டும்'' என சாதி வெறியைக் கக்கினான். காரப்பட்டைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சாதி வெறியர்கள், நிலப்பிரபுக்களோடு, பகுதி சட்டமன்ற உறுப்பினரையும் சந்தித்து, போராட்டத்தைத் தடுத்துவிட ஆதரவு திரட்ட முயற்சித்தான்.

அம்முயற்சிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததால், பலரின் ஆலோசனைப்படி, வி.வி.மு.வுடன் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தான். போராட்டத்தை விட்டுக் கொடுக்க வி.வி.மு. சம்மதிக்காத தால், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கிராமத் தலைவரிடம் கோயில் சாவியைக் கொடுத்துவிட்டுத் தோற்றோடிப் போனான்.

நவம்பர் 7 அன்று காலையில் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகே அசுர கானம் ஒலித்தது. கோயில் நுழைவு போராட்டம் பற்றி நடந்த பொதுக்கூட்டத்திற்கு வி.வி.மு. தோழர் அம்பேத்கர் தலைமை தாங்கினார். வி.வி.மு. செயலர் தோழர் நாராயணன் சாதி - தீண் டாமை பற்றியும், போராட்டத்தின் அவசியம் குறித்து விளக்கிப் பேசி னார். பொதுக் கூட்டத்தின் பின் தோழர் நாராயணன் தலைமையில் 200-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் முத்துமாரியம்மன் கோயிலுனுள் நுழைந்தனர்.

கை நிறைய சூடத்தோடு உள்ளே நுழைந்த தாழ்த்தப்பட்டோர், அம்மனின் முன் கற்பூரத்தைக் கொளுத்தி, திருநீறை அள்ளிச் சென்ற னர். அங்கே கற்பூரத்தோடு, பார்ப்பனர்களும், பிற மேல்சாதிக்காரர்க ளும் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வந்த தனியுரிமையும் சேர்ந்தே எரிந்தது. இதைக் கண்டு அந்த அம்மனும் முகத்தைத் திருப் பிக் கொள்ளவில்லை. தாழ்த்தப்பட்ட பெண் ஒருவர் மீது வந்த சாமி, ''இப்ப எப்படி எல்லா மக்களும் வந்து படையல் செஞ்சிங்களோ, இதே மாதிரி எல்லா மக்களும் சேர்ந்து படையல் போட்டாதான்டா நான் ஏத்துக்குவேன்'' எனக் கூறியது.

அதே சமயம் பெருமாள் வீட்டில் ரெட்டியார் சாதியைச் சேர்ந்த ஆள் மீது வந்த சாமி, ''என் உடம்பு பூரா எரியுதுடா! என் ஆலயத்த மிதிச்சுடானுவ, என்னால உள்ள இருக்க முடியல, நான் வெளியி லேயே சுத்தறன்டா!'' எனக் கூறியுள்ளது. நாயுடு சாதியைச் சேர்ந்த ஒருவர் மீதும், வன்னிய சாதியைச் சேர்ந்த பெண் மீதும் வந்த சாமி, ''டேய், கூடிய சீக்கிரம் அவனவனுக்குத் தண்டனை கொடுக்கிறேன் டா'' எனச் சபதம் எடுத்துக் கொண்டதாம்!

## பென்னாகரம் - கோயில் நுழைவுப் போராட்டம்

### நந்தனின் கனவு நனவாகியது

பென்னாகரத்திற்கு அருகே 20 கி.மீ. தொலைவில் உள்ள ஏரியூர் - செல்வ விநாயகர் கோயிலில் நுழையும் போராட்டத்தையும், பென் னாகரம் கிருஷ்ணாபுரம் பகுதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் போராட்டத்தையும் 25.11.97 அன்று நடத்தப் போவதாக வி.வி.மு. அறிவித்தது. இவ்விரு போராட்டங்க ளுக்கும் ஆதரவாக தாழ்த்தப்பட்டோரையும், மேல் சாதியைச் சேர்ந்த சனநாயக சக்திகளையும் அணி திரட்டும் முகமாக, அப்பகுதியெங்கும் பிரச்சாரத்தை பல வடிவங்களில் வீச்சாக எடுத்துச் சென்றனர், வி.வி.மு. தோழர்கள்.

சொன்னதைச் செய்து காட்டும் செயல் திறன் கொண்ட அமைப்பு எனப் புரிந்து கொண்டிருந்த அதிகார வர்க்கக் கும்பல், போராட்டத் தைத் தடுத்தும்விடும் நோக்கத்தோடு பேச்சு வார்த்தைக்கு அழைத் தது. 24.11.97 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் வி.வி.மு., தாழ்த்தப்பட்டோர் மற்றும் மேல் சாதியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தைக்குத் தலைமை தாங்கிய வட்டாட்சியர் ராஜ் மோகன், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்தைத் தடுத்துவிடும் நோக்கத்தோடு, ''தண்ணீர் எடுக்கும் தாழ்த்தப்பட் டோர் தடுக்கப்படவில்லை'' என்ற அண்டப்புளுகை அவிழ்த்து விட் டார். இதற்கு ஆதரமாக, பென்னாகரம் பகுதியில் இயங்கி வரும் அம்பேத்கர் மக்கள் கட்சியைச் சேர்ந்த செ. குருநாதன் என்ற பிழைப்பு வாதி எழுதிக் கொடுத்த கடிதத்தைத் தூக்கிப் போட்டார். மேலும், ஒரு தலைபட்சமாக தண்ணீர் எடுக்கும் போராட்டத்தைத் தடை செய்யும் ஆணையிட்டது அரசு தரப்பு. பேச்சு வார்த்தை எதிர்பார்த்தபடி தோல் வியடையவே, பேச்சு வார்த்தைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த இரு போராட்டங்களும் 28.11.97 அன்று நடைபெறும் என அறிவித்தது, வி.வி.மு.

28.11.97 — பென்னாகரத்தைச் சுற்றி வாழும் தாழ்த்தப்பட்டோ ருக்கு மறக்க முடியாத நாள்; சனாதனிகளுக்கு... அது நிச்சயம் மறக் கப்பட வேண்டிய நாள்.

பென்னாகரத்தில் கூடிய வி.வி.மு.வைச் சேர்ந்த 75 தோழர்கள், எதிரியின் கோட்டையை நோக்கிச் செல்லும் செம்படையைப் போல, சாதி ஆதிக்கத்தை எதிர்த்து விண்ணதிர முழக்கமிட்டபடி எரையூரை நோக்கிச் சென்றனர். எரையூரை அடைந்தவுடன், அவர்களோடு எரையூர் பகுதியைச் சேர்ந்த 125 தாழ்த்தப்பட்டவர்கள் (பறையர் மற்றும் சக்கிலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள்) இணைந்து கொண்டனர். தங்களின் சனநாயக உரிமைகளுக்காக, தாழ்த்தப்பட்டோர் மா-லெ புரட்சியாளர்கள் தலைமையில் அணி வகுத்து நின்றனர்.

எரையூரின் எல்லையில் இருந்து வி.வி.மு. தோழர்களும் தாழ்த் தப்பட்டோரும் தங்கள் உரிமைகளுக்காக எதையும் சந்திக்கும் துணி வோடு முழக்கமிட்டபடியே செல்வ விநாயகர் கோயிலை நோக்கி ஊர்வலமாகச் செல்ல, அங்கோ 300 பேர் கொண்ட பெரும் போலீசு பட்டாளமொன்றை நிறுத்தியது மாவட்ட நிர்வாகம். மேல்சாதி வெறி



படிப்பகம்

www.padippakam.com

யர்களும், ''வரட்டும்; ஒரு கை பார்த்து விடலாம்'' என வெறியோடு காத்து நின்றனர்.

''வி.வி.மு. தோழர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்டோர் கோயிலினுள் நுழைந்து விடுவார்களா? அல்லது போலீசு தடுத்துக் கைது செய்யுமா? மேல்சாதி வெறியர்கள் மோதலைத் தூண்டி விடுவார்களா?'' - இப்படி பல கேள்விகளோடு 2000-க்கும் மேற்பட்ட பொது மக்கள் பதைபதைப்போடும், ஆர்வத்தோடும், ஊர்வலம் சென்ற வழியெங்கும் மரங்களின் மீதும், வீட்டுக் கூரைகளின் மீதும் ஏறி நின்று கொண்டு கோயில் நுழைவு போராட்டத்தைப் பார்த்தனர்.



காரப்பட்டு கோயில் நுழைவுப் போராட்டத்தின் வெற்றி வீரர்களான வி.வி.மு. தோழர்கள்.

எழுச்சியுடன் வந்த ஊர்வலத்தைத் தடுக்க வழியின்றி ஒதுங்கி வழிவிட்டது போலீசு. ஊர்வலத்துக்குத் தலைமையேற்ற வி.வி.மு. தோழர் சிவாஜி கோயில் படியில் முதல் அடியை எடுத்து வைக்க, நாலாதிக்கில் இருந்தும் பெரும் ஆரவாரமும் கரவோலியும் போராட்டத்தின் வெற்றியை எரையூரையும் தாண்டி எடுத்துச் சென்றன. தயங்கி நின்ற தாழ்த்தப்பட்டோர் கூட, உணர்ச்சி உந்தித் தள்ள போராட்டக்காரர்களோடு சேர்ந்து கோயிலினுள் நுழைந்தனர்.

தாழ்த்தப்பட்டோரின் முகங்களில் மகிழ்ச்சியும், வெற்றிப் பெருமிதமும் குடி கொண்டிருக்க, மேல்சாதி வெறியர்களின் முகங்களில் சவக்களைத் தாண்டவம் ஆடியது. ''பல பட்டறை கட்சி'', ''சக்கிலிப்பய கட்சி'' - இப்படி வி.வி.மு.வின் மீது வசை மாரி பொழிந்துதான், அவர்களால் தங்கள் தோல்வியை மறைத்துக் கொள்ள முடிந்தது; ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள முடிந்தது.

## பென்னாகரம் - பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போராட்டம்

**தோழர்கள் கைது! தமிழக அரசின் ஆதரவோடு தொடரும் தீண்டாமைக் கொடுமை!!**

எரையூரில் கோயில் நுழைவுப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய பின், பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போராட்டத்திற்காக பென்னாகரம் திரும்பினர், வி.வி.மு. தோழர்கள். பென்னாகரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து, கிருஷ்ணாபுரம் பகுதியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றை நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்ற தோழர்களை போலீசு தடுத்து நிறுத்தியது. தடையை மீறி வி.வி.மு. தோழர்கள் 75 பேர் கிணற்றை நோக்கிச் செல்ல, அங்கோ, மேல் சாதியைச் சேர்ந்த பெண்கள், கிணற்றைச் சுற்றி வளையமாக நின்று கொண்டனர். வி.வி.மு. அமைப்பையும், தோழர்களையும் ஆபாசமாகத் திட்டியதோடு, ஆபாச சைகைகளைக் காட்டியும் அவமானப்படுத்தினர். தண்ணீர் எடுப்பதற்குக் கொண்டு சென்ற வாளியைப் பறித்துத் தூக்கி எறிந்தனர். மாது என்ற மேல் சாதி வெறியன் அந்த வாளியை அடித்து நொறுக்கி வீசியெறிந்தான்.

மேல்சாதி வெறியர்களின் இக்கொட்டங்களை எல்லாம் கைகட்டி வேடிக்கை பார்த்தது தமிழக போலீசு. ''வாளியை அடித்து நொறுக்கியவனைக் கைது செய்'' என முழக்கமிட்ட தோழர்களைக் கைது செய்து, வழக்குப் பதிவு செய்துள்ளது 'சமத்துவபுரம்' காணும் கருணாநிதியின் காவல்துறை. தி.மு.க. மட்டுமல்ல, ''தீண்டாமையை ஒழிப்போம்'' எனக் கூப்பாடு போட்டு வரும் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் தீண்டாமையை எதிர்த்து நடந்த இப்போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கவில்லை.

## பண்ணைப்புரம் - தனி தேநீர்க் குவளைகளை நொறுக்கும் போராட்டம்

**மேல்சாதி வெறியர்களுக்கு அடியாளாக மாறிய தமிழகப் போலீசு**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் பண்ணைப்புரம், ரோட்டுப்பட்டி, நாராயணத் தேவன்பட்டி, சிந்தலைச்சேரி, பொட்டிப்புரம், பல்லவராயன்பட்டி, வெள்ளையம்மாள்புரம் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு தனித் தேநீர்க் குவளை - ஊரில் செருப்பு போடத் தடை போன்ற தீண்டாமைக் கொடுமைகள் தொடருவதை அம்பலப்படுத்திய விவசாயிகள் விடுதலை முன்னணி, இதற்கு எதிராக பண்ணைபுரத்திலும், பல்லவராயன்பட்டியிலும் அக்டோபர் 31-ஆம் தேதி போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது.

போராட்டம் அறிவிக்கப்பட்டவுடனேயே மேல்சாதி வெறியர்களைக் காப்பாற்றிவிட மும்முரமாக முயன்றது தமிழகப் போலீசு. பண்ணைபுரத்தில் தேநீர்க் கடை நடத்தும் ஜெயச்சந்திரன், மகராசனிடம், ''எங்கள் கடையில் தனி தேநீர்க் குவளை இல்லை'' என்றும், பல்லவராயன்பட்டியில் அம்பலகார சாதியினரிடம், (த.மா.கா. தலைவர் எம். பாண்டியன்தான் அம்பலக்கார சாதி சமூகத்துக்கும் தலைவர்) ''எங்கள் ஊரில் செருப்புப் போட்டு நடக்கத் தடை விதிக்கவில்லை'' என்றும் எழுதி வாங்கிக் கொண்டு, ''தீண்டாமைக் கொடுமையில்லை'' என்று பாளையம் வட்டாட்சியரும், போடி போலீசு துணைக் கண்காணிப்பாளரும் நற்சான்றிதழ் வழங்கினர். மறுபுறம் போராட்டத்திற்கு முன்பே 11 தோழர்களைக் கைது செய்து, சிறையில் அடைத்தது கோம்பை போலீசு.

போராட்டத்திற்கு முதல் நாள் தேவர் (பிரமலைக்கள்ளர்) சாதி ஆதிக்க வெறியர்களான மகராசன் - ஜெயச்சந்திரன் கும்பல், மேல் சாதி வெறியர்களைத் திரட்டி வந்து பண்ணைபுரத்தில் இருந்த போராட்ட அறிவிப்பு தட்டிகளை எல்லாம் அடித்து நொறுக்கி எரித்து விட்டனர். போராட்ட நாளன்று (31.10.97) பண்ணைபுரம் பேருந்து நிலையத்தில் போராட்டத்தின் நியாயம் குறித்துப் பொது மக்கள் மத்தியில் வி.வி.மு. தோழர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது, கம்பு, கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களோடு வந்த மேல்சாதி வெறிக் கும்பல், கூட்டத்தின் மீது கற்களை வீசியெறிந்து கலாட்டா செய்தனர். ''பள்ளனுக்கும் பறையனுக்கும் என்னடா சமஉரிமை கேட்குது?'' என இழிவுபடுத்தி தோழர்களை ஆயுதங்களால் தாக்க முற்பட்டனர்.

மேல்சாதி வெறியர்களின் வன்முறை வெறியாட்டத்தை வேடிக்கை பார்த்த போலீசு, ''கடப்பாறை - வீச்சரிவாளுடன் பொது சொத்தை சேதப்படுத்தினார்கள்'' என வி.வி.மு. தோழர்கள் மீது பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்து விட்டது. பல்லவராயன்பட்டியிலும், வி.வி.மு. தோழர்கள் செருப்புக் காலுடன் ஊருக்குள் நுழைந்தால் அவர்களைத் தாக்க அம்பலக்கார சாதி வெறியர்கள் அணி திரட்டப்பட்டிருந்தனர். அச்சாதி வெறியர்களுக்கு எவ்விதச் சிரமமும் தராமல் பண்ணைபுரத்திலேயே தோழர்களைக் கைது செய்து விட்டது போலீசு. கோம்பை போலீசு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட தோழர்களை மேல்சாதி வெறி கொண்ட கோவிந்தசாமி, ராமசாமி, குமரன் என்ற மூன்று போலீசார் சாதிப் பெயரைச் சொல்லி அவமானப்படுத்தியும், ஆபாசமாகத் திட்டியும் மிருகத்தனமாகத் தாக்கினர்.

தகவல்:
ம.க.இ.க. — பு.மா.இ.மு. — வி.வி.மு., தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com



## கிரிமினல் அரசியலின் புதிய பரிமாணம்

கடந்த நவம்பர் 19-ஆம் நாளன்று ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத் அருகே நடந்த கோரமான குண்டு வெடிப்புப் படுகொலையைக் கண்டு அம்மாநிலமே பீதியில் உறைந்து போயுள்ளது. திரைப்படத் தொடக்க விழாவுக்கு வந்திருந்த தெலுங்கு தேச எம்.எல்.ஏ.வான பரிதலா ரவியைக் குறிவைத்து நடத்தப்பட்ட இக்குண்டுத் தாக்குதலில் அவரும், பிரபல நடிகரும் நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான மோகன் பாபுவும் மயிரிழையில் உயிர் தப்பினர். அதேசமயம் இக்குண்டு வெடிப்பில் 25 பேர் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் ஈநாடு தொலைக்காட்சி நிறுவன ஊழியர்களாவர்.

தெலுங்கு தேசக் கட்சிக்குள் நடக்கும் கோஷ்டிச் சண்டையின் வெளிப்பாடுதான் இக்குண்டு வெடிப்பு. மேலும், இத்தகைய பயங்கரவாத வன்முறை வெறியாட்டங்கள் முதன் முறையாக நடப்பதும் அல்ல. ஏற்கனவே 1993-இல் சிவா ரெட்டி என்ற தெலுங்கு தேச எம்.எல்.ஏ. குண்டு வைத்துக் கொல்லப்பட்டார். 94-ல் ராயலசீமா பகுதியில் இரு முக்கிய பிரமுகர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர். 95-ல் கர்னூல் மாவட்ட தெலுங்கு தேசக் கட்சியின் ஒரு கோஷ்டித் தலைவர் குண்டு வீசிக் கொல்லப்பட்டார். கடந்த ஆண்டில் அனந்தபூரில் ஒரு கோஷ்டியைச் சேர்ந்த மூன்று முக்கியப் பிரமுகர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.



25 பேரைப் பலிகொண்ட ஆந்திர குண்டு வெடிப்பு: கிரிமினில் அரசியலின் கோரம்.

வட மாநிலங்களுக்கு இணையாக கிரிமினல் அரசியலில் நுழைந்து விட்ட ஆந்திராவில், காங்கிரசு மற்றும் தெலுங்கு தேசக் கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி சண்டைகள் பயங்கரவாத வன்முறை மூலமே தீர்க்கப்படுகின்றன. தற்போதைய குண்டுத் தாக்குதலுக்குக் காரணமானவராகக் கருதப்படும் பெனுகொண்டா தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ.வான ரமணா ரெட்டி, தற்போதைய எம்.எல்.ஏ.வான ரவியின் பரம்பரை எதிரியாவார். ரமணா ரெட்டியின் தந்தையும், சகோதரரும் ரவி கோஷ்டியினரால் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக ரவியின் தந்தையும், சகோதரரும் அடுத்தடுத்து ரமணா கோஷ்டியால் கொல்லப்பட்டனர். அதன் தொடர்ச்சியாகவே ரவி தலைக்கு குறிவைத்து தற்போதைய குண்டுவெடிப்பு நடந்துள்ளது.

கிரிமினல்களாக பயங்கரவாத வெறியாட்டம் போடும் இக்கொலைகாரர்கள் தான், நக்சல்பாரி புரட்சியாளர்களை வன்முறையாளர்கள் என்று அவதூறு செய்கிறார்கள். அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குகிறார்கள்.

## மாஃபியா - போலீசுக்கு எதிராக பழங்குடியினரின் போராட்டம்

மத்தியப் பிரதேசத்தின் மேற்கு மாவட்டமான நிமத் பிராந்தியம், பழங்குடியின மக்களின் போராட்டத்தால் கொதிநிலையில் உள்ளது. ஆதிவாசி முக்தி மோர்ச்சா (AMS) எனும் அமைப்பில் திரண்டுள்ள பழங்குடியினர் வனத்துறை, வருவாய் துறை ஊழியர்கள் லஞ்சம் பறிப்பதை எதிர்த்தும் கள்ளச் சாராயம், மூங்கில் கடத்தும் மாஃபியாக்களுக்கு எதிராகவும், கந்து வட்டிக் கொடுமைகளுக்கெதிராகவும் கடந்த ஓராண்டு காலமாகப் போராடி வருகின்றனர். சில இடங்களில் குற்றவாளிகளைக் கையுங்களவுமாகப் பிடித்து தண்டிக்கவும் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த மாஃபியா அரசியல்வாதிகள் - அதிகாரிகள் - போலீசார் கூட்டுச் சேர்ந்து பழங்குடியினர் மீது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

ம.பி. மாநிலத் துணை முதல்வரும், மாஃபியா குண்டர்படைத் தளபதியுமான சுபாஷ் யாதவ், ஆதிவாசி சாந்திசேனா என்ற போட்டி அமைப்பை நிறுவி சீர்குலைவு, தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். சாந்திசேனா குண்டர்கள் ஆதிவாசி முக்திமோர்ச்சா இயக்கத்தின் செயல் வீரர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் ரகசியமாக கொன்றொழித்து வருகின்றனர். பெண்களைக் கடத்திச் சென்று பாலியல் வன்முறையை ஏவுவது, குடிசைகளுக்குத் தீ வைப்பது என அக்கும்பல் அட்டூழியங்களில் ஈடுபட்டு வருகிறது.

இக்கும்பலுக்கு ஆதரவாகச் செயல்படும் போலீசார், காட்டு நிலங்களைப் பயன்படுத்தும் பழங்குடி மக்கள் லஞ்சம் கொடுக்க மறுத்துப் போராடிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய மூவரைக் கொன்றதோடு, பலரைப் படுகாயப்படுத்தியுள்ளனர். பழங்குடியினர் பயிரிட்ட நிலங்களைப் பாழாக்கியதோடு, முன்னணியாளர்கள் மீது பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்துள்ளனர். சாந்திசேனா குண்டர்களின் அட்டூழியங்களுக்கு ஆதிவாசி முக்தி மோர்ச்சா இயக்கத்தினரைக் கைது செய்வது போலீசாரின் வாடிக்கையாகி விட்டது.

சாந்திசேனா குண்டர்களின் அட்டூழியம், போலீசாரின் அடக்குமுறை காரணமாக பழங்குடியினர் கிராமங்களை விட்டுத் தப்பியோடி காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். சிலர் நகரங்களுக்கு ஓடிவிட்டனர். ஆதிவாசி முக்தி மோர்ச்சா இயக்கம் தன்னார்வக் குழுக்களால் வழிநடத்தப்படும் இயக்கம் தான். ஆனால் அது நடத்தும் பொருளாதார - ஜனநாயக உரிமைக்கான போராட்டங்களைக் கூட மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது ம.பி.யை ஆளும் காங்கிரசு கயவாளிகளின் அரசு.

## அமெரிக்க ஓநாயின் அடாவடித்தனம்

ஆடு மீது சட்டப்படி குற்றம் சாட்டி அடித்துக் கொன்ற ஓநாயைப் போல, அமெரிக்க மேலாதிக்க வல்லரசு இந்தியா மீது குற்றம் சாட்டி இந்தியாவிலிருந்து இறால் மீன்கள் இறக்குமதிக்கு அண்மையில் தடை விதித்துள்ளது. ''இறால் மீன்பிடிப்பின் போது கடல் ஆமைகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, ஒரிசா கடற்கரைப் பகுதியிலுள்ள ஆலிவ் ரிட்லே (Olive Ridley) எனப்படும் அரிய கடல் ஆமைகள் இனம் அழிகின்றன'' என்று அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. ஒரிசா கடற்கரையில் 5000 கடல் ஆமை முட்டைகள் கடந்த ஆண்டில் சிதைந்துள்ளதாக இந்திய வனத்துறை அறிவித்தது. இதை மேற்கோள் காட்டி, இந்திய அரசு அரிய கடல் ஆமை இனத்தைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி, தனது நாட்டின் சட்டப்படி - அதாவது அரிய விலங்கினப் பாதுகாப்புச் சட்டப்படி அமெரிக்கா இந்நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

இந்தியாவின் அரிய கடல் ஆமைகள் மீது அமெரிக்காவுக்கு என்ன அக்கறை? இதற்கும் இறக்குமதி தடைக்கும் என்ன சம்பந்தம்? என்று ஒருவர் கேட்கலாம். ஆமை என்பது இடம் பெயரும் உயிரினம் என்பதாலும் இக்குறிப்பிட்ட வகை ஆமைகள் அரிதானவை என்பதாலும் அது பூவுலகின் சொத்து என்கிறது அமெரிக்கா. எனவே இவ்வரிய ஆமைகளைப் பாதுகாக்க தனது நாட்டு சட்டப்படி இறக்குமதி தடை நடவடிக்கையை மேற்கொண்டதில் தவறேதுமில்லை என்று வாதிடுகிறது அமெரிக்கா.

ஆனால் ஆமை முட்டைகள் மீனவர்களால் ஒருபோதும் சிதைக்கப்படுவதில்லை என்பதே உண்மை. இயற்கை சூழ்நிலைகளாலும், கடல் மணல் சரிவு காரணமாகவும் தான் முட்டைகள் உடைகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

மேலும் ஆமைகள் சிறிய மணற் குழியில் ஒன்றன் மேல் ஒன்றாகத் தான் முட்டைகளை இடும். இதனால் அழுத்தம் காரணமாக பல முட்டைகள் அழிகின்றன என்று கடல்வாழ் உயிரின ஆராய்ச்சியாளர்கள் தெளிவாகக் கூறிய போதிலும், அமெரிக்கா இதை ஏற்க மறுக்கிறது. மேலும் ஆழ்கடலில் ''ட்ராலிங்'' முறையில் மீன் பிடித்தால் மட்டுமே கடல் ஆமைகளுக்குப் பாதிப்பு ஏற்படும். சிறிய படகுகள் மூலம் மீன் பிடிக்கும் ஏழை இந்திய மீனவர்களால் ஆமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட அடிப்படையே இல்லை என்பதை சுற்றுச் சூழல் வாதிகளும், மீன்வள ஆராய்ச்சியாளர்களும் அறுதியிட்டுக் கூறுகின்றனர். ஆனாலும் அமெரிக்கா இதை ஏற்க மறுக்கிறது. அதன் கைப்பாவையான உலக அரிய விலங்கின காப்பு நிதியம் (WWF) அமெரிக்காவின் வாதத்தை அங்கீகரித்து நியாயப்படுத்துகிறது.

இந்தியா மீதான அமெரிக்காவின் தடையைக் கண்டு, அடுத்து தம் மீதும் இத்தகைய தாக்குதல் வரலாம் என்று பீதியடைந்துள்ள பாகிஸ்தான், வங்கதேசம், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகள் அமெரிக்காவின் அடாவடித்தனத்தை எதிர்த்து உலக வர்த்தக கழகத்திடம் (WTO) இந்தியாவுடன் சேர்ந்து முறையிட்டுள்ளன. பூவுலகின் மூலாதாரங்களைச் சுரண்டிக் கொண்டே யோக்கியனாக நாடகமாடும் அமெரிக்காவின் அயோக்கியத்தனத்தையும் அடாவடித்தனத்தையும் ஒரிசா மீனவர்கள் கடலில் தமது படகுகளில் பேரணி நடத்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## பீகார் படுகொலைகள்: அரசு - ஓட்டுக் கட்சிகள் துணையோடு சாதிவெறி பயங்கரவாதம்



சாதிவெறி நிலப்பிரபுக்களின் அட்டூழியம்; சுட்டுக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்.

கடந்த டிசம்பர் முதல் நாளன்று பீகாரில் சாதிவெறி நிலப்பிரபுக்கள் நடத்திய கொலைவெறியாட்டம் 'சமூக நீதி' ஆட்சியின் மோசடியைத் திரை கிழித்துக் காட்டிவிட்டது. பீகாரின் ஜெகனாபாத் மாவட்டத்தில் சோனே ஆற்றை ஒட்டியுள்ள லட்சுமண்பூர் கிராமத்தில், மேல் சாதி வெறிபிடித்த பூமிகார் நிலப்பிரபுக்களின் ''ரன்பீர் சேனா'' எனப்படும் குண்டர்படை நடத்திய காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 61 பேர் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட - மிகவும் பிற்பட்ட சாதியினராவர். அவர்களில் 27 பேர் பெண்களும் 16 பேர் குழந்தைகளுமாவர். பீகாரில் சாதிவெறிப் படுகொலைகள் நடப்பது வழமையானதுதான் என்றாலும், இதற்கு முன் நடந்த அனைத்துக் கொடூரங்களையும் தற்போதைய தாக்குதல் விஞ்சி விட்டது.

லட்சுமண்பூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட - மிகவும் பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்த கூலி - ஏழை விவசாயிகள் கட்சி ஐக்கியக் குழு, லிபரேஷன் குழு ஆகிய குழுக்களின் தலைமையில் அணிதிரண்டு பூமிகார் சாதிவெறி நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடி வந்தனர். இம்மக்களின் 50 ஏக்கர் நிலத்தையும் அரசு ஒதுக்கிய 10 ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும் நிலப்பிரபுக்கள் அபகரித்துக் கொண்டதை எதிர்த்து, மக்கள் நீதிமன்றத் தீர்ப்பின்படி நிலங்களைப் பறித்தெடுக்கத் தீர்மானித்து, இந்நிலங்களில் செங்கொடிகளை நட்டு போராட்டத்தைத் தொடங்கினர். நக்சல்பாரிகள் இப்பகுதியில் செல்வாக்குப் பெற்று வருவதாலும், அவர்களது தலைமையிலான போராட்டங்களால் சட்டப்படியான கூலி தரவேண்டியிருப்பதாலும், தமது ஆதிக்கம் தகர்ந்து வருவதாலும் ஏற்கனவே ஆத்திரமடைந்திருந்த நிலப்பிரபுக்கள் தமது குண்டர் படையான ரன்பீர் சேனாவைக் கொண்டு தாக்கத் துடித்தனர்.

இதன்படி பாட்னா, போஜ்பூர், ஜெகனாபாத் மாவட்டங்களிலிருந்து ரன்பீர் சேனா குண்டர்கள் நவீன ஆயுதங்களுடன் திரட்டப்பட்டனர். ஏறத்தாழ 100 பேர் கொண்ட இக்கும்பல் இரவு 11 மணியளவில் சோனே ஆற்றைக் கடந்து கரையேறியதும், அங்கு கண்ணில் பட்ட இரு மீனவர்களைச் சரமாரியாக வெட்டிக் கொன்றது. பின்னர் ஊருக்குள் நுழைந்து ஒவ்வொரு வீடாகக் கதவை உடைத்து, உறங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நடந்த இக் கொலைவெறியாட்டத்துக்குப் பிறகு, ''ரன்பீர் சேனா வாழ்க!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு, வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுத் தமது வெற்றியைக் கொண்டாடியது. பிறகு ஆற்றங்கரையிலிருந்த மூன்று மீனவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு படகுகளில் தப்பிச் சென்று விட்டது.

பீகாரில் ரன்பீர் சேனா தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் கடந்த இரு மாதங்களாக ரன்பீர் சேனா குண்டர்கள் தாக்குதலுக்கான தயாரிப்புகளைச் செய்து வருவதை அறிந்திருந்த போதிலும் போலீசார் அதைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பூமிகார் சாதிவெறி நிலப்பிரபுக்கள் பாரதீய ஜனதா கட்சிக்கு ஆதரவாக நிற்பதால், அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன் பீகாரின் ரப்ரிதேவி அரசு பாரதீய ஜனதா கட்சி மீது குற்றம் சாட்டி, நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளது. பொதுத் தேர்தல் நெருங்குவதால், பாரதீய



படிப்பகம்

www.padippakam.com






வாழ்வுரிமையைப் பறித்து துறைமுகம் அமைப்பதை எதிர்த்து வாத்வான் வட்டார மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

ஜனதா கட்சித் தலைவர் வாஜ்பாய் இக்கிராமத்துக்கு வந்து பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி தேர்தல் ''ஸ்டண்ட்'' அடித்துள்ளார். சாதிவெறி நிலப்பிரபுக்கள் - அரசு எந்திரம் - அரசியல் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து நடத்தியுள்ள இக்கோரமான படுகொலைக்குப் பழி தீர்க்க, நக்சல்பாரிகள் தலைமையில் உழைக்கும் மக்கள் அணிதிரண்டு வருகிறார்கள்.

## மண்ணைப் பறித்து முன்னேற்றமா?

மகாராஷ்டிர மாநிலம் தனு வட்டத்திலுள்ள வாத்வான் பகுதியின் விவசாயிகளும், மீனவர்களும், பழங்குடியினரும் அப்பகுதியில் அந்நிய நிறுவனம் துறைமுகம் அமைக்கும் கட்டுமானப் பணியில் இறங்கியுள்ளதை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டுள்ளனர். கடந்த நவம்பர் 17 அன்று தனு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ''துறைமுகக் கட்டுமானப் பணியை உடனடியாக நிறுத்து!'' என இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மராட்டியத்தின் ''பூக்கள் மற்றும் பழங்களின் கூடை'' என்று தனு வட்டம் அழைக்கப்படுகிறது. குஜராத்துக்கும் மகாராஷ்டிராவுக்கும் இடைப்பட்ட பசுமை குலுங்கும் கடலோரப் பகுதியும் இதுதான். ஏறத்தாழ பாதியளவுக்கு காடுகள் நிறைந்த இப்பகுதிதான் வார்லி எனப்படும் பழங்குடியினரின் பூர்வீக மண்ணாகும். பூக்கள், பழங்கள் சாகுபடியும், காட்டுச் செடிகளிலிருந்து சாயம் தயாரிக்கும் குடிசைத் தொழிலும் பழங்குடியினர் பாரம்பரியமாகச் செய்து வருகின்றனர். கடலோரப் பகுதியில் 10,000-க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் உள்ளன.

''பெனின்சுலார் அண்டு ஓரியண்டல்'' எனும் ஆஸ்திரேலிய நிறுவனம் தனு வட்டத்திலுள்ள வாத்வானில் துறைமுகக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள மராட்டியத்தை ஆளும் இந்துவெறி அரசு கடந்த ஆண்டில் அனுமதி அளித்துள்ளது. மொத்தம் 32 சரக்குக் கப்பல் நிறுத்துமிடங்களைக் கொண்டதாக இத்துறைமுகம் அமைக்கப்படும். சரக்கு ஏற்றி இறக்கும் பளு தூக்கிகள், சரக்கு வாகனப் போக்குவரத்து, கிடங்குகள் அமைத்தல் முதலானவற்றால் இப்பகுதியின் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பழங்குடி மக்களின் வாழ்வுக்கான ஆதாரம் பறிக்கப்படுவதோடு, துறைமுகம் நிறுவப்பட்டால் மீனவர்களின் பிழைப்பும் பறிக்கப்பட்டு விடும். பாதிக்கப்படும் இப்பகுதிவாழ் மக்கள் தமது வாழ்வுரிமைக்காக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்த பிறகு, உச்சநீதி மன்றம் உரிய மாற்று ஏற்பாடுகளையும் நிவாரணமும் வழங்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால் இந்து வெறி ஆட்சியாளர்கள் எவ்வித நிவாரணமோ, மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளோ இன்றி துறைமுகக் கட்டுமாணப் பணியைத் தீவிரப்படுத்தி வருவதோடு, போராடும் மக்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளனர். வாத்வான் வட்டார மக்களோ, ஆட்சியாளர்களின் மோசடிகளை அம்பலப்படுத்தி தமது போராட்டத்தில் உறுதியாக நிற்கின்றனர்.

## சுற்றுச் சூழலைப் பாதுகாக்கப் போராடுபவர்களின் மீது பொய் வழக்கு! சி.சி.சி. நிர்வாகத்தின் நரித்தனம்!

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்திற்கு அருகேயுள்ள தேக்கம்பட்டியில் பஞ்சாயத்து உறுப்பினராக இருப்பவர், பொன் மணி. இவரது கணவர் துரைசாமி. இவர்கள் இருவரும் 21.11.97 அன்று ''மொபட்டில்'' தேவனாபுரத்திற்குச் சென்று கொண்டிருந்த பொழுது, சி.சி.சி. சாயத் தொழிற்சாலைக்குச் சொந்தமான ''மினி பஸ்'' மோதி, இருவரும் இறந்து போயினர். மோதிய வேகத்திலேயே அந்த ''மினி பஸ்'' நின்று கூடப் பாராமல், விரைந்து சென்று மறைந்து விட்டது.

அப்பகுதியின் சுற்றுச் சூழலை நாசமாக்கி வரும் இச்சாயப் பட்டறையை எதிர்த்துப் போராடி வரும் தேக்கம்பட்டி, தேவனாபுரம் பகுதி மக்கள் இச் சம்பவத்தால் ஆத்திரமடைந்து, சாயத் தொழிற்சாலையை முற்றுகையிட்டனர். நிர்வாகம் கல்லுளிமங்கன் போல இருந்ததால், அவர்கள் அத்தொழிற்சாலையின் அலுவலகத்தையும், வாகனங்களையும் அடித்து நொறுக்கினர். விபத்திற்குக் காரணமான அந்த ''மினிபஸ்'' மக்களின் கோபத்தில் தீக்கிரையானது.

நிர்வாகமோ நரித்தனத்தோடு, மக்களின் இக்கோபாவேசத்தையும், சூறையாடலையும் காட்டி, இச்சாயப் பட்டறைக்கு எதிராகப் போராடிவரும் முன்னணியாளர்கள் ஆறு பேர் மீது பொய் வழக்கு தொடுத்துள்ளது. மேலும், 2 கோடி ருபாய் மதிப்பிற்கு பொருட்கள் சேதமடைந்து விட்டதைக் காட்டி அடையாளம் தெரியாத 75 பேரின் மீதும் வழக்குத் தொடுத்துள்ளது. நிர்வாகத்திடம் காசு வாங்கித் தின்று திரியும் உயர் போலீசு அதிகாரிகள் தொடங்கி ஓட்டுக் கட்சித் தலைவர்கள் வரை அனைவரும், பகுதி மக்களை உடனே சரணடைந்து விடும்படி எச்சரிக்கை விட்டுக் கொண்டுள்ளனர்.

தகவல்: ம.க.இ.க., மேட்டுப் பாளையம்.



படிப்பகம்

www.padippakam.com

✸ தொழில் மந்தம் ✸ பணமதிப்பு வீழ்ச்சி ✸ பற்றாக்குறை

# சிதம்பரம் "பட்ஜெட்" எழுப்பிய கனவுக் கோட்டைகள் சரிந்தன

"மிகுந்த மன உறுதியோடும், தெளிவோடும், குறிக்கோளுடனும், நடைமுறையில் பயன் அளிக்கும் விதத்திலும் இந்த பட்ஜெட்டை நிதியமைச்சர் தயாரித்துள்ளார்" - ப. சிதம்பரம் 1997 - 98 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த பொழுது, "சி.ஐ.ஐ." எனப்படும் தரகு முதலாளிகள் சங்கத்தின் தலைவராக இருந்த சேகர் தத்தா, அவரை இப்படி புகழ்ந்து தள்ளினார்.

"தொழில் துறை வளர்ச்சி சரிந்து விட்டது; சரக்குகள் கிடங்குகளில் குவிந்து கிடப்பதால், தொழிலகங்களில் உற்பத்தி இலக்குகள் வெட்டப்படுகின்றன. தொழிற்துறை வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை இல்லாததால், புதிய முதலீடுகள் செய்ய யாரும் தயாராக இல்லை; இந்த உண்மையை இயந்திரங்கள், கட்டுமானப் பொருட்கள், உதிரி பாகங்கள், நுகர் பொருட்கள் எனத் தொழிற்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் காணலாம்" - இது, அதே சி.ஐ.ஐ. சங்கத்தின் தற்போதைய தலைவரான குமாரின் புலம்பல்.

ஆறேழு மாதங்களுக்குள்ளாகவே சாயம் வெளுத்துப் போன நீல நிற நரிக் கதை போலாகிவிட்டது சிதம்பரத்தின் பட்ஜெட். அவரைச் சுற்றியிருக்கும் பொருளாதாரப் புலிகள் தவிர, வேறு யாரும் இந்த பட்ஜெட்டை தற்பொழுது தாங்கிப் பிடிக்கத் தயாராக இல்லை.

"மொத்த உள்நாட்டு உற்பத்தி 7%-ம், தொழிற்துறை உற்பத்தி 10 சதவீத வளர்ச்சியையும் எட்டும்; நிதிப் பற்றாக்குறை 4.5 சதவீதத்துக்குள்ளும், பணவீக்கம் ஆறிலிருந்து ஏழு சதவீதத்துக்குள்ளும் கட்டுப்படுத்தப் படும்" இந்த இலக்குகளை தனது பட்ஜெட் மூலம் சாதித்து விடுவேன் என மார்தட்டினார் சிதம்பரம்.

ஆனால் இன்று அரசாங்கம் தானாகவே முன் வந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இலக்கை ஒரு சதவீதம் குறைத்துக் கொண்டு விட்டது. தொழில் மந்தத்தின் காரணமாக, தொழில்துறை வளர்ச்சி, இலக்கின் பாதியளவையாவது எட்டிப் பிடிக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாகிவிட்டது. அரசின் ஊதாரிச் செலவுகள், மைய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு, பொதுத் தேர்தல் போன்ற திடீர் செலவுகளால் பற்றாக்குறை எதிர்பார்த்ததை விட அதிகரிக்கும் என்பதும் உறுதியாகிவிட்டது.

இந்தத் தோல்விகளை சிதம்பரத்தினால் கூட மூடி மறைக்க முடியவில்லை. "இது எப்படி நிகழக் கூடும் என்று எனக்கு உண்மையிலேயே புரியவில்லை" என்கிறார் அவர். அதே சமயம், "6 சதவீதம் என்றாலும் அதுவும் வளர்ச்சிதான்; தொழில் துறையில் பாதி தொழில்கள்தான் மந்த நிலையில் உள்ளன; தொழில் துறைதான் நாட்டின் பொருளாதாரம் என எடுத்துக் கொள்ளக் கூடாது" என மழுப்பலாக பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கிறார். பணவீக்கம் 3.2 சதவீதமாகக் குறைந்திருப்பதை சாதனையாக எடுத்துக் காட்டுகிறார்.

அதாவது, கடந்த ஒரு வருடத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 3.2 சதவீதம் தான் உயர்ந்துள்ளதாம்! தக்காளியின் விலையை நினைவுபடுத்திக் கொண்டாலே போதும், சிதம்பரம் எவ்வளவு பெரிய புளுகன் என்பதைப் புரிந்து கொள்ளலாம். கடந்த ஒரு வருடத்தில் அரிசி, பருப்பு, கோதுமை, சமையல் எண்ணெய், மாமிசம், முட்டை, காபி பொடி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 20 சதவீதம் உயர்ந்துள்ளன. இதோடு, பெட்ரோல், காஸ், டீசல் விலை உயர்வு, ரயில் - பேருந்துக் கட்டணங்களின் உயர்வு இவற்றையும் கணக்கில் கொண்டால், சிதம்பரத்தின் மாயாஜால பட்ஜெட் சாதித்தது என்ன என்பது பாமரர்களுக்குக் கூட எளிதில் விளங்கி விடும்.

இந்தியாவின் தொழிற்துறையைத் தூக்கி நிறுத்த, சிதம்பரம் தனது பட்ஜெட்டில் முன் வைத்த யோசனைகள், சொந்தமாக அவர் மூளையில் உதித்தவையல்ல. மாறாக, அமெரிக்காவில் ரீகனும், இங்கிலாந்தில் தாட்சரும் கடைப்பிடித்த அதே குப்பைகள் தான். அதாவது, "முதலாளிகளுக்கு வரிச் சலுகைகளை வாரி வழங்கினால், அவர்கள் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு புதிதாகத் தொழில்களைத் தொடங்குவார்கள்; தொழில்கள் பெருகினால், அரசாங்கத்தின் வரி வருமானம் உயரும்; அரசின் வருமானம் அதிகரித்தால், பற்றாக்குறை சுருங்கும்" - இதுதான் சிதம்பரம் போட்ட மனக்கணக்கு.




வரிச் சலுகைகளோடு வரி ஏய்ப்பு செய்து கருப்புப் பணத்தைக் குவித்து வைத்திருப்பவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கியதால்தான், தாராளமயமாக்கலின் ஆதரவாளர்கள் அனைவரும் சிதம்பரத்தின் பட்ஜெட்டை, "கனவுலகத்திற்கு அழைத்துச் செல்லும் பட்ஜெட்" எனப் புகழ்ந்து தள்ளினார்கள். அதேபொழுதில், தரகு முதலாளிகளும், ஏகாதிபத்திய நிறுவனங்களும் வரிச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொண்டார்களே தவிர, சிதம்பரம் எதிர்பார்த்தபடி புதிதாக தொழில்களைத் தொடங்கவோ, ஏற்கனவே இயங்கி வரும் தங்கள் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்துவதிலோ முனைப்புக் காட்டவில்லை. ஏனெனில், வெளிச் சந்தையில் விற்பனை சூடுபிடிக்காமல் தேயத் தொடங்கியதுதான் இதற்குக் காரணம்.

"பழைய டி.வி.க்கு புது டி.வி.; ஒரு டி.வி. வாங்கினால் ஒரு டேப் ரிகார்டர் இலவசம்; பரிசுக் கூப்பன்கள்; தவணை முறை விற்பனை; தள்ளுபடி விற்பனை" - இவையெல்லாம் இத்தேக்கத்தின் வெளிப்பாடுகள் தான். தாராளமயமாக்கலைத் தொடங்கிய பொழுது அந்நிய முத்திரை கொண்ட பொருட்களின் மீது இருந்த மோகமும், கிராக்கியும் ஒரு நிறைவை எட்டி விட்டதால், உற்பத்தி இலக்குகளைக் கூட குறைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

● குளிர் சாதனப் பெட்டிகளைத் தயாரிக்கும் "விர்ல்பூல் இந்தியா"




படிப்பகம்

www.padippakam.com

நிறுவனத்தின் உற்பத்தி இந்த வருடம் எட்டு சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

• வருடத்திற்கு 10,000 கார்களை விற்கலாம் என்ற கணிப்புடன் இந்திய சந்தையில் நுழைந்த மெர்சிடஸ் - பென்ஸ் என்ற பன்னாட்டு கார் நிறுவனம், மாதமொன்றுக்கு 50 கார்களை விற்பதற்கே திணறி நிற்கிறது.

• மார்ச் மாத இறுதியில் டாடா நிறுவனமான “டெல்கோ” உற்பத்தி செய்த 4,177 வாகனங்கள் விற்பனையாகாமல் தேங்கி நின்றன. இன்று அவ்வெண்ணிக்கை 16,544 ஆக உயர்ந்து விட்டது.




• ரூ. 172/- ஆக இருந்த சிமெண்ட் மூட்டையின் விலை தேக்கத்தின் காரணமாக ரூ. 150/- ஆகக் குறைந்து விட்டது.

• இரும்பு உற்பத்தி 0.4 சதவீதம்தான் அதிகரித்துள்ளது.

• பங்குச் சந்தையில் ஏப்ரல் தொடங்கி ஆகஸ்டு முடிய 350 கோடி ரூபாய்க்கு தான் புதிய பங்குகள் வெளியிடப்பட்டுள்ளன. பங்குகளுக்கு பேர் போன “கால்கேட்”, “ரிலையன்ஸ்” போன்ற பெரிய நிறுவனங்கள் கூட, தங்கள் தொழிலை விரிவுபடுத்த புதிய பங்குகளை வெளியிடவில்லை. இதனால் இந்த நிதியாண்டில் பங்கு சந்தை விற்பனை 7,000 புள்ளிகளைத் தொட்டு விடும் என்ற எதிர்பார்ப்பு மடிந்து போனது.

• நேரடி அந்நிய முதலீட்டைக் கவர்ந்து கொண்டு வருவதிலும் சிதம்பரத்திற்கு தோல்விதான். அந்நிய முதலீட்டை அள்ளி வரப் போகிறேன் எனக் கூறிக் கொண்டு அமைச்சர்களும் அதிகாரிகளும் மேலை நாடுகள் தொடங்கி கீழை நாடுகள் வரைச் சுற்றிப் பறந்து வந்ததெல்லாம் குடும்பத்தோடு சுற்றுலா சென்று வந்த கதையாகிவிட்டது.

“மைக்ரோ சாஃப்ட்” என்ற அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் பில்கேட்ஸ் இந்தியாவுக்கு வந்தபொழுது, அமெரிக்க அதிபரே வந்து விட்டது போல, அரசு மரியாதை கொடுத்து வரவேற்றது மைய அரசு. ஏனெனில், கேட்ஸின் சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 1,00,000 கோடிக்கும் அதிகம். எனினும், பில் கேட்ஸ் 80 கோடி ரூபாய்க்கும் குறைவாகத் தான் இந்தியாவில் முதலீடு செய்ய முன் வந்தார். இதுதான் ஏகாதிபத்திய முதலாளிகள் நமது நாட்டிற்குத் தரும் மதிப்பு.

1996 ஜனவரி தொடங்கி 1997 மே முடிய 49967 கோடி ரூபாய் நேரடி அந்நிய முதலீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டாலும், 13023 கோடி ரூபாய் தான் அந்நிய மூலதனமாக நாட்டினுள் நுழைந்துள்ளது.

★☆★

நாட்டின் தொழிற்துறையை தரகு முதலாளிகளும், அந்நிய முதலாளிகளும் கவனித்துக் கொள்வார்கள் என்ற கனவுகளோடு கண்ணை மூடிக் கொண்டார், சிதம்பரம். அவர்களோ சந்தையில் நிலவும் தேக்கத்தைக் காட்டி முகத்தைத் திருப்பிக் கொண்டதோடு, இந்த தேக்கத்தை உடைக்க சிதம்பரம் எதுவுமே செய்யாததால், அவரை வசைபாடவும் தொடங்கி விட்டார்கள். அதனால்தான் சிதம்பரம் பணவீக்கச் சாதனையைப் பீற்றிக் கொள்ளும் பொழுது, “பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தினால் எல்லாம் சரியாகி விடுமா?” என மடக்குகிறார்கள்.

அக்டோபர் மாதம் பம்பாயில் நடந்த தரகு முதலாளிகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் குஜ்ராலிடம், “தொழில் மந்தத்தை உடைக்க அரசின் தலையீடு அவசியம்” என்ற கோரிக்கையை முன் வைத்தனர். “சிமெண்ட் மற்றும் இரும்பு உற்பத்தியை ஊக்குவிக்க, அரசு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு உடனடியாக நிதி ஒதுக்க வேண்டும்; பழசாகிப் போன பேருந்துகள், லாரிகள் மற்றும் பிற வாகனங்கள் இனியும் ஓடுவதை அரசே முன் வந்து தடை செய்ய வேண்டும்; இறக்குமதியைக் கட்டுப்படுத்த முயலவேண்டும்” இவை தரகு முதலாளிகளின் கோரிக்கைகள்.

இங்கு ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். அரசின் தலையீடின்றி சந்தையும், உற்பத்தியும் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்று கூப்பாடு போட்ட இவர்கள் தான், இப்பொழுது அரசு தலையிட வேண்டும் என வேண்டுகிறார்கள். இதனின் அர்த்தம் தாராளமயமாக்கலைக் கைவிட்டு, நேரு பாணி பொருளாதாரக் கொள்கைக்குத் திரும்ப வேண்டும் என்பதல்ல. மாறாக, தாராளமயமாக்கலை நடைமுறைப்படுத்த சிதம்பரத்தின் அணுகுமுறையைக் கைவிட்டு, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மற்றொரு வழிமுறையான — தேவையை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தான். இதனால் தான் மைய அரசு ஊழியர்களின் சம்பள உயர்வினை முதலாளிகள் எதிர்க்கவில்லை என்பதோடு, நிலுவை ஊதியத்தை உடனே பணமாக அரசு வழங்க வேண்டும் என ஆலோசனை கூறினார்கள்.

முதலாளிகளைத் திருப்திபடுத்துவதற்காக குஜ்ரால் அரசும், வீடு கட்டவும், சாலை அமைக்கவும், பாசனக் கால்வாய்கள் வெட்டவும் வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன் அளவை உயர்த்தச் சொல்லி உத்தரவிட்டுள்ளது. மேலும் வங்கி விதிகளைத் திருத்தி, முதலாளிகளுக்குத் தேவைப்படும் அளவிற்கு கடன் கிடைப்பதற்காக 9,600 கோடி ரூபாயை மூலதனச் சந்தைக்குள் திருப்பி விட்டுள்ளது. முதலாளிகளுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டியும் அரை சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதோடு, ஏற்றுமதியை ஊக்குவிப்பது என்ற பெயரிலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளின் பணத்தின் மதிப்பு வீழ்ந்ததைக் காரணம் காட்டியும், ரூபாயின் மதிப்பு தடையின்றிச் சரிந்து விழ அனுமதிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் மாதக் கடைசியில் ஒரு அமெரிக்க டாலருக்கு ரூ. 36.70 என்றிருந்த இந்திய ரூபாயின் மதிப்பு மீண்டும் சரிந்து, ரூ. 38.94 ஆகக் குறைந்து போனது. இது, சந்தையில் புழக்கத்திலுள்ள அமெரிக்க டாலர்

**சந்தையில் தேக்கம்: எங்கும் தள்ளுபடி மழை.**






படிப்பகம்

www.padippakam.com

இந்திய ரூபாயின் மதிப்பைத் தீர்மானிக்க கொல்லைப்புற வழியில் அனுமதிப்பதாகும்.

★☆★

மைய அரசு அறிவித்துள்ள இச்சலு கைகள் தொழிற்துறைக்குப் புத்துயிர் ஊட் டுமா அல்லது புதியதொரு சிக்கலை உரு வாக்குமா? மைய அரசே போதிய வருமான மின்றித் தடுமாறி நிற்கும்பொழுது, தரகு முத லாளிகளின் நலனுக்காக இப்படி பணத்தை வாரியிறைக்க ஆட்சியாளர்கள் யார் தலை யில் கைவைக்கப் போகிறார்கள்? இக்கேள்வி கள் பரிசீலனைக்குரியவை.

தரகு முதலாளிகளுக்கு குறைந்த வட்டி யில் கடன் கொடுப்பதற்காக, வங்கி சேமிப்பு களுக்கு இதுவரை கொடுத்து வந்த வட்டியில் ஒரு சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. தரகு முதலாளிகளோ குறைந்த வட்டியில் கட னைப் பெற்று, அத்தொகையை தொழிலில் மூலதனமாகப் போடாமல் தங்கள் பழைய கடனை அடைக்கப் பயன்படுத்திக் கொள்கி றார்களாம்! எனவே அவர்கள் இந்தப் புதிய கடனை உடனடியாக அடைக்க வாய்ப் பில்லை.

சென்ற ஆண்டு இந்தியன் வங்கி திவா லாகிப் போகும் நிலையை அடைந்ததற்குக் காரணமே எவ்வித வரைமுறையும் இன்றி அரசியல் செல்வாக்குமிக்க முதலாளிகளுக்கு வாரி வழங்கப்பட்ட கடன் திரும்பி வராததே யாகும். அப்பாவி நடுத்தர வர்க்கத்தின் சேமிப்பு தரகு முதலாளிகளின் இலாபத்திற்கா கச் சட்டபூர்வமாகச் சூறையாடப்படுகிறது என்பதுதான் உண்மை.

ரூபாயின் மதிப்பு வீழ்ந்து போன பின் னும் இந்திய ஏற்றுமதி பெருகுவதற்கு எள்ள ளவும் வாய்ப்பில்லை. ஏனெனில் சர்வதேச ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கே ஒரு சதவீதத்திற்கு குறைவானதுதான். மேலும், இந்தியப் பெருந்தொழிற் துறை இயந்திரங்களுக்கும், தொழில் நுட்பத்திற் கும், ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்துள் ளது. உள்நாட்டுக்குத் தேவையான கச்சா எண்ணெய், பெட்ரோலியப் பொருட்களின் பெரும்பகுதி இறக்குமதி மூலமே பெறப்படு கிறது. இனி இவற்றின் இறக்குமதிக்கு கூடுத லாக செலவு செய்ய வேண்டும். இதனால், ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் பெரும் வித்தியாசம் ஏற்பட்டு, வர்த்தகப் பற்றாக் குறை அதிகரித்து விடும். இதனையும் விட, ரூபாய் மதிப்பில் ஏற்பட்டுள்ள சரிவால் 3,24,000 கோடி ரூபாயாக இருந்த அந்நியக் கடன், 3,48,000 கோடி ரூபாயாக அதிகரித்து விட்டது. இது இந்திய உழைக்கும் மக்களின் மீது ஆளும் வர்க்கங்கள் திணிக்கும் மிகப் பெரும் சுமையாகும்.

இப்பொருளாதாரச் சுமைகள் ஒருபுறமி ருக்க, தொழிலாளி வர்க்கத்தைப் பலிகடா வாக்கி தங்கள் இலாபத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் தரகு முதலாளிகள் கும்பல் முழு மூச்சாக முயன்று வருகிறது. ''தங்க கை குலுக் கல்'', ''சம்பளவெட்டு'' - இவைதான் இலாப வேட்டைக்கு முதலாளிகள் நம்பியிருக்கும் முக்கிய ஆயுதங்கள். இந்த தொழில் மந்தத்தி லும் 8.6% சதவீத வளர்ச்சியைச் சாதித்துள்ள ''டிஸ்கோ'' நிறுவனத்தின் வெற்றிக்கு அடிப் படையே தொழிலாளிகளின் சம்பளத்தில் கை வைத்ததுதான்.

ஏற்கனவே நிலவி வரும் வேலை வாய்ப்பின்மை; இதோடு தொழிலாளர்கள் வேலையில் இருந்து துரத்தியடிக்கப்படுவது; கிராமப்புற வறுமை; சிறு - கூலி விவசாயிகள் நாடோடிகளாக நகரங்களை நோக்கி ஓடி வரு வது - இப்பாரதூரமான சமூக நிலைமைகள் குமுறி வெடிக்கக் காத்திருக்கும் எரிமலைக்கு ஒப்பானது.

★☆★

பொதுத் தேர்தல் நெருங்கி வரும் இச்சூழலில் எல்லா வண்ண ஓட்டுக்கட்சிக ளுமே தங்களின் தேர்தல் அறிக்கையிலும், மேடைப் பேச்சுகளிலும் இச்சமூகப் பிரச் சினை பற்றி கண்ணீர் வடிக்கத் தயாராக இருப் பார்கள். ஆனாலும் தாராளமயமாக்கலைக் கைவிடுவதற்கு எந்த ஓட்டுக் கட்சியும் தயா ராக இல்லை. மன்மோகன் சிங் - சிதம்பரம் வழியில் தாராளமயமாக்கலை நடைமுறைப் படுத்துவதா அல்லது இடதுகள் கூறும் வழி யில் - கவர்ச்சித் திட்டங்களையும் கைவிடா மல் தாராளமயமாக்கலை நடைமுறைப்படுத் துவதா என்பதே ஓட்டுக் கட்சிகளுக்கு இடையே உள்ள வித்தியாசம். ஆனால் இந்த இரு வழிகளாலுமே இந்தியப் பொருளாதா ரம் மரணப் படுக்கையில் வீழ்வதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

மேலும், இன்று நிலவி வரும் தொழில் மந்தத்தை உடைக்க ஆளும் வர்க்கங்கள் செய்து வரும் சீர்திருத்தங்களும் சலுகைக ளும் ஏற்கனவே தென் கிழக்கு ஆசிய நாடுக ளில் நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி கண்டவைதான். வங்கி மற்றும் நிதித் துறைக ளில் அவை தீவிரமாக நடைமுறைப்படுத்திய தாராளமயத்தினால், தாய்லாந்து, இந்தோ னேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், ஹாங் காங், சிங்கப்பூர் நாடுகளின் பணத்தின் மதிப்பு வீழ்ந்து போய், அவற்றின் பொருளா தாரம் நிலை தடுமாறி நிற்கிறது. இத்துணைக் கும் இந்நாடுகள், மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியிலும், பங்குச் சந்தை - ஏற்றுமதி வாணிபத்திலும், அந்நியச் செலாவணி கையி ருப்பிலும் இந்தியாவை விட இரண்டு - மூன்று மடங்கு வளர்ச்சி கண்டவை. அவையே தடுமாறி நிற்கும்பொழுது, இந்தி யாவிற்கு நேரக் காத்திருக்கும் அபாயம் குறித்துச் சொல்லத் தேவையில்லை.

• ரஹீம்

# கோம்பை டி.இ.எல்.சி. ~~பாதிரி~~ பண்ணையாரின் சுரண்டல் ஆதிக்கம்!

உத்தமபாளையம் வட்டத்திலுள்ள கோம்பை டி.இ.எல்.சி. தேவாலயத்தின் பாதிரியார் சாமிவேல். இத்தேவாலயத்தில் இணைந்து கொண்ட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஜோசப் என்ற கூலித் தொழிலாளியை, அத்தேவாலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் மரங்களை வளர்த்துக் கொள்ளச் சொல்லி, பரிவு காட்டி னர் பாதிரி சாமிவேல். தனது குடும்பத்தின் வருவாய்க்கு வழி ஏற்ப டுத்திக் கொடுத்த பாதிரியின் கருணையைக் கண்டு மனமுருகிப் போன ஜோசப், தேவாலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் மட்டு மல்லாது, அதற்கு அருகில் இருந்த புறம்போக்கு நிலத்திலும் புளிய மரங்களை நட்டு, வளர்க்கத் தொடங்கினார். தண்ணீர் வசதியற்ற அந்த பொட்டல் நிலத்தில் புளிய மரங்களை வளர்க்க ஜோசப் போடு அவரது குடும்பமும் சேர்ந்து பாடுபட்டது. ஜோசப் குடும்பத் தின் ஏழு ஆண்டுகால பகல் - இரவு பாராத கடின உழைப்பு பயன்தரத் தொடங்கிய பொழுது, பாதிரி வேடத்தில் இருந்த சாத் தான் வெளியே வந்தது. 'ஜோசப் குடும்பத்தை மிரட்டி நிலத்தில் இருந்து வெளியேற்றி விட்டு, புறம்போக்கு நிலத்தையும் சுருட்டிக் கொள்ளத் திட்டம் போட்டார் பாதிரி சாமிவேல்.

அத்தேவாலயத்தைச் சேர்ந்த யாரும் தாழ்த்தப்பட்ட கூலி விவ சாயியான ஜோசப்புக்கு ஆதரவாக குரல் கொடுக்க முன்வர வில்லை. ''ஆண்டவனைவிட, ஆண்டவனின் அடியார்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது'' என்ற பயம்தான் காரணம் போலும். அதே பொழுதில், அப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடு தலை முன்னணி, ''புறம்போக்கு நிலத்திலுள்ள புளிய மரங்களை ஜோசப்புக்கு விட்டுக் கொடு'' என்ற கோரிக்கையை முன் வைத்து, பாதிரி சாமிவேலின் நம்பிக்கை துரோகத்தையும், மதங்களின் மக் கள் விரோதத் தன்மையையும் அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரம் வெளியிட்டது.

இதன்பின், பாதிரி சாமிவேல் ஆக்கிரமித்திருந்த புறம்போக்கு நிலத்தைக் கைப்பற்றுவதற்காக வி.வி.மு.வைச் சேர்ந்த 13 தோழர் கள், பாக்கியராஜ் தலைமையில் நேரடி நடவடிக்கையில் இறங்கி னர். பாதிரி சாமிவேல், அடியாட்களை அனுப்பி வி.வி.மு. தோழர்க ளைத் தாக்க முயற்சித்ததோடு, தன்னைக் கொலை செய்ய முயன்ற தாக பொய்ப் புகாரும் கொடுத்தார். பாதிரிக்கு அடியாளாக மாறிய போலீசு, நிலத்தைக் கைப்பற்ற முயன்ற தோழர்கள் மீது, கொலை முயற்சி உட்பட 3 பொய் வழக்குகளைப் போட்டு, மதுரை மையச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டது. பாதிரி - போலீசு கூட்ட ணியை அம்பலப்படுத்தி பகுதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டதோடு, நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அடுத்த கட்ட முயற்சிக ளையும் வி.வி.மு. எடுத்து வருகிறது.

தகவல்:
வி.வி.மு.,
பாளையம் வட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# சமுதாயப் புரட்சிப் பிரகடனமாய் சாதி - தீண்டாமை மறுப்பு மணவிழா

அகத்திருமண முறை - அதாவது, ஒரே சாதிக்குள் மணமுடிப்பது சாதிய இருத்தலுக்கான அடிப்படைகளுள் ஒன்று. சாதி ஒழிப்புப் பணியில் சாதி மறுப்புத் திருமணங்களின் இன்றியமையாமையை பெரியாரும் அம்பேத்கரும் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். இதை மனதிற்கொண்டு, ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு. இம்மூன்று அமைப்புகளும் நடத்தி வரும் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக, "சாதி - தீண்டாமை மறுப்பு புரட்சிகர மணவிழா" நடத்தப் பெற்றது.

கடந்த நவம்பர் 22-ஆம் தேதி விழுப்புரம் நகரமே வியந்து நிற்கும் வண்ணம் சாதி - தீண்டாமை மறுப்பு புரட்சிகர மணவிழாவில் ஆறு திருமணங்கள் நடந்து முடிந்தன. இதில் மூன்று திருமணங்கள் மறுமணங்களாகவும் அமைந்தது இன்னும் சிறப்பு.

திருமண நிகழ்ச்சி காலையில் கருத்தரங்காகவும், மாலையில் மணமக்கள் ஊர்வலம், மணவிழா வாழ்த்துரை, கலைநிகழ்ச்சி என இரு பிரிவாக நடந்தது. கருத்தரங்கத்திற்குத் தலைமை தாங்கிய ம.க.இ.க. தோழர் கதிரவன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து,திருமணங்களில் பார்ப்பன மயம் என்பது பற்றிப் பேசினார். மதுரை வீரன் கதை, முத்துப்பட்டன் கதை என நாட்டுப்புற இலக்கியங்களில் பதிவாகியுள்ள பார்ப்பனீய எதிர்ப்பு, சாதி - தீண்டாமை மறுப்புத் திருமணங்களை எடுத்துக் கூறினார். இன்றைக்கோ அனைத்துச் சாதியினரும் பார்ப்பனர்களை அழைத்துத் திருமணங்களை நடத்துவதை ஒரு கௌரவமாக கருதுவதைச் சாடினார்.

அடுத்து பேசிய ஈரோடு வழக்கறிஞர் தோழர் திருமலைராசன் இந்து திருமணச் சட்டமும் பிற மதங்களின் திருமணச் சட்டங்களும் எப்படி மனிதத் தன்மையற்றுள்ளன என்பதைத் திரைக்கிழித்தார்.

வரலாற்று ரீதியாக திருமணச் சட்டங்கள் மாறி வந்ததை விளக்கினார். 1968-இல் தி.மு.க. ஆட்சியின் போதுதான் பார்ப்பனன் இல்லாமல் நடக்கும் பெரியாரின் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப் பட்டதைக் குறிப்பிட்டார். அதற்கு முன்னர் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் இந்து சட்டப்படி செல்லாதவை. பிறக்கும் குழந்தைகள் கள்ளக் குழந்தைகள் என ஆதிக்க சாதிகளோடு அரசும் சேர்ந்து கொண்டு முந்திரை குத்தியதை எடுத்துக் கூறினார்.

"1968 சட்டத்திலும் பல ஓட்டைகள் உள்ளன. தற்போது இந்துக்களுக்கு மட்டுமே இது பொருந்தும். சாதி - தீண்டாமை மற்றும் மத மறுப்புத் திருமணங்களை இச்சட்டம் இன்னும் அங்கீகரிக்கவில்லை" எனத் தெளிவுபடுத்திய அவர், "சொத்துரிமை அடிப்படையிலேயே திருமணச் சட்டங்கள் நிலை கொண்டிருப்பதை"க் கோடிட்டுக் காட்டினார்.

சாதி மறுப்புத் திருமணமும் புரட்சிகர நடைமுறையும் என்ற தலைப்பில் பேசிய தோழர் மருதையன் ஆதிக்க சாதியினர் தென் மாவட்டங்களில் நடத்துகின்ற கலவரங்களைக் குறிப்பிட்டு இங்கும் கம்யூனிஸ்டுகளாகிய நாம் திருமணங்கள் மூலம் சாதி - தீண்டாமைக்கு எதிராக கலகம் செய்கிறோம் என்றார்.

பெரியார் தொடங்கிய சுயமரியாதைத் திருமணங்களை இந்த அளவு பிரச்சாரம் செய்து நடத்த வேண்டிய வெட்கக் கேடான நிலையில் நாமிருக்கிறோம் என்பது அவமானகரமானது. சுயமரியாதை திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் பிற மாநிலங்கள் பலவற்றில் இல்லை. சட்ட அங்கீகாரமிருந்தும் இப்போக்கு ஏனிங்கு வளரவில்லை? ஏனிங்கு சாதிய மோதல்கள்? அனைத்தும் பார்ப்பனமயமானதுதான் காரணம். பெரியார் பண்பாடு பரவவில்லை. மாறாக, ஆடம்பரமும் பார்ப்பனீயச் சடங்குகளும் பரவியுள்ளன என்றார்.

"கிராம அளவில் நிலவிய சாதிய உறவுகள் மாநில அளவிற்கு வளர்ந்து, உறுதிப்பட்டுள்ளன. சாதிச் சங்கங்கள் இவற்றுக்கு உரமிடுகின்றன. இங்கு நடக்கும் திருமணம் புரட்சிகரமானது. மேடையோடு முடிவதில்லை. இப்போதுதான் தொடங்குகிறது. வாழ்க்கைக்கு முன்னுதாரணமாக திகழும் வண்ணம் வாழ்ந்து காட்ட வேண்டும். குடும்பத்தினுள் சுயநலத்தை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும். அமெரிக்க குடும்பங்கள் சிதைவதற்கு சுயநலன் மேலோங்கியதே காரணம்."

"விஞ்ஞான வளர்ச்சியில் மூட நம்பிக்கை ஒழிகிறது. ஆனால் சாதியம் ஒழியாது. இது சுரண்டலுடனும் ஆதிக்கத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது. தெரிந்தே திட்டமிட்டு சாதி பாகுபாடு கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது நடக்கும் சாதி - தீண்டாமை மறுப்பு மணங்கள் எங்கோ ஒன்றிரண்டு என உள்ளன. இவை பல்கிப் பெருகும். அன்று சாதிக்குள் நடக்கும் திருமணங்கள் காட்டுமிராண்டித்தனம் என்றாகி, அருங்காட்சியகத்தில் வைக்கப்படும். இது நிச்சயம்" எனக் கூறி, தோழர் மருதையன் தனது உரையை முடித்தார்.

மாலையில் பெரியார் சிலையில் இருந்து மணமக்கள் ஊர்வலம் தொடங்கி, சென்னை நெடுஞ்சாலை வழியாக திருமண மண்டபத்தை அடைந்தது. ஊர்வலத்தில் சாதி அரக்கன் இருவரை செருப்பால் அடித்துச் செல்ல, அதன் பின் பறைமுழக்க கருவிகள் எழுச்சிமிகு இசையெழுப்ப மணமக்களும், அதன்பின் திரளான கூட்டமுமாக வந்த மணவிழா ஊர்வலம் விழுப்புரம் நகரையே உலுக்கியது. சாதி - தீண்டாமை மறுப்பு முழக்கங்கள் மக்களின் செவிகளில் எதிரொலித்தன.

சாதி – தீண்டாமையை மறுத்து மணம் புரிந்த மணமக்கள் : ஒரு புதிய விடியலை நோக்கி...




உத்தமபாளையம் வட்ட வி.வி.மு. செயலர் தோழர் மோகன் மணவிழாவிற்கு தலைமை ஏற்றுப் பேசினார். அதன் பின் திருமுதுகுன்றம், பு.மா.இ.மு. தோழர் ஜெயகாந்த் சிங், ஆண்டிபட்டி விவிமு செயலர் செல்வராசு, சங்கராபுரம் விவிமு தோழர் கதிர்வேலன், விழுப்புரம் வழக்கறிஞர் தயாநிதி, தமிழக கலப்புமணத் தம்பதிகள் சங்க மாநிலத் தலைவர் திரு. ஆர். வைத்தியநாதன், தஞ்சை தமிழ்ப் பல்லைக்கழக தூய தமிழ் சொல்லாக்க அகர முதலிகள் துறை தலைவர் தோழர் ப. அருளி, சென்னை பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com

**''சாதி – தீண்டாமையைத் தகர்த்தெறிந்து மணம் புரிந்து கொண்ட மணமக்களுக்கு புதிய ஜனநாயகத்தின் வாழ்த்துக்கள்''**

☆ கா. பானுமதி - சி. ஆனந்தன்
☆ பூ. கவுதம தமிழ்ச்செல்வி - ந. நடராசன்
☆ ச. கீதா - மு. முருகன்
☆ மேகலா - ராஜா
☆ பத்மினி - செல்வமுருகன்
☆ வீ. விரம்மாள் - இரா. சண்முகராசு

விடுதலை முன்னணி தோழர்கள் சத்யா, ஷீலா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆர். வைத்தியநாதன், 'சாதி - தீண்டாமை மறுப்பு மணம் புரிபவர்களை சாதியற்றவர்கள் என அரசு பதிவு செய்து அங்கீகரிக்க வேண்டும். இவர்களுக்கு சலுகைகள், ஒதுக்கீடுகள் வழங்கி சாதி ஒழிப்புக்கு அரசு ஆதரவளிக்க வேண்டும்' எனப் பலத்த கரவொலிக்கிடையே வேண்டுகோள் விடுத்தார்.

தோழர் ப. அருளி பேசும் போது, பார்ப்பனர்கள் மக்களுக்குப் புரியாத தேவபாடையில் திருமண மந்திரங்களை உச்சரிக்கிறார்களே அதன் ஆபாச, வக்கிர, மோசடிகளைத் திரை கிழித்தார். இது தமிழனின் பண்பாடுமல்ல என்று விளக்கினார். 'இத்திருமணங்கள் கண் கொள்ளாக் காட்சி; இதைக் காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்; பெரியாரின் சீர்திருத்தத்தையும், பெருஞ்சித்தரனாரின் தமிழுணர்வையும் இங்கு பார்க்கிறேன்' எனக் கூறி மணமக்களை வாழ்த்தினார்.

வாழ்த்துரைக்குப் பின் மணமக்களின் பெற்றோர், உறவினர்கள் மேடையில் அமர வைக்கப்பட்டனர். அவர்கள் முன்னிலையில் மணமக்கள் தோழர் மோகன் தலைமையில் மணவிழா உறுதிமொழி ஏற்று மாலை மாற்றிக் கொண்டனர். தாலி, சடங்கு, சீர் ஏதுமின்றி எளிய விழாவாக, கூடி நின்ற மக்களின் வாழ்த்தொலிகளிடையே மணவிழா இனிது முடிந்தது. மணமக்களுக்கு போராட்டக் குழு வாழ்த்து மடல் அச்சிட்டு வழங்கியது. மண்டபத்தில் தமிழகமெங்கும் வந்து கூடிய 3500-க்கும் மேற்பட்டோர் தமது வீட்டுத் திருமணம் என உற்சாகமாக மணவிழாவில் கலந்து கொண்டது கண் கொள்ளாக் காட்சி.

இதைத் தொடர்ந்து ம.க.இ.க. மையக் கலைக்குழு வழங்கிய புரட்சிகர கலை நிகழ்ச்சி, மக்களின் புரட்சிகர உணர்வுகளைத் தட்டி எழுப்பியது.

முத்தாய்ப்பாக மாட்டுக் கறி உணவு வழங்கப்பட்டது. 'முற்போக்கு முகாம்' என் போர் உட்பட பலரிடமும் பெரும் சலனத்தை ஏற்படுத்தியது அழைப்பிதழின் இறுதியில் அச்சிடப்பட்ட இவ்வரிகள் தான்.

பார்ப்பனியக் கருத்தியல், சாதி - தீண்டாமைக்கெதிரான கலகம் சரியான முறையில் நடந்தேறியது.

## மண வாழ்வின் துவக்கமே போராட்டமாக

**9.9.97-இல் சாதி - தீண்டாமை மறுப்பு புரட்சிகர மணம் புரிந்த ஈரோடு பள்ளிப்பாளையம் பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் மோகன் - மலர்க்கொடி, விழுப்புரத்தில் 22.11.97-இல் மணம்புரிந்த மேகலா - ராஜா மற்றும் பத்மினி - செல்வமுருகன் தம்பதியினர் மீது, ''ஊரை விட்டு ஒதுக்கப்படுதல், வாடகைக்கு வீடு தர மறுப்பு'' என ஆதிக்க சாதியினர் அடக்குமுறைகளை ஏவி விடத் தொடங்கிவிட்டனர். இதை அம்மண மக்கள் மன உறுதி குன்றாது எதிர்த்துப் போராடி வருகின்றனர்.**

## நாத்திகருக்கு அரசுக் கல்லூரியில் அனுமதி மறுப்பு மே. வங்க 'இடதுசாரி' அரசின் அடாவடித்தனம்

**''கம்யூனிஸ்டுகள் சாதி - மதமற்றவர்கள்; நாத்திகப் பிரச்சாரத்தை கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்'' என்றார் லெனின். ஆனால் வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் நாத்திகப் பிரச்சாரத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, ஆண்டுதோறும் ''துர்கா பூசை'' விழாக்களில் மூழ்கித் திளைக்கிறார்கள். மே. வங்க 'இடதுசாரி' அரசு இன்னும் ஒருபடி மேலே போய் நாத்திகர்களுக்கு எதிராகவே நிற்கிறது.**

**மே.வங்கத்தில் தஸ்லிமா காடுன் என்ற நாத்திக இளம் மாணவிக்கு அரசு கல்லூரியில் சேர இவ்வாண்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் அவர் கல்லூரி நுழைவுத் தேர்வில் முதலாவதாக வந்துள்ளார். கல்லூரி விண்ணப்பப் படிவத்தில், தான் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பிட மறுத்ததுதான் அவர் செய்த குற்றம்! தங்களைச் சாதியற்றவர்களாக, மதமற்றவர்களாக அறிவித்துக் கொள்ள எந்தவொரு குடிமகனுக்கும் சட்டப்படி உள்ள உரிமையைக்கூட 'இடதுசாரி' அரசு காலில் போட்டு மிதித்து வருகிறது. சாதி - மத எதிர்ப்பு சவடால் அடிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை இதுதான்!**

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

யினருக்குப் போய்ச் சேருவதில்லை என்று 'இடதுசாரி' அரசு மீது குற்றம் சாட்டியுள்ளது. மே. வங்கத்தில் 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 23.62% தாழ்த்தப்பட்டோரும், 5.59% பழங்குடியினரும் உள்ளனர். 1996 பட்ஜெட்டில் இம்மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு முறையே 4%, 2% நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, திட்டக் கமிசனின் தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதையும், ஆதிக்கசாதி இதன் மூலம் ஆதாயமடைந்துள்ளதையும் திட்டக் கமிசன் தலைவரான அனுமந்தப்பா அம்பலப்படுத்தியதோடு, மே. வங்க மாநில அரசுச் செயலருக்கு விளக்கம் கோரும் புகார் கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் மே.வங்க இடதுசாரிகளின் ஆட்சியில் அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு நிரப்பப்படாமல் 70,000 இடங்கள் இன்னமும் காலியாகவே உள்ளன. அதேசமயம் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினரின் வேலைக்கான விண்ணப்பங்கள் ஒன்றரை லட்சத்துக்கும் மேலாக கவனிக்கப்படாமல் குவிந்து கிடக்கின்றன. முகர்ஜி, பானர்ஜி, சக்ரவர்த்தி, குப்தா, போசு, பாசு - என ஆதிக்க சாதிகளே அரசு எந்திரத்தில் ஆகப் பெரும்பான்மையாக உள்ள நிலையில், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு உரிய காலத்தில் நிரப்பப்படுமா, என்ன?

இத்தகைய ஆதிக்க சாதியினரைக் கொண்ட அரசு எந்திரத்தை, அவர்களது நலன்களுக்காக உருவாக்கப்பட்ட அரசு எந்திரத்தை அடித்து நொறுக்காமல், அதை அப்படியே பாதுகாத்துப் புரட்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று மாய்மாலம் செய்து போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தார்கள். ''வங்கத்தைப் பார்! அங்கே சாதிக் கொடுமைகள் இல்லை; நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அங்கே சாதி ஆதிக்கம் தகர்ந்து விட்டது'' என்று மார்தட்டினார்கள். ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக போலிகளின் ஆட்சியில் சாதி ஆதிக்கமும் தீண்டாமையும் ஒழியவில்லை. மாறாக, ஆதிக்க சாதிகளின் கொட்டமும் அடக்குமுறையும்தான் பெருகியுள்ளது என்பதை அண்மைக்கால நிலைமைகளே நிரூபித்துக் காட்டுகின்றன.

நாடாளுமன்ற - சட்டமன்ற ஓட்டுக்கும் ''சீட்''டுக்கும் அலைவதும், தரகு வேலை செய்வதுமே 'புரட்சி'யாகிவிட்ட பிறகு, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை போலிக் கம்யூனிஸ்டுகள் என்றைக்கோ கிடப்பில் போட்டு விட்டனர். தாங்கள் ஆளும் மாநிலங்களிலேயே சாதி - தீண்டாமைக் கொடுமைகளை ஒழிக்க வக்கற்ற இக்கோமாளிகள், பிற மாநிலங்களில் தொடரும் சாதிய அடக்குமுறைக்கு எதிராகவும், அமெரிக்கா - தென்னாப்பிரிக்காவில் தொடரும் கருப்பின மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குரலெழுப்ப என்ன அருகதை இருக்கிறது?

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# இருண்ட வானில் உதித்த ஒளிக்கீற்று

சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தமிழகமெங்கும் வீச்சாக நடைபெற்று வருகிறது. பிரசுர வினியோகம், சுவரெழுத்து - சுவரொட்டி பிரச்சாரம், தட்டிப் பிரச்சாரம், ஆட்டோ பிரச்சாரம், தெரு முனைக் கூட்டங்கள், 50-க்கும் மேற்பட்ட இடங்களில் பொதுக்கூட்டங்கள் என மக்களிடையே இடையறாத பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 28.10.97 மற்றும் 29.10.97 தேதிகளில், சாதியை உருவாக்கி நியாயப்படுத்தும் பார்ப்பனிய இந்துமத வேத - புராண இதிகாசக் குப்பைகளை கொளுத்தும் போராட்டமும் தமிழகமெங்கும் மேற்கொள்ளப்பட்டன.

திருவெண்ணெய் நல்லூர் வட்டத்திலுள்ள இருவேல்பட்டு, மதுரை மாவட்டத்திலுள்ள பேரையூர், மற்றும் துறையூர், கரூர், பெருவளப்பூர், சனமங்கலம், பாடாலூர், நம்பு குறிச்சி ஆகிய ஊர்களில் எழுச்சிமிகு பொதுக் கூட்டங்கள் நடந்தன. சாதி அரசியல் நடத்தும் பிழைப்புவாத ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் சாதி - தீண்டாமையை ஒழிக்காது; உழுபவனுக்கு நிலம் சொந்தம், உழைப்பவனுக்கு அதிகாரம் என முழங்கி புதிய ஜனநாயகப் புரட்சி நடத்தும் நக்சல்பாரி இயக்கங்கள் தான் சாதி - தீண்டாமையை ஒழிக்கும். எனவே புரட்சிகர அமைப்புகளில் அணி திரளுங்கள் என சிறப்புப் பேச்சாளர்கள் மக்களை அறைகூவி அழைத்தனர். ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி நின்று ஆதரவு தந்தனர்.

இவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக மையப்படுத்தப்பட்ட அளவில் நவம்பர் 28-ஆம் தேதி, மதுரையில் பேரணி, ஆர்ப்பாட்டம் பொதுக் கூட்டம் சிறப்பாக நடந்தேறின.

மாலை 3 மணிக்கு மதுரை தொடர் வண்டி சந்திப்பு நிலையத்திலிருந்து பேரணி புறப்பட்டது. 2000-க்கும் மேற்பட்ட மக்கள் திரள் சாதி - தீண்டாமை ஒழிப்பு முழக்கங்களை விண்ணதிர எழுப்பிச் சென்றனர். கைக் குழந்தைகள், சிறுவர் - சிறுமியர் உட்பட ஆர்ப்பாட்டமாகச் சென்ற பேரணி மக்களை ஈர்த்தது.

ஊர்வலம் சென்ற வழியெங்கும் சாலையின் இரு மருங்கிலும் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கூடி ஊர்வலத்தைக் கண்டதோடு, இவ்வியக்கம் அவசியமானதெனவும் தமக்குள் பேசிக் கொண்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகமருகே ஆர்ப்பாட்டம் 5 மணிக்கு துவங்கியது. பாளையம் வட்ட வி.வி.மு. செயலர் தோழர் சேகர் தலைமையில் வேலூர் ம.க.இ.க. செயலர் தோழர் குமார் சிறப்புரையாற்றினார். தோழர்கள் காளியப்பன், கதிரவன், பன்னீர் செல்வம், செல்வராஜ், சீனிவாசன் ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் நமது கோரிக்கைகளை மனுவாக கொடுத்தனர்.

மேலவளைவு கொலைகாரர்களைக் கைது செய்து தண்டிக்கவும், பண்ணைபுரத்தில் தனி தேநீர்க் குவளைக்கு எதிராகப் போராடிய வி.வி.மு. தோழர்களைக் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஆதிக்க சாதியினரின் இட ஒதுக்கீடு உரிமையை ரத்து செய்யக் கோரியும் எனப் பல கோரிக்கைகள் தமிழக அரசிடம் வைக்கப்பட்டன.

தோழர் சேகர் தனது தலைமை உரையில் பல்லவராயன்பட்டி செருப்பு அணியும் போராட்டம், பண்ணைப்புரம் தனித் தேநீர்க் குவளைக் கடையை நொறுக்கும் போராட்டச் சம்பவங்களை விளக்கினார். கலகத்தின் மூலம் தான் விடுதலை பிறக்கும். நமது போராட்ட முழக்கங்கள் சரியானது, துணிவானது. வேறு யாரும் வைக்காதது. இது கலகத்தின் துவக்கம் தான் எனப் பேசி முடித்தார்.

தோழர் குமார் பேசும் போது நமது போராட்டம் ஓட்டுப் பொறுக்கிகளிடையே பயபீதியை உருவாக்கியிருப்பதை விளக்கினார். நாம் அறிவித்த பின்னரே அரசும் தேநீர்க் கடைகளில் தனி தேநீர் குவளை வைக்கக் கூடாது என அறிவித்தது. அதே நேரம் தனி தேநீர்க் குவளைக்கு எதிராகப் போராடுபவர்கள் மீது சட்டம் பாயும் என கருணாநிதி அறிவித்தது, ஆதிக்க சாதி வெறியர்களின் அடிவருடியாக கருணாநிதி இருப்பதை அம்பலப்படுத்தியது.

பிற்படுத்தப்பட்ட சாதியினர் அரசு சலுகை சன்மானத்திற்கு மண்டியிடுவதும், தாழ்த்தப்பட்டவரிடம் மீசை முறுக்கி ஆதிக்கம் செய்வதும் என இரட்டை வேடம் போடுகின்றனர். இவர்களின் இட ஒதுக்கீட்டை நாம் அனுமதிக்க முடியாது. சாதிப் படிநிலையில் பார்ப்பான் நலன் மட்டுமல்ல, 'சூத்திரனு'க்கும் இதில் ஆதாயமுள்ளது என்பதாலேயே அதை ஏற்கின்றனர். இந்த பார்ப்பன - 'சூத்திர', மக்கள் விரோதக் கூட்டை நக்சல்பாரி தலைமை தாக்கித் தகர்க்கும் எனச் சூளுரைத்து உரையை முடித்தார்.

ஆர்ப்பாட்டம் முடிந்த பின் கோரிப்பாளையமருகே பொதுக் கூட்டம் நடந்தது. தலைமை தாங்கிய தோழர் கதிரவன் நமது மைய முழக்கங்களான, 1. சாதி - தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் சாதிகளின் இட ஒதுக்கீட்டை ரத்து செய், 2. ஆதிக்க சாதி சங்கங்களைத் தடை செய், அதன் சொத்துக்களை நட்ட ஈடின்றி பறித்தெடு என்பனவற்றின் சரியான - நேர்மையான - போர்க்குணமான தன்மையை விளக்கினார். முக்குலத்தோர் சங்கம், வெள்ளாளக் கவுண்டர் சங்கம், இவை போன்றவை எப்படி மக்களுக்கெதிரானது என விளக்கி இவற்றை தடை செய்யக் கோரி முழக்கமிட்டார்.

பல்லவராயன்பட்டி போராட்டத்தை விளக்கி தோழர் செல்வராசு பேசினார். அதில் பங்கேற்ற தோழர்கள் பொதுக் கூட்ட மேடையில் அமர்த்தப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

ஆதிக்க சாதிப் பெண் பெற்ற குழந்தைக்குத் தாய்ப் பால் தர இயலாத போது, தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் தாய்ப்பாலூட்டி வளர்த்த நிகழ்வுகளைக் கூறி, "எந்த மேல்சாதிப் பெண்ணாவது தாழ்த்தப்பட்ட சாதி குழந்தைக்குப் பாலூட்டியதாகக் கேள்விப் பட்டதுண்டா?" என வினா எழுப்பினார்.

குற்றப் பரம்பரை என்ற இழிவுக்கு எதிராகக் கள்ளர்கள் போராடியது நியாயம் என்றால், தனது தீண்டாமை இழிவுக்கு எதிராகப் போராடும் தாழ்த்தப்பட்ட சாதியினரைக் கொன்று ஒடுக்குவது என்ன நியாயம்?

வறுமையில் சிக்கிய கள்ளர்கள் சிலர் கேரளாவில் கக்கூஸ் கழுவும் வேலை பார்க்கின்றனர். துபாயிலும் இதே வேலை, ஒட்டகம் மேய்ப்பது என செய்யும் நீயே இங்கு தீண்டாமை

சாதி – தீண்டாமையின் முதுகொடிக்க மதுரையில் நடந்த நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் பேரணி





படிப்பகம்

www.padippakam.com

# மறுகாலனியாக்கத்தையும், இந்து மதவெறி பாசிச அபாயத்தையும் முறியடிப்போம்!

மாநில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா.லெ), தமிழ்நாடு -யின் ஏழாவது பிளீனம் நவம்பர் 16, 17, 18, 19 தேதிகளில் நடந்து முடிந்தது. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கட்சி அமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட இப்பிளீனம், மார்க்ஸ் - ஏங்கெல்ஸ் அரங்கில் எளிமையாகவும், புரட்சிகர உத்வேகத்தோடும் நடந்தது. உலக அளவிலும், இந்தியாவிலும் மக்கள் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தியபின் நிகழ்ச்சிகள் துவங்கின.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் ஆகிய கொள்கைகளால் பின்தங்கிய - வளரும் நாடுகளை மறுகாலனியாக்கவும், தனது ஒற்றைத் துருவக் குடையின் கீழ் உலக நாடுகளைக் கொண்டு வரவும் செயல்பட்டு வருகிறது. அமெரிக்க மேல்நிலை வல்லரசு. பொருளாதார மேல்நிலை வல்லரசாக வளர்ந்து நிற்கும் ஐரோப்பிய ஒன்றியமும் - குறிப்பாக ஜெர்மனியும், ஜப்பானும், இராணுவ மேல்நிலை வல்லரசாக இன்னும் நீடித்து வரும் ரசியாவும் தங்களின் சுரண்டல் ஆதிக்க நலன்களுக்காக, அமெரிக்காவின் தலைமையில் நடந்து வரும் இந்த மறுகாலனியாதிக்க நடவடிக்கைகளில் பங்கேற்று நின்றாலும், உலகச் சந்தையை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள இவர்களுக்கிடையேயும், இவைகளுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலும் நாய்ச் சண்டைகள் எழுவது தவிர்க்க முடியாதது.

உலக வர்த்தக் கழகம், ஐ.நா., சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களை, இம்மேல்நிலை வல்லரசுகள், தங்கள் சுரண்டல் - ஆதிக்க நலன்களுக்கான கருவிகளாகப் பயன்படுத்தி வருகின்றன. பின்தங்கிய நாடுகளில் உள்ள அரைகுறை இறையாண்மையில் தலையிடுவதற்கு அரசு சாரா நிறுவனங்களை இயக்கியும் ஏவியும் வருகின்றன.

உற்பத்தியும், மூலதனமும் சர்வதேசமயமாகியிருப்பது, உழைப்புப் பிரிவினை சர்வதேசியமயமாகியிருப்பது, பிராந்திய பொருளாதார வளையங்கள் உருவாகியிருப்பது - இந்நிலைமைகள் சர்வதேசத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து மேல்நிலை வல்லரசுகளின் சுரண்டல் - ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடுவதற்கு முன்னெப்போதும் விட பிரகாசமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளது. இந்த ஒற்றுமையைத் தகர்த்தெறிய மேல்நிலை வல்லரசுகள், பாசிச சர்வாதிகாரத்திற்கு சித்தாந்த ரீதியாகவும், சமூக அடித்தளம் ரீதியாகவும் மிகுந்த சேவை செய்கின்ற மதவெறி, தேசிய வெறி, இனவெறி, நிறவெறி இயக்கங்களைத் தூண்டி வளர்த்து வருகின்றன. மேல்நிலை வல்லரசுகளுக்கு இடையேயான முரண்பாடுகளும் நாளடைவில் கூர்மையடைந்து மூன்றாம் உலகப் போருக்கு இட்டுச் செல்லும் அபாயம் இருக்கிறது. இதை முறியடிக்க சர்வதேசத் தொழிலாளர் கூட்டமைப்புக்களையும், அவற்றிற்கு வழிகாட்டித் தலைமை தாங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் கட்டி வளர்க்க வேண்டும் என்ற அவசரக் கடமையை ஏழாவது பிளீனம் சுட்டிக் காட்டியது.

உள்நாட்டு அரசியல் - பொருளாதார நிலைமைகளைப் பரிசீலித்த ஏழாவது பிளீனம், உலகெங்கிலும் போலவே நமது நாட்டிலும் தனியார்மய - தாராளமய - உலகமயக் கொள்கைகள் தொழில், விவசாயம், மற்றும் குறிப்பாக சேவைத் துறைகளில் திணிக்கப்பட்டு வருவதை எடுத்துக் காட்டியது. இத்தாராளமயக் கொள்கைகளை ஆதரித்து, அவற்றை மத்திய - மாநில அரசுகள் நடைமுறைப்படுத்துவதற்கு இடதுசாரிக் கட்சிகள் தொடங்கி வலதுசாரிகள் வரை கொள்கை வேறுபாடின்றி துணை நிற்கின்றன. கடந்த ஆறாண்டுகளாக மிகத் தீவிரமாகத் திணிக்கப்பட்டு வரும் இத்தாராளமயக் கொள்கைகள் கடும் நெருக்கடிக்குள் நாட்டையும் மக்களையும் தள்ளி விட்டுள்ளது. ஆளும் வர்க்கங்களும் அவற்றின் பிரதிநிதிகளான ஓட்டுக் கட்சிகளும் நாட்டை ஆளும் தகுதியை இழந்துவிட்டன என்பதை இந்நெருக்கடிகளும் நாடாளுமன்றத்தில் அன்றாடம் அரங்கேறி வரும் அராஜகங்களும் எடுத்துக் காட்டிவிட்டன. இச்சமூக - பொருளாதார நெருக்கடி மற்றும் நாடாளுமன்ற அராஜகத்தைக் காட்டி, பார்ப்பனிய இந்து மதவெறி பாசிச சக்திகள் தம்மை ஒரு மாற்று சக்தியாகக் காட்டிக் கொண்டு, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளத் தீவிரமாக முயன்று வருகின்றன.

மறுகாலனியாதிக்கம் - இந்து மதவெறி பாசிச அபாயம் ஆகியவற்றிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு மா-லெ புரட்சியாளர்களின் தோள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இப்பொறுப்பை உணர்ந்து, புரட்சியாளர்கள் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து, மக்களைத் திரட்டிப் போராட வேண்டிய கடமையை இப்பிளீனம் வலியுறுத்தியது.

உலக - உள்நாட்டு நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில், கட்சியின் நகல் திட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. விவாதம் ஜனநாயகப்பூர்வமாகவும், தோழமை உணர்வோடும் நடந்தது. புதிய மாநில அமைப்புக் கமிட்டியும் அதன் செயலாளரும் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். கட்சியை விரிவுபடுத்தவும், மக்களுடன் ஐக்கியப்படவும், மக்கள் போராட்டங்களைக் கட்டியமைக்கவும் கூடுதல் அர்ப்பணிப்பு - தியாக உணர்வோடு செயலாற்றுவது என தோழர்கள் அனைவரும் உறுதியேற்றனர். நான்கு நாள் நிகழ்ச்சிக்குப் பிறகு சர்வதேசிய கீதத்துடன் பிளீனம் நிறைவுற்றது.

**செயலர்,**
**மாநில அமைப்புக் கமிட்டி,**
**இந்தியப் பொதுவுடைமைக் கட்சி,**
**(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்),**
**தமிழ்நாடு.**

---

பார்ப்பது ஏன் என கேள்வி எழுப்பினார். குடும்பம் குடும்பமாக சாதி - தீண்டாமைக்கு எதிராகப் போராடுவோம் என அறைகூவி தோழர் உரையை முடித்தார்.

அடுத்து பேசிய தோழர் சேகர் இந்து புராண - வேத இதிகாசக் குப்பைகளின் ஆபாசங்களை, ஆதிக்கங்களைத் தோலுரித்து, அவற்றைக் கொளுத்த வேண்டியதன் தியாயத்தைப் புரிய வைத்தார்.

இறுதி உரையாற்றிய தோழர் காளியப்பன் ஓட்டுப் பொறுக்கிகளின் ஓட்டாண்டித்தனத்தை திரைகிழித்தார். சாதி ஒழிப்பில் இருப்பதாகக் கூறும் 'மூப்பனாரின்' அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தினார். தஞ்சைப் பகுதி கள்ளர்கள் காசில்லாத போது அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளிலும், வசதி வந்தபின் தி.மு.க., அ.தி.மு.க. என பிழைப்புவாதக் கட்சிகளில் அணிதிரண்ட வர்க்க முரண்பாட்டை அம்பலப்படுத்தினார். இவர்கள் தான் ஒருபுறம் தீண்டாமை, ஆதிக்கம் செலுத்திக் கொண்டே மறுபுறம் இடஒதுக்கீடு சலுகையும் பெறுகின்றனர்.

சாதி நிலவுவதே பின்தங்கிய நிலவுடைமை உற்பத்தியினால் தான். உழுபவனுக்கே நிலம் சொந்தம், உழைப்பவனுக்கே அதிகாரம் என்ற புதிய ஜனநாயகப் புரட்சியில் சாதி - தீண்டாமை முற்றாக ஒழிக்கப்படும் என தனது உரையை முடித்தார்.

சர்வதேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

**தகவல்:**
**ம.க.இ.க. - பு.மா.இ.மு. - வி.வி.மு.**
**தமிழ்நாடு.**



படிப்பகம்

www.padippakam.com

# “ஆயுத பூஜை” விடுதலையைத் தருமா?

செப்டம்பர், 30 “புதிய ‘ஜனநாயகம்’” ஏட்டில், “ஆண்டிமடம் ஆயுதக் கொள்ளையும், புரட்சிகர அமைப்புகள் மீது அடக்குமுறையும்” என்ற கட்டுரை வெளியிட்டிருந்தோம். அதன் மீது திருச்சி - சுரேந்திரன் என்பவர் தனது பண்புமிகு கருத்துக்களை எழுதியுள்ளார். கடிதம் தனியே அச்சாகியுள்ளது.

இது தனிப்பட்ட ஒருவரின் கருத்தாக மட்டும் நாங்கள் கருதவில்லை. சாதி, இன ரீதியில் மட்டுமல்ல, மார்க்சிய - லெனினியத்தின் பெயரால் இயங்கும் பல்வேறு குழுக்கள் எங்களுக்கு எதிராகக் கடந்த பல ஆண்டுகளாகச் செய்து வரும் பிரச்சாரத்தின் ஒரு பகுதி தான் இது!

இது இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கிறது. ஒன்று, எங்களுக்கு எதிராக வசைபாடுவதும் சாபமிடுவதும்; இரண்டு, வீரதீரப் புரட்சிப் போராளிகளும் தியாகிகளுமாகிய தங்களைக் கொச்சைப்படுத்தி, ஆணவமாக எழுதி சகட்டு மேனிக்கு விமர்சிக்கிறோம் என்கிற குற்றச்சாட்டு.

இந்த இரண்டுமே எமது புரட்சிகர அரசியலுக்கு மக்கள் ஆதரவு திரண்டு வருவது கண்டு, தமது ஆற்றாமையால் அவர்கள் எரிச்சலும் ஆத்திரமும் அடைவதன் வெளிப்பாடு தான்!

புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகளும், தமிழ்நாடு விடுதலைப் படையும் இரண்டு வேறு வேறான அரசியல், நடைமுறைகளைக் கொண்டு இயங்குகின்றன. மக்களிடம் எமது அரசியலை எடுத்துச் செல்வதற்கான வழிமுறைகளாக, “மேடை போட்டுப் பேசுவது, பாட்டு எழுதிப் பாடுவது, அறப் போராட்டங்களில் ஈடுபடுவது போன்ற மேலோட்டமான அரசியலைச்” செய்கிறோம். இவைதவிர சுரேந்திரன் போன்றவர்கள் அறிவுக்கு எட்டாத செயல்தந்திர முழக்கங்களின் பகுதிகளாகக் கருவறையில் நுழைவது, இறால் - தேக்குப் பண்ணைகளை அழிப்பது, ஊழல் முதலைகளின் பினாமி சொத்துக்களில் புகுந்து தாக்குவது, திடீர்ப் பணக்கார அரசியல் ரௌடிகளுடன் மோதுவது, சாதித் தடை விதிக்கப்பட்ட வீதிகளுக்குள் நுழைவது, தேநீர்க் கடைகளை நொறுக்குவது, சாதி மறுப்பு மணவிழாக்கள் நடத்துவது, பார்ப்பன இசை விழாவில் புகுந்து கலகம் புரிவது, அவசியமாகும் போது எதிரியை நிர்மூலமாக்குவது போன்ற “அற”ப் போராட்டங்களும் செய்கிறோம். இதனால் கை - கால் முறிந்து, மண்டை உடைந்து இரத்தஞ்சிந்துவது முதல் ஆயுள் தண்டனை ஆகிய “அற்பமான” இழப்புகளையே எமது தோழர்கள் சந்திக்கிறார்கள்.

இதற்கு மாறாக, பாலங்களுக்கும், சிலைகளுக்கும், தொலைக்காட்சி நிலையங்களுக்கும், போலீசு நிலைய சுற்றுச் சுவர்களுக்கும் குண்டு வைக்கும் வீரஞ் செறிந்த போராட்டங்களையும் “வெடிகுண்டு விபத்து உட்பட உயிர்த் தியாகங்களையும்” த.வி. படை சந்திக்கிறது. “பரபரப்பான நடவடிக்கைகள் மூலம் செய்திகளில் அடிபட வைப்பது தான் சிறந்த பிரச்சார முறை”, “எப்படியாவது போலீசுத் தாக்குதலுக்கு உள்ளாக வைப்பதன் மூலம் போலீசு மீது மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துவது தான் அவர்களை அரசியல்படுத்துவது”. “அணிகளை ஏதாவது வழக்கில் சிக்க வைப்பதன் மூலம் தலைமறைவாகி கட்சிக்கு முழு நேர ஊழியர்களாக்குவது” — இவைதான் த.வி. படைக்கு தத்துவ மேதை தமிழரசன் காட்டிய வழி!

உண்டியல் குலுக்குவது, நன்கொடை வசூலிப்பது போன்ற “கௌரவமில்லாத” செயல்கள் மூலமே இயக்கத்துக்கு நாங்கள் நிதி சேர்க்கிறோம். ஆனால் நிதி திரட்டுவதைக் கூட ஒரு அரசியல் பிரச்சாரமாகவே செய்கிறோம். அதற்கான கணக்கு அந்தந்த அமைப்புகளில் வைக்கப்படுகிறது.

இதையெல்லாம் மானப் பிரச்சினையாகக் கருதும் த.வி. படை “சிலைகளை எடுப்பது, வங்கி நடவடிக்கை” என்கிற வீரஞ்செறிந்த முறைகள் மூலம் நிதி சேர்க்கின்றனர். எவ்வளவு எடுத்தார்கள், யார் - யார் எப்படி, எதற்கு செலவு செய்தார்கள் என்பதை “ஆயுத மோதல்” என்கிற தோழமையான முறையில் கணக்குத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

இந்த வேறுபாடுகளுக்கு ஏற்பத்தான் எங்கள் விமர்சனமும் அமையும். துண்டுச் சீட்டு முடிவுகளும் உத்திரவுகளும், வாய்வழி அவதூறு விமர்சனங்களும் என்கிற நழுவிக் கொள்ளும் வகையிலான நிறுவன முறையே த.வி. படை அமைப்பாளர் தமிழரசன் ஏற்படுத்திய பாரம்பரியம். அதில் உருவாகி வந்தவர்களுக்கு எங்கள் விமர்சனம் கசக்கவே செய்யும். இந்த விமர்சனங்கள் எவ்வளவு மோசமாக, கடுமையாக இருந்தாலும், அவர்களின் கணிப்புப்படி நாங்கள் வாய்பேசிக் கிழிக்கும் புரட்சி வீரர்கள் தாம் என்பதை மக்

---

*அன்புள்ள புதிய சனநாயக நண்பர்களுக்கு,*

*செப்டம்பர் 30 என்று நாளிட்ட உங்களது புதிய சனநாயகம் ஏட்டின் 26 ஆம் பக்கத்தில் “ஆண்டிமடம் ஆயுதக் கொள்ளையும் புரட்சிகர அமைப்புகள் மீது அடக்குமுறையும்” என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளீர்கள்.*

*ஆயுதக் கொள்ளை, கும்பல், சூறையாடுதல், இரகசிய பயங்கரவாத பரபரப்பு வேலைகள் என்கிற சொற்களை கையாண்டு தமிழ்நாடு விடுதலைப் படையின் செயல்பாடுகளை கொச்சைப் படுத்தியுள்ளீர்கள்.*

*புரட்சிகர அமைப்புகள் என்று உங்களுக்கு நீங்களே பட்டம் சூட்டிக் கொள்கிறீர்கள்.*

*தமிழக மக்களின் விடுதலைப் பாதையை ஏதோ நீங்கள் மட்டுமே ஒட்டு மொத்த குத்தகைக்கு எடுத்துக் கொண்டது போன்ற ஆணவத்தோடு எழுதி வருகிறீர்கள். தமிழர் அமைப்புக்களையெல்லாம் சகட்டு மேனிக்கு விமர்சனம் செய்து வருகிறீர்கள். மேடை போட்டு பேசுவது, உண்டியல் குலுக்குவது, பாட்டு எழுதிப் பாடுவது, அறப்போராட்டங்களில் ஈடுபடுவது போன்ற மேலோட்டமான அரசியலைத் தவிர நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? அதைத்தவிர ஆழமான என்ன அரசியல் உங்களுக்குத் தெரியும்? உங்களோடு உள்ள கருத்து முரண்பாட்டைக் கூட வெளியிடத் திராணியில்லாத நீங்கள் உயிரைக் கொடுத்துப் போராடும் போராளிகளையெல்லாம் பாசிசவாதிகள் என்றும் கும்பல்கள் என்றும் பிதற்றிக் கொண்டு அலைவது சரியில்லை.*

*நீங்களும் தி.மு.க. போன்று வாய்பேசிக் கிழிக்கும் “புரட்சி வீரர்கள்” என்பதை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். எத்தனைக் காலம்தான் நீங்களும் இந்த மக்களை ஏமாற்றப் போகிறீர்கள்? நக்சல்பாரி வீரம் என்று திடீரென அணி வகுத்து ஆரவாரம் செய்கிறீர்கள். செயல்பாட்டில் ஒன்றையும் காணோமே. செய்கிறவனையும் நோண்டிக் கொண்டு வைக்கோல் போரில் கிடக்கிற நாயாக அல்லவா மாறிவிட்டீர்கள். உங்களுக்குள் இருக்கிற பார்ப்பனத் தலைமை செத்து ஒழிந்தாலொழிய நீங்களும் உருப்படமாட்டீர்கள் மற்றவர்களையும் உருப்படவிடமாட்டீர்கள்.*

*அடுத்த கேசட் எப்போது வெளியிடப் போகிறீர்கள்? உண்டியலைக் கீழே போட்டுவிட்டு நீ சொல்கிற புரட்சியை ஒருநாளாவது வாழ்ந்து காட்டு. இதுநாள்வரை உங்கள் செயல்பாட்டை வைத்துக் கொண்டு நாங்களே உங்களை ஒரு புரட்சிகர அமைப்பு என்று சொல்லத் தயங்குகிறோம். நீங்களே உங்களை புரட்சிகர அமைப்பு என்று அழைக்க வெட்கமாயில்லையா?*

தோழமையுடன்,
சுரேந்திரன், திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

களும் உணர்ந்து வரும் போது, அவர்கள் உயிரைக் கொடுத்துப் போராடுவதற்கு நாங்கள் எந்த வகையில் தடையாக இருக்கிறோம்? இவர்கள் குண்டு வைக்க, போலீசிடம் சிக்க வதைபடும் எமது தோழர்கள் எங்காவது காட்டிக் கொடுத்திருக்கிறார்களா? ''ராஜீவ் கொலைக்கு புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் செய்தியாளர்கள் காரணமாக இருக்கலாம்'' என்று விடுதலைப் புலி தளபதி கிட்டு லண்டனில் இருந்து தினமணிக்கு பேட்டி கொடுத்தாரே! அப்படி, ''தமிழ்நாட்டு குண்டு வெடிப்புக்கு இன்னார் தான் காரணமாக இருப்பார்கள்'' என்று கை காட்டும் வேலை செய்தோமா?

இப்படி இருக்கும் போது, வைக்கோல் போரில் கிடக்கும் நாயாக மாறி, இவர்கள் சக போராளிகளைத் தலைவெட்டும் செயலுக்குத் தடையாக என்ன செய்தோம்? இவர்கள் கற்பனை செய்வதைப் போலவே எங்களுக்குள் பார்ப்பனத் தலைமை இருந்து விட்டுப் போகட்டும், நாங்கள் உருப்படாமலே போகிறோம். ஆனால் அது எப்படி இவர்களை உருப்பட விடாமல் தடுக்கிறது?

இவர்களால் கேலிக்குள்ளாக்கப்படும் அதே ''கேசட்டுகள்'' தாம் தமிழ்நாட்டின் எல்லா முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர இயக்கங்களாலும் பயன்படுத்தப்படுகிறது. எங்கள் தோழர்கள் பிரச்சாரம் செய்து துண்டு விரித்தால் கூலி விவசாயப் பெண்களும் கடன் வாங்கி நன்கொடையும் உணவும் அளிக்கிறார்கள். பெரியாருக்குப் பிறகு இது தான் சரியான பகுத்தறிவு இயக்கம் என்றும், பழைய கம்யூனிச இயக்கங்களை விடப் புரட்சிகரமானது என்றும் முதிய திராவிட, கம்யூனிசத் தோழர்கள் எமது கரங்களைப் பற்றிக் கொண்டு குரல் தழுதழுக்கச் சொல்லுகிறார்கள். அக்கட்சிகளின் இளைஞர்கள் தலைமையில் கட்டுப்பாடுகளை மீறி இயக்கங்களின் போது எமது தோளோடு தோள் நிற்கிறார்கள். நக்சல்பாரி வீரத்தைத் துணிவாகவும், எழுச்சியோடும் தமிழ் மக்கள் முன் வைக்கும் ஒரே அமைப்பாகிய நாங்கள் நடத்தும் அணிவகுப்புதான் சுரேந்திரனின் தோழர்களும் முகம் காட்டும் அரங்கமாக அமைந்தது. இப்படி இருக்கும் போது எங்களைப் புரட்சிகர அமைப்பு என்று ஏன் நாங்கள் கருதக்கூடாது? எதற்காக வெட்கப்பட வேண்டும்?

— ஆசிரியர் குழு

# தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் 'மார்க்சிஸ்டு'களின் துரோகம்!

கிராமப் புறங்களில் சாதி ஆதிக்கமும், சாதிக் கொடுமைகளும் அன்றாடம் தனது கோர முகத்தைக் காட்டி வருகின்றன. இந்தக் கொடுமைகளைச் செய்பவை மிருகங்கள் தான். அப்படி சில மிருகங்கள் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்திலுள்ள ஆதனூர் 48 கிராமத்தில் கொலைவெறித் தாண்டவமாடி ஒரு உயிரையும் பறித்து விட்டன.

21.8.97 அன்று காலை ரா. செல்வம், பார்வதி தம்பதியினரின் 6 வயது பெண் குழந்தை சாலை வழியே பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தது. அம்பலக்காரர் சாதிக்காரனும் கைலவணம் பேட்டை என்ற பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவனுமான ரவிச்சந்திரன் என்பவன் சைக்கிளில் வந்து, குழந்தை மீது மோதினான். தலையில் அடிபட்டு, மயக்கமடைந்த குழந்தையை சாலையிலேயே விட்டு விட்டு ஓடி, ஒரு கடைக்குள் ஒளிந்து கொண்டான்.

குழந்தையின் நிலையைப் பார்த்த தாய் பார்வதி பதறித் துடித்து அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து வைத்தியம் பார்த்துத் திரும்பி வந்தார். சைக்கிளில் மோதியவன் யார் எனத் தெரியாமல் கோபத்திலும் ஆத்திரத்திலும், 'குழந்தையை அடித்துப் போட்டவன் யாரோ தெரியவில்லை. அவன் நல்லா இருப்பானா? அவன் குடும்பம் விளங்குமா?' எனத் திட்டிக் கொண்டு வந்தார்.

கடையில் ஒளிந்து கொண்டிருந்த ரவிச்சந்திரனின் மேல் சாதி ரத்தம் கொதித்தது. 'யாரையடி அவன், இவன் என்கிறாய் பள்ள நாயே. உன் குழந்தையை என்ன, உன்னையே நடு ரோட்டில் உதைப்பேன்' எனக் கூறிக் கொண்டே அம்மிருகம் அத்தாயில் முகத்தில் எட்டி உதைத்தது. அடிபட்டு, வைத்தியம் பார்த்த குழந்தை இடுப்பிலிருந்து அலற அலற அத்தாய் சாலையில் சரிந்தார்.

கடையில் பொருள் வாங்கிக் கொண்டிருந்த சிறுவன் தங்கராஜ் சத்தம் கேட்டு ஓடிவர, அவனுக்கும் அடி விழுந்தது. தண்ணீர் எடுக்க வந்த குமார் ஓடி வர அவருக்கும் அடி விழுந்தது. 'மட்டக் கட்டி தண்ணி வாங்கி குடிச்ச பள்ள நாய்களுக்கு அவ்வளவு கொழுப்பா?' என சாதிவெறி கண்ணை மறைக்க பக்கத்து கடைத் தெருவில் வசிக்கும் ஆறுமுகம் பிள்ளையின் மகன் உத்திராபதியும் ரவிச்சந்திரனுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்டவர்களைக் கொடூரமாகத் தாக்கியுள்ளான்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கூடி ஊர்ப் பெரியவர்களிடம் முறையிட அது புறக்கணிக்கப்பட்டது. போலீசில் புகார் செய்தும் நடவடிக்கை ஏதுமில்லை. பாதிக்கப்பட்டவர்களால் 22.8.97-இல் காவல் நிலையம் முற்றுகையிடப்பட்டது. போலீசு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கவே மக்களும் திரும்பி விட்டனர்.

ஆனால் அன்று மாலையே, 'போலீசுக்கு புகார் கொடுக்குற அளவு துணிச்சல் வந்துடுச்சா? இவனுங்கள இனி உசிரோடு விடக் கூடாது' என சிதம்பரம் பிள்ளையின் மகன்களான வேதரத்தினம், ராஜாங்கம், ரவிச்சந்திரன் மற்றும் ஆறுமுகம் பிள்ளை மகன் உத்திராபதி ஆகிய நால்வரும் சேர்ந்து கொலைவெறித் தாக்குதலை நடத்தினர்.

தனித்தனியே வேலைக்குச் சென்று திரும்பிய தாழ்த்தப்பட்ட மக்கள் வடிவேலு, பஞ்சநாதன், செல்வம், சுப்பிரமணியன், செல்வகுமார், சிவா - வீராபி மன்னன், குமார் முதலியோர் ஆயுதங்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் மிதக்க விடப்பட்டனர். சொல்லத் தகாத ஆபாச வார்த்தைகளால் சாதியைச் சொல்லி திட்டினர். தாக்கப்பட்ட மக்களின் ரத்தத்தையே நெற்றியில் பூசிக் கொண்டு திமிருடன் உலவினர்.

வெட்டப்பட்டவர்களின் உறவினர்கள் ஓடிவந்து, அவர்களின் உயிரைக் காப்பாற்ற மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல பேருந்துகளில் ஏறினர். கொலைகார கும்பலோ ஓட்டுனர்களைக் கத்தியைக் காட்டி மிரட்டி, தாக்கப்பட்டவர்களை இறக்கி விட்டனர்.

எப்படியோ வேதாரண்யம் மருத்துவமனை சென்றபோது, அங்கே தஞ்சாவூருக்கு அனுப்பி விட்டனர். 28.8.97 அன்று வடிவேலு, சிகிச்சையளித்தும் பலனின்றி இறந்து விட்டார். மற்றவர்களின் உடல் நலனும் தேறுவது கடினம்.

அரசுத் தரப்பிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமோ உதவியோ வழங்கப்படவில்லை. கொலைகாரர்கள் கைதாகி பிணையில் வந்து விட்டனர். அம்பலக்கார சாதி சங்கம் கூடி, கொலைகாரர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

அப்பகுதியில் போலி கம்யூனிஸ்ட் சி.பி.எம்.மின் விவசாயக் கூலித் தொழிலாளர் சங்கம் உள்ளது. இறந்து போன வடிவேலு சி.பி.எம். கட்சி உறுப்பினர். சி.பி.எம். கட்சியின் பகுதி தலைவர்களில் சிலர் அம்பலக்கார சாதியைச் சேர்ந்தவர்கள். எனவே சி.பி.எம். கட்சி சரியான நடவடிக்கை எடுக்காமல் நழுவுகிறது.

நமது அமைப்பு ஆதரவாளர்கள் இருவர் ஆதனூரைச் சேர்ந்தவர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க தங்களால் ஆன முயற்சி செய்து ஓரளவு வெற்றி பெற்றனர். வடிவேலின் இறுதி ஊர்வலத்தில் மேலும் ஆதரவாளர்களைத் திரட்டி கலந்து கொண்டனர்.

தற்போது அம்பலக்கார சாதி நிலவுடைமையாளர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை தர மறுக்கின்றனர். சுப்பிரமணியபிள்ளை என்பவர் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த பணக்கார விவசாயி. இவரு தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்குக் கூப்பிடுவதில்லை. எதற்கு வம்பு என்கிறார். சௌந்தரராசன் என்பவரும் அருகாமை கிராம சி.பி.எம்.காரர். இவரும் தாழ்த்தப்பட்டவர்களை தனது நிலத்தில் வேலை செய்ய கூப்பிடுவதில்லை.

இதை அம்பலப்படுத்தி அப்பகுதியில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. போலி கம்யூனிஸ்ட் சி.பி.எம். காரர்களின் நடைமுறையும், நமது நடைமுறையும் அம்மக்களிடையே தெளிவை உருவாக்கி வருகிறது. வி.வி.மு.வின் மீது அம்மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாகவே, தங்கள் பகுதியில் வாழும் மேகலா என்ற பெண்ணை, வி.வி.மு. ஆதரவாளர் ராஜாவிற்கு மணமுடித்துத் தர முன் வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேகலா - ராஜா தம்பதியினரின் சாதி - தீண்டாமை மறுப்பு புரட்சிகர திருமணம் விழுப்புரத்தில் நவம்பர் 22-ல் நடந்தது. வர்க்கப் போரையும் சாதி - தீண்டாமை ஒழிப்பையும் முன்னெடுத்து வருகிற அமைப்பாக வி.வி.மு. வளர்ந்து வருகிறது.

தகவல்: வி.வி.மு., வேதாரண்யம்



படிப்பகம்

www.padippakam.com

### மடியில் கனம்...

பாபர் மசூதி இந்து மதவெறியர்களால் தகர்க்கப்பட்ட பின், பம்பாய் நகரில் நடந்த 'மதக் கலவரத்தை' விசாரித்து வரும் ஸ்ரீ கிருஷ்ணா கமிசன், அக்கலவரத்தின் பொழுது இந்திய இராணுவம் நடந்து கொண்ட விதத்தை விசாரிப்பதற்காக, பல்வேறு ஆவணங்களை இராணுவ அமைச்சகத்திடம் கேட்டு தாக்கீது அனுப்பியது. இராணுவமோ, 1872-ஆம் ஆண்டு காலனிய காலத்தில் இயற்றப்பட்ட சட்டத்தைக் காட்டி, எந்தவொரு ஆவணத்தையும் தர முடியாது என மறுத்து விட்டதோடு, இராணுவத்தை விசாரிக்க இக்கமிசனுக்கு உரிமையே இல்லை என்றும் ஒரு போடு போட்டு விட்டது.

### கூலி கேட்பது கிரிமினல் குற்றமா?

பம்பாயில் கட்டாவ் மில் தொழிலாளர்களுக்கு கடந்த எட்டு மாதங்களாக சம்பளம் தரப்படவில்லை; கடந்த இரண்டு வருடங்களாக போனசும் தரப்படவில்லை. தீபாவளிக்கு முதல் நாள் தங்களுக்குரிய சம்பளத்தையும் போனசையும் கேட்டு, அம்மில் அலுவலகத்துக்குச் சென்ற தொழிலாளர்களை, தனது பாதுகாவலர்களைக் கொண்டு துப்பாக்கியால் சுட்டு துரத்தியடித்துள்ளார் அம்மில் முதலாளி. பம்பாய் போலீசோ அம்மில் முதலாளிக்கு சலாம் போட்டு, அவரைத் தாக்க வந்ததாகப் பொய் வழக்கு ஜோடித்து, 110 தொழிலாளர்களைச் சிறையில் தள்ளி விட்டது.

### 'மார்க்சிஸ்டு'களின் கருணை!

மேற்கு வங்க மாநிலத்தில் இயங்கி வரும் பாக்னன் பட்டாசுத் தொழிற்சாலையில், 95-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த வெடி விபத்தில் 23 குழந்தைகள் பலியாகினர்; பலர் படுகாயமடைந்தனர். இவ்விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் எவ்வித நிவாரணமும் தர மறுத்து விட்ட 'மார்க்சிஸ்டு' அரசு, பாக்னன் நகர மக்கள் விடாப்பிடியாகப் போராடிய பின், வெறும் ஏழாயிரம் ரூபாயை நிவாரணமாக வீசியெறிந்தது. மார்க்சிஸ்டுகளின் இந்த அலட்சியத்தை எதிர்த்து நடந்த வழக்கில், கல்கத்தா உயர்நீதி மன்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாய் நட்ட ஈடாகத் தர வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. ஆனால் தீர்ப்பு வந்து ஒரு வருடம் முடிந்த பின்னும் கூட, 'மார்க்சிஸ்டு'களின் மனதில் கருணை சுரக்கவில்லை.

### பாலியல் வன்முறைக்கு இளஞ்சிறுமிகள் பலி

அரியானா மாநிலத்திலுள்ள பகாதுர்கா பகுதியில், கடந்த 18 மாதங்களில் 11 இளஞ் சிறுமிகள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகள் தொடர்பாக அம்மாநில போலீசு, இதுவரை ஒருவரைக் கூட கைது செய்யவில்லை. இந்நிலையில் அக்டோபர் 8-ஆம் தேதி மற்றொரு சிறுமி இப்பாலியல் வன்முறைக்குப் பலியாகி விட, அப்பகுதி மக்கள் பா.ஜ.க. - அரியானா விகாஸ் கட்சி கூட்டணி அரசின் மெத்தனத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வக்கற்ற போலீசோ, போராடிய பொதுமக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி, இரண்டு பேரைக் கொன்று போட்டு விட்டது.

### கிளிண்டனின் "ஸ்டார் வார்ஸ்"

வான்வெளியில் சுற்றி வரும் செயற்கை கோள்களை பூமியில் இருந்தே தாக்கி அழிக்கும் நவீன லேசர் ஆயுதமொன்றை, இராணுவத் தளவாடங்களைத் தயாரிக்கும் மூன்று அமெரிக்க ஏகபோக நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ளன. இந்த நவீன ஆயுதத்தின் திறனைப் பரீட்சித்துப் பார்க்கும் முதல் கட்ட சோதனையையும் நடத்தி முடித்து விட்டது, அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன். ஊருக்கு அமைதி உபதேசம்; தனக்கோ ஆயுதமே பிரதானம்!

### அடிப்படை உரிமையைப் பறித்து போலீசுக்குப் பாதுகாப்பு

ஆந்திரப் போலீசின் வன்முறை வெறியாட்டங்களையும், மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்துவதில் ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கமிட்டிக்கு முக்கியப் பங்குண்டு. இவ்வமைப்பின் செயல்பாடுகளை முடக்கும் விதமாக, "ஆந்திரப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் பணியாற்றி வரும் கல்வியாளர்களும், பேராசிரியர்களும், ஊழியர்களும் சிவில் உரிமை அமைப்புடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது; மீறி தொடர்பு கொள்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என நரித்தனமான அரசு ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளது ஆந்திரா அரசு.

### அதிகார பீடத்தில் மேல்சாதி வெறியர்கள்

பம்பாயில் தாழ்த்தப்பட்டோர் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டை விசாரித்து வரும் குந்தேவர் கமிசன், நந்தகுமார் சௌகுலே என்ற உயர் போலீசு அதிகாரியை விசாரணை செய்த பொழுது, அவர், "தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது" எனப் பதில் அளித்துள்ளார். இது அறியாமையா? அல்லது மேல்சாதி திமிரா? அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை அணிவித்து அவமதித்த வழக்கை விசாரணை செய்த இந்த அதிகாரியால் கைது செய்யப்பட்ட 20 பேரும் புத்த மதத்துக்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### யோசனை உண்டா?

உ.பி. சட்டசபையில் உள்ள அனைத்து நாற்காலிகளும் தற்பொழுது தரையில் பதிக்கப்பட்டு விட்டன; மைக் - ஸ்டாண்டுகள் மேஜையோடு பொருத்தப்பட்டு விட்டன. குஜராத் சட்டசபையில் இரும்பு மைக் - ஸ்டாண்டுகளைத் தூக்கிப் போட்டு விட்டு, பிளாஸ்டிக் மைக் - ஸ்டாண்டுகளை வைத்து விட்டனர். சட்டசபை குஸ்தி மைதானமாக மாறிவிடாமல் தடுக்க, ஒட்டுக் கட்சிகள் செய்து வரும் மாற்றங்கள் இவை. எல்லாம் சரிதான். ஆனால் ரௌடி எம்.எல்.ஏ.க்களை எப்படி புத்தனாக மாற்றுவது என்பதுதானே பிரச்சினை?

### பம்பாய் யாருடைய நகரம்?

மகாராஷ்டிராவில் ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி, சட்டசபை தேர்தலின் பொழுது பம்பாய் நகரில் வாழும் 40 இலட்சம் ஏழைகளுக்கு 10 இலட்சம் இலவச வீடுகள் கட்டித் தருவதாக வாக்களித்தது. பதவியேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் 1468 குடும்பங்களுக்குத் தான் இலவச வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதே பொழுதில், ஏழை மக்களின் குடிசைகளை இடித்துத் தள்ளிவிட்டு, அக்காலிமனைகளைக் கைப்பற்றிக் கொள்ளும் அக்கிரமம் மிக வேகமாக நடந்து வருகிறது. "தீபாவளிக்குள் 35,000 குடிசைகளை இடித்துத் தரை மட்டமாக்குவேன்" என வெளிப்படையாகவே கொக்கரித்தார் அம்மாநில முதல்வர். அவரின் இத்திட்டத்தின் படி பம்பாயில் நவம்பர் 18 முடிய 11,500 குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்டு விட்டன. மழை - பனிக்காலம் என்றும் பாராமல் 55,000 ஏழைகள் குழந்தை குட்டிகளோடு தெருவில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

**குடிசைகள் இடிக்கப்படுவதை எதிர்த்து பம்பாயில் நடந்த ஆர்ப்பாட்டம்**



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com


# இதுதான் இன்றைய இந்தியா





இதோ இந்தப் படத்தில் நாம் காண்பது அகதிகள் குடியிருப்பல்ல; முதல்வர் கருணாநிதியின் தொகுதியான சென்னை - சேப்பாக்கத்திலுள்ள இந்திரா காந்தி நகரில் வசித்து வரும் அடித்தட்டு மக்களுக்கு தமிழக அரசு கட்டிக் கொடுத்திருக்கும் தீப்பற்றாத 'வீடுகள்' இவை. சுற்றுச் சுவர் எழுப்பாமல், அடித்தளமும், தரையும் அமைக்காமல், சாக்கடை ஆறாக ஓடும் கூவம் கரை மேட்டில் நாலு காலினை ஊன்றி, அதன் மீது ''ஆஸ்பெஸ்டாஸ்'' கூரைகளை மட்டும் போட்டுக் கொடுத்து விட்டு, இந்த திறந்த வெளிக் கொட்டகையை வீடு என்று சாதிக்கின்றனர். வேறு போக்கிடமும் இல்லாததால், பழைய சேலைகளையும், பிளாஸ்டிக் ஷீட்டுகளையும் சுற்றிக் கட்டி, இந்தத் தொழுவத்தில் வசித்து வருகின்றனர் அப்பகுதி மக்கள்.

வீட்டின் லட்சணமே இதுதான் என்றால், பிற அடிப்படை வசதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பொதுக் கழிப்பிடம் கூட கட்டித் தராமல், ''சுலாப் இண்டர்நேஷனல்'' என்ற தனியார் நிறுவனம் கட்டணக் கழிப்பிடம் கட்டிக் கொள்ளையடிக்க அனுமதித்து விட்டது தி.மு.க. அரசு.

வீடு கட்டித் தர அரசு ஒதுக்கிய பணத்தில் பாதியைச் சுருட்டிக் கொண்ட தி.மு.க. ஆதரவு காண்டிராக்டுகாரர்களைத் தட்டிக் கேட்டவர்களை, போலீசு இழுத்துச் சென்று முட்டியைப் பெயர்த்தது. இந்த அநியாயத்தையும், குறைகளையும் சென்னை மாவட்ட ஆட்சியாளராக இருந்த சபிதாவிடம் கூறிய பொழுது, அவர் இறுமாப்புடன், ''உங்களுக்குச் சோறு போட்டால் பிரியாணி கேட்கிறீர்களே'' என அவமானப்படுத்தியுள்ளார். கருணாநிதியோ, ''தீப்பிடிக்காத கூரை வேண்டுமெனக் கேட்டீர்கள்; அதைப் போட்டுக் கொடுத்துவிட்டேன்'' என அலட்சியமாக பதில் அளித்துள்ளார்.



இதோ இந்தக் காவல் கோபுரம் தீவிரவாதிகளையோ அல்லது கடத்தல்காரர்களையோ பிடிப்பதற்கு அமைக்கப்பட்டதல்ல. சென்னை வேளச்சேரியிலும், அதற்கு அருகாமையிலுள்ள பகுதிகளிலும் குப்பைகளை யாரும் வெளியே கொட்டி அசுத்தப்படுத்தி விடாதபடி கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டதுதான் இக்கோபுரம். சென்னை மாநகராட்சிக்கு அப்படியென்ன தாளமுடியாத அக்கறை என வியக்கிறீர்களா? கலைஞரின் வாரிசும் சென்னை நகர மேயருமான ஸ்டாலின் வசிக்கும் பகுதி அது. லாட்டரி அடித்தது போல, அந்தப் பகுதி மக்களே வாய் பிளந்து நிற்கும் படி, ''24 மணி நேர குடிநீர் வசதி, குண்டோ குழியோ குப்பையோ இல்லாத சாலை'' என அரசும், மாநகராட்சியும் போட்டி போட்டுக் கொண்டு சேவை செய்கின்றன.

சென்னையை சிங்காரமாக்குகிறேன் எனக் கூவிக் கொண்டு, மேட்டுக்குடி கும்பலும், அதிகார வர்க்க ஒட்டுண்ணிக் கும்பலும் வசிக்கும் பகுதி மக்களின் வரிப் பணத்தில் மினுக்கித் திரிவது ஒருபுறம்; ''அந்த வாழ்வுரிமை எங்களுக்கு இல்லையா?'' எனக் கேட்கும் அடித்தட்டு மக்கள் அடித்துத் துரத்தி அவமானப்படுத்தப்படுவது மறுபுறம். இதை இன்னுமா மௌனமாய்ச் சகித்து வாழ்வது?